# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2021

www.tnpscthervupettagam.com








SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 9
தமிழ்நாடு செய்திகள் ........ 20
தமிழ்நாட்டில் குழந்தைகளுக்குத் தாய் பாலூட்டல் மீதான கவனம் – 2020 ஆம் ஆண்டின் அறிக்கை ........ 20
தமிழ்நாட்டின் 38வது மாவட்டம் ........ 20
காவிரி-வைகை-குண்டாறு நதிகள் இணைப்பு ........ 21
விண்வெளியில் கன சதுரங்கள் ........ 21
தமிழ்நாடு புற்றுநோய் பதிவுத் திட்டம் ........ 22
மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி ........ 22
தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவர் ........ 23
காவிரியின் நீர்ப்பாசன அமைப்பை நவீனப்படுத்துதல் மற்றும் மீட்டெடுத்தல் ........ 23
பல்லுயிர் சூழல் பாரம்பரிய மண்டலங்கள் ........ 23
வெள்ளத்தைத் தடுக்கும் திட்டம் ........ 24
நம்ம திருவண்ணாமலை செயலி ........ 24
பழைய சோறு ........ 25
PMAY விருது ........ 25
பி எச் பாண்டியன் நினைவு மணிமண்டபம் ........ 26
A மாதவன் ........ 26
வேலைவாய்ப்பின்மை விகிதம் ........ 27
மாணவர்களுக்கு இலவச இணைய இணைப்பு (டேட்டா) ........ 28
தமிழ்நாட்டில் மழைப் பொழிவு ........ 28
தமிழ்நாடு மாநில விருதுகள் ........ 28
தொல்லியல் அகழாய்வுகள் ........ 30
மருத்துவர் "சாந்தா" மறைவு ........ 31
தமிழ்நாட்டில் கோவிட் தடுப்பூசி முகாம் ........ 31
தமிழ்நாட்டு வாக்காளர்கள் ........ 32
தமிழ்நாடு சட்டமன்றத்தில் உருவப் படங்கள் ........ 32
சாதிவாரியான கணக்கெடுப்பு - குலசேகரன் ஆணையம் ........ 33
ஹன்ஸ்ராஜ் வர்மா குழு ........ 35
தேசியச் செய்திகள் ........ 36
இந்த ஆண்டின் விஞ்ஞானி விருது ........ 36
ஜம்மு காஷ்மீர் மாவட்ட வளர்ச்சி ஆணையத் தேர்தல் ........ 36
கோவிட்-19 தடுப்பூசி சோதனைப் பயிற்சி ........ 36
பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா விருதுகள் ........ 37
டிஜிட்டல் இந்தியா விருதுகளின் 6வது பதிப்பு 2020 ........ 37
நாகாலாந்து - அமைதி குலைந்த பகுதி ........ 38
ஆர் பி திவாரி குழு ........ 39
ராம்கோபால் ராவ் குழு ........ 40
விஸ்டாடோம் சுற்றுலா ரயில் பெட்டிகள் ........ 40

உலகளாவிய பிரவசி ரிஷ்டா தளம் மற்றும் கைபேசி செயலி ..... 41
குஜராத்தில் உள்ள ராஜ்கோட்டில் எய்ம்ஸ் ..... 41
லைட் ஹவுஸ் (ஒளிரும் வீடு) திட்டங்கள் ..... 42
சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருதுகள் 2020 - 16வது பதிப்பு ..... 42
இந்தியாவில் அவசர காலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் ..... 43
தான்சேன் சம்மான் ..... 43
மனித உரிமைகள் பிரிவு ..... 44
விக்ரம் – 1 ..... 44
லடாக்கில் வானிலை ஆய்வு மையம் ..... 45
சாகர்மாலா கடல் விமான சேவைத் திட்டம் ..... 45
கொச்சி-மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் ..... 46
தில்லி தமிழ் அகாடமி ..... 47
தேசிய அளவியல் கருத்தரங்கம் 2021 ..... 47
வேளாண் -ஹாக்கத்தான் 2020 ..... 47
4வது உலகளாவிய ஆயுர்வேத திருவிழா ..... 47
மாநிலங்களவை - குறைந்த எண்ணிக்கையிலான அமர்வுகள் ..... 48
உலகின் நீளமான இரயில் நிலைய நடைமேடை ..... 49
தாதா சாஹிப் பால்கே தென்னக விருதுகள் 2020 ..... 49
அண்டார்டிகாவிற்கு 40வது அறிவியல் பயணம் ..... 50
மிதக்கும் சூரிய ஒளி ஆற்றல் திட்டம் ..... 51
மத்திய எழில்முற்றத் திட்டம் ..... 51
வரைவு ஆர்க்டிக் கொள்கை ..... 52
மேற்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடம் ..... 52
செங்குத்து மற்றும் கிடைமட்ட இடஒதுக்கீடுகள் ..... 53
ராஸ்திரிய காமதேனு ஆயோக் ..... 54
இந்தியத் தர நிர்ணய முகமை (BIS) ..... 54
இந்தியாவின் நீள் வெட்டு ரீதியிலான வயது முதிர்ச்சி தொடர்பான ஆய்வு ..... 55
EDUCON 2020 ..... 56
16வது பிரவசி பாரதிய திவாஸ் (PBD) ..... 56
தொற்றுநோய் எதிர்கொள்தலுக்கான புத்தாக்கக் கூட்டிணைவு ஆய்வகம் ..... 56
NFHS 5 கண்டுபிடிப்புகள் ..... 57
AGMUT பிரிவில் ஜம்மு-காஷ்மீர் ..... 58
குடிமக்களை மையமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் ..... 59
NCAVES இந்தியா மன்றம் 2021 ..... 59
இரயில்வேயின் அதிகபட்ச வேகம் ..... 60
2021 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினர் ..... 61
இந்தியாவின் கோவிட் – 19 தடுப்பூசி இயக்கம் ..... 61
தேசிய இளைஞர் நாடாளுமன்றம் ..... 62
அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள் (ATL) ..... 63
குடியரசு தின சிறப்பு விருந்தினர் 2021 ..... 63
பாரம்பரிய பாதுகாப்புக் குழு ..... 63
அனைத்துப் பெண்கள் விமான ஓட்டுனர் குழு ..... 63

காயகல்ப் விருதுகள் 2019-20 ........ 64
30வது தேசிய ஆற்றல் பாதுகாப்பு விருதுகள் 2020 ........ 65
பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 3.0 ........ 65
இந்திய உணவுக் கழகம் ........ 66
ஸ்காச் சவால் விருது ........ 66
பிராரம்பாஹ் – ஸ்டார்ட் அப் இந்தியா சர்வதேச மாநாடு 2021 ........ 66
இந்தியாவில் எத்தனால் கலப்பு ........ 67
இந்தியாவின் முதல் தீயணைப்புப் பூங்கா ........ 68
இந்திய வானிலை ஆய்வுத் துறை ........ 68
சாக்சம் விழிப்புணர்வு பிரச்சாரம் ........ 68
இந்தியாவின் முதலாவது ”தொழிலாளர் இயக்க அருங்காட்சியகம்” ........ 69
குடியரசு தின அணி வகுப்பு 2021 ........ 69
மத்தியத் தத்தெடுப்பு வள ஆணையம் ........ 69
ஸ்ரீ சோம்நாத் ஆலய அறக்கட்டளை ........ 70
பராக்கிராம் திவாஸ் ........ 71
குளிர்கால மலையேற்றம் ........ 71
தேசியப் பேரிடர் மீட்புப் படை (NDRF – National Disaster Responsive Force) ........ 71
இந்தியாவின் முதலாவது வாடகை விமானம் ........ 72
ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ........ 72
குச்சி காளான் ........ 73
இந்திய புத்தாக்கக் குறியீடு 2020 ........ 73
கேள்வி நேரம் ........ 74
STARStreak வான் பாதுகாப்பு அமைப்பு ........ 74
15வது இந்தியா டிஜிட்டல் உச்சி மாநாடு ........ 75
IFFI திரைப்பட விழா ........ 75
குடிமக்களை மையப்படுத்திய சீர்திருத்தங்கள் ........ 76
ஆதார் சீராய்வு மனுக்கள் ........ 76
கவச் பயிற்சி ........ 77
7வது MASCRADE ........ 77
ஷரம் சக்தி தளம் ........ 78
சார்டு ஹாவா நடவடிக்கை ........ 78
வாசுகி இரயில் ........ 78
அம்பெக்ஸ் (AMPHEX) – 21 ........ 78
ஜீவன் ரக்சா பதக் தொடர் விருதுகள் ........ 79
e-EPIC ........ 79
சிறைச்சாலை சுற்றுலா ........ 80
வீரதீர விருதுகள் 2021 ........ 81
பத்மா விருதுகள் 2021 ........ 81
பாரத் பர்வ் 2021 ........ 82
சர்வதேசச் செய்திகள் ........ 83
அண்டார்டிகாவில் கோவிட்-19 ........ 83
மிஷன் சாகர் III ........ 83

ஐந்து கண்கள் வலைப்பின்னல் அமைப்பு ........ 83
நிரந்தரமற்ற UNSC உறுப்பினர் ........ 84
GAVI வாரியம் ........ 85
எல்லைகலைக் கடந்த நிருபர்கள் ........ 85
ஜஎன்எஸ் சிந்துவீர் ........ 86
கோவிட் தடுப்பு மருந்து அவசரக் காலப் பயன்பாடு ........ 86
ஐக்கிய ராஜ்ஜியத்தின் புத்தாண்டு கௌரவப் பட்டியல் ........ 87
சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையம் ........ 87
அணுசக்தி தகவல் பரிமாற்றம் ........ 87
கோவிட் செயலி ........ 88
4 ஆசியத் தேயிலை அறுவடைத் தளங்கள் ........ 88
கடல்சார் ஒத்துழைப்பு ........ 89
டாம்பன் வரி ........ 89
மலாலா யூசுப்சாய் சட்டம் ........ 89
மைத்ரி சேது பாலம் ........ 89
ஆசியாவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் கூட்டாண்மை ........ 90
திடீர் வெள்ளத்திற்கான  வழிகாட்டுச் சேவைகள் ........ 90
கடல் இறக்கையுடன் கூடிய  ஆளில்லா விமானம் ........ 90
அமெரிக்கப் பாராளுமன்றத்தில் கலவரம் ........ 91
அடுத்த அமெரிக்க அதிபர் ........ 91
உணவு விலைக் குறியீடு ........ 92
ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு ........ 92
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (UNSC) தீவிரவாத எதிர்ப்புக் குழு ........ 93
VOC-202012/01 ........ 93
தெற்காசிய எரிசக்தி குழு ........ 94
2020 ஆம் ஆண்டில் உலகின் பெரும் பணக்காரர் ........ 94
தெற்காசியா பலதரப்பு சந்திப்பு ........ 94
எச்-1பி நுழைவு இசைவு விதிகள் ........ 95
'கொள்ளை நோய்க்குப் பிந்தைய உலகில் இந்திய நகரங்கள்' அறிக்கை ........ 95
எபோலா தடுப்பூசியின் இருப்பு ........ 95
கடல் கண்காணிப்பு – 21 (SPR Vigil) ........ 95
ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடு ........ 96
நாட்டினால் ஆதரிக்கப்படும் தீவிரவாதம் ........ 97
டிஜிட்டல் மதிப்பீட்டுத் தரவரிசையின் 3வது பதிப்பு – 2020 ........ 98
டிரம்ப் மீதான பதவி நீக்கச் செயல்முறை ........ 98
பாலஸ்தீன தேசத்தின் தேர்தல்கள் ........ 99
2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச இடம்பெயர்வு சிறப்பம்சங்கள் ........ 100
உலக சுகாதார அமைப்பின் (WHO) நிர்வாக வாரியத்தின் 148வது அமர்வு ........ 101
உலகளாவிய பிரிட்டன், உலகளாவிய தரகர் ........ 101
பாலைவனப் போர் வீரன் – 21 பயிற்சி ........ 101
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் (UNGA) வாக்களிக்கும் உரிமை ........ 101
தடையற்ற வான்வெளி ஒப்பந்தம் (OST) ........ 102

D10 நாடுகள் ............ 102
டிரன்ஹேட்டா ............ 103
தாரி சூ நதி ............ 103
மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ அடிப்படையிலான கோவிட்-19 சோதனை ............ 104
டாவோஸ் கொள்கை உச்சி மாநாடு ............ 104
பயங்கரவாதத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் ............ 105
உலகளாவிய தாக்குதல் திறன் குறியீடு ............ 105
வீட்டிலிருந்து பணி செய்தல் – திரைமறைவிலிருந்து நாகரீகமான பணிக்கு ............ 106
அமெரிக்காவின் புதிய அதிபர் - ஜோ பைடன் ............ 106
15 நிர்வாக ஆணைகள் – அமெரிக்கா ............ 107
உலகின் மிகப் பழமையான குகை ஓவியம் ............ 108
சல்வாடோர் முண்டி ஓவியம் ............ 108
உலக அபாயங்கள் அறிக்கை 2021 ............ 109
உணவுப் பாதுகாப்பு அறிக்கை ............ 109
அணு ஆயுதங்களின் தடை மீதான ஒப்பந்தம் ............ 110
ஆசிய ஒத்துழைப்புக் கருத்தரங்கு ............ 111
அமைதி மற்றும் சகிப்புத் தன்மை கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான தீர்மானம் ............ 111
புதிய START ஒப்பந்தம் ............ 112
பொருளாதாரச் செய்திகள் ............ 112
எளிதில் தொழில் தொடங்குதல் மீதான சீர்திருத்தங்கள் ............ 112
இந்தியாவின் முதல் சமூகத் தாக்கப் பத்திரங்கள் ............ 113
ரிசர்வ் வங்கியின் போக்கு மற்றும் செயல்பாட்டு அறிக்கை, 2020 ............ 113
BFSI மூவர்ஸ் மற்றும் ஷேக்கர்ஸ் 2020 ............ 114
ஆகாஷ் ஏவுகணை ஏற்றுமதி ............ 114
டிஜிட்டல் பணவழங்கீட்டுக் குறியீடு ............ 115
நிலையான பயணக் காப்பீட்டுக் கொள்கை ............ 115
வியட்நாமுக்கான இந்தியாவின் அரிசி ஏற்றுமதி ............ 115
TRIFOOD பூங்காக்கள் ............ 116
சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) வசூல் ............ 116
கொடுப்பனவுகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ............ 116
சட்டப்பூர்வ நிறுவன அடையாளங் காட்டிகள் ............ 117
2020-21 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ............ 117
ஒற்றைச் சாளர அடிப்படையில் அனுமதி வழங்கும் முறை ............ 118
இந்தியாவின் 7வது வர்த்தக் கொள்கை மறு ஆய்வு ............ 119
நிதியியல் நிலைப்புத் தன்மை குறித்த அறிக்கை (FSR) ............ 119
புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவுத் தளம் ............ 119
பெருநிறுவன சமூகப் பொறுப்பு ............ 120
இரும்புத் தாதுக் கொள்கை ............ 120
நொடித்தல் மற்றும் திவால் குறியீட்டின் பிரிவு 32A ............ 120
தேசிய முகமில்லா அபராதத் திட்டம் ............ 121
வங்கியியல் அல்லாத நிதியியல் நிறுவனங்களின் (NBFC) மீதான ஒழுங்குமுறை ............ 121
மத்திய நிதிநிலை அறிக்கை கைபேசிச் செயலி ............ 121

2020 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடு (FDI) ........ 122
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 122
டிஜிட்டல் பெருங்கடல் ........ 122
ருத்தினீயம் 106 வில்லை ........ 122
சஹாயக்-என்.ஜி ........ 123
சார்ஸ் Cov-2ன் ஐக்கியப் பேரரசு திரிபு ........ 123
பாட்னா வானிலை ஆய்வகம் ........ 124
மரத்தாலான செயற்கைக்கோள்கள் ........ 124
மாறுபக்க கொழுப்பு அளவுகள் ........ 124
வளியடுக்கு வெப்பமயமாதல் ........ 125
IN வரம்பு எல்லை ........ 126
சகுனா நெல் (அரிசி) தொழில்நுட்ப முறை (SRT) ........ 127
காதி பிராக்ரித்திக் சாயம் ........ 127
சாகர் அன்வேஷிகா ........ 128
ஹீலியோ இயற்பியல் திட்டங்கள் ........ 128
எச் 3 ராக்கெட் ........ 129
அஸ்மி ........ 129
ரக்சிதா அவசர ஊர்தி ........ 130
உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரத்த ஓட்ட மடைமாற்றுக் குழாய் ........ 130
அபெல் 370 விண்மீன் திரள்கள் ........ 131
குவாண்டம் கணினியியல் பயன்பாடுகள் ஆய்வகம் ........ 131
வேர் மண்டல ஈரப்பதம் ........ 131
லாங்ஆப்ஸ் திட்டம் ........ 132
திடீர் இடையடுக்கு மண்டல வெப்பமாதல் ........ 132
திறன்மிகு வான்வெளி எதிர்ப்பு ஆயுதம் (SAAW) ........ 133
NGC 2808 ........ 133
பார்க்கர் சூரிய ஒளி ஆய்வுத் திட்டம் ........ 134
பிரபஞ்சத்தின் ஓசை ........ 134
டைட்டனில் கிராகன் மரே ........ 135
மீர்கட் ரேடியோ அலை தொலைநோக்கி ........ 136
நீலநிற தாரைக் கீற்று மின்னல் ........ 136
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 137
இந்தியாவின் மாநில அளவிலான நோய்ப் பிரச்சினை முன்னெடுப்பு ........ 137
சர்வதேச நீலக் கொடிகள் ........ 137
பனிப் பேரூழிக் கால காண்டாமிருகம் ........ 138
மதிகெட்டான் சோலை தேசியப் பூங்கா ........ 138
கோலார் இலை-மூக்கு வௌவால் ........ 139
2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை ........ 139
மனித வனவிலங்கு மோதலைச் சமாளிப்பதற்கான ஆலோசனைக் குழு ........ 140
அண்டார்டிக் ஓசோன் துளை ........ 140
இந்தியாவில் பறவைக் காய்ச்சல் திடீர்ப் பெருக்கம் ........ 141
ஆசிய நீர்ப்பறவை கணக்கெடுப்பு ........ 142

கராகல் (காட்டுப்பூனை)....142
"ஒரே கோள்" மாநாடு....143
மேலாண்மை செயல்திறன் மதிப்பீடு....143
பூச்சிகளின் இறுதிநிலை அழிவுகள்....144
ஏற்றுக் கொள்ளல் இடைவெளி அறிக்கை 2020....145
மிகப்பெரிய பெரும் பசுமைச் சுவர் முன்னெடுப்பு....145
மின்னணுக் கழிவு அறிக்கை....146
மிகப்பெரிய 'மிதக்கும்' சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்....146
இந்தியாவில் முதல் தலைமுறை எத்தனால் உற்பத்தி....147
பங்கப்பூர் ஓநாய் சரணாலயம்....147
இயற்கைக்கான பன்னாட்டு நிதியத்தின் அறிக்கை....148
புதிய எறும்பு இனங்கள்....148
மாநிலச் செய்திகள்....149
புதிய அனுபவம் மண்டபம்....149
அருணாச்சலப் பிரதேசத்தில் வனேடியம்....149
கமலம் பழம்....150
ராட்டில் நீர் மின் திட்டம்....151
மாநில நிறுவன தினம்....151
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்....152
பாவனா காந்த்....152
நிலக்கரித் துறை அமைச்சரின் விருது....153
மைக்கேல் மற்றும் ஷெய்லா ஹெல்டு பரிசு 2021....153
பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால புரஸ்கர் விருது 2021....154
விளையாட்டுச் செய்திகள்....154
சர்வதேசக் கிரிக்கெட் மன்றத்தின் (ICC) தசாப்தத்திற்கான கிரிக்கெட் மீதான உயர்நிலை விருது....154
ஏகலைவா புரஸ்கர்....155
உலகக் கால்பந்து விருதுகள்....155
டி நடராஜன்....156
முதலாவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள்....156
கிறிஸ்டியானோ ரொனால்டோ....157
முக்கிய தினங்கள்....158
உலக பார்வையற்றோர் எழுத்து முறை (பிரெய்லி) தினம் – ஜனவரி 04....158
போரினால் ஆதரவற்றோர் ஆனவர்களுக்கான உலக தினம் – ஜனவரி 06....158
மராத்தி பத்திரிகை நாள் - ஜனவரி 6....159
உலக இந்தி தினம் - ஜனவரி 10....159
தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம்....160
தேசிய இளைஞர் தினம் – ஜனவரி 12....161
முன்னாள் ஆயுதப் படை வீரர்கள் தினம் – ஜனவரி 14....161
முதலாவது தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் 2021....162
தேசிய இளைஞர் திருவிழா....162
இராணுவ தினம் – ஜனவரி 15....163
43 வது கொக்போரோக் நாள் - ஜனவரி 19....164

தேசியப் பெண் குழந்தைகள் தினம் – ஜனவரி 24 ........ 164
சர்வதேசக் கல்வி தினம் – ஜனவரி 24 ........ 165
தேசிய வாக்காளர்கள் தினம் – ஜனவரி 25 ........ 165
தேசிய சுற்றுலா தினம் – ஜனவரி 25 ........ 166
சர்வதேச சுங்க தினம் – ஜனவரி 26 ........ 166
71வது உத்தரப் பிரதேச நாள் - ஜனவரி 24 ........ 166
உலக இனப்படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27 ........ 167
உலக தொழு நோய் தினம் – ஜனவரி 31 ........ 168

# TNPSC துளிகள்

- 7வது உலகத் தமிழ்ப் பொருளாதாரக் கருத்தரங்கு மற்றும் மெய்நிகர் உலகப் பொருளாதார மாநாடு 2020 ஆகியவை காணொலி வாயிலாக புதுச்சேரி முதல்வரான நாராயண சுவாமி அவர்களால் துவக்கி வைக்கப் பட்டது.
  - இது உலகத் தமிழர் பொருளாதார அமைப்பு மற்றும் மதராஸ் மேம்பாட்டுச் சமூகம் ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்பட்டன.
- இந்தியாவின் இளைய கிராண்ட் மாஸ்டர்களான நிகால் சரின், D குகேஷ் மற்றும் பெண் சர்வதேச மாஸ்டரான ரக்சிதா ரவி ஆகியோர் ஒவ்வொருவரும் FIDE ஆன்லைன் உலகக் கேடட்ஸ் மற்றும் இளைஞர் விரைவு செஸ் சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கத்தை வென்று தங்களது வெற்றியைப் பதிவு செய்துள்ளனர்.
- உலகளாவிய குடும்ப தினம் அமெரிக்காவில் ஒவ்வொரு வருடத்திலும் ஜனவரி 1ம் தேதியன்று ஒரு உலகளாவிய அமைதி மற்றும் பகிர்வு தினமாக கொண்டாடப் படுகிறது.
- ஆந்திர மாநில அரசு 'பெடலண்டரிகி இல்லு' (அனைத்து ஏழைகளுக்கும் வீடுகள்) என்ற ஒரு திட்டத்தின் கீழ் வீட்டு மனை விநியோகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- சீரம் இந்தியா நிறுவனமானது குழந்தைகளுக்காக வேண்டி உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட நாட்டின் முதல் நிமோனியா தடுப்பூசியான நிமோசில் (PNEUMOSIL) என்ற ஒரு தடுப்பூசியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய எண்ணெய்க் கழகம் ஆனது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் விசையாழிகளுக்காக வேண்டி (turbines) நாட்டின் முதல் தொலைநிலைக் கண்காணிப்பு முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்தத் திட்டத்தை BHEL மற்றும் ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான BGGTS (BHEL-GE Gas Turbine Services) செயல்படுத்துகிறது.
- நாட்டின் முதல் எத்தனால் ஆலையை பொது-தனியார் கூட்டின் கீழ் தனது மாநிலத்தில் அமைக்கும் ஒரு ஒப்பந்தத்தில் சத்தீஸ்கர் அரசானது கையெழுத்து இட்டு உள்ளது.
- மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் உயிரினங்களுக்கான இந்தியாவின் முதல் பூங்கா (Pollinator park) ஆனது உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மாவட்டத்தில் உள்ள ஹால்டுவானி என்ற இடத்தில் நிறுவப் பட்டுள்ளது.
  - மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் உயிரினங்களில் தேனீக்கள், பறவைகள், பட்டாம்பூச்சிகள், அந்துப் பூச்சிகள், வண்டுகள், குளவிகள், வெளவால்கள் மற்றும் சிறிய பாலூட்டிகள் ஆகியவை அடங்கும்.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று ஐரோப்பிய ஒன்றியம்-இங்கிலாந்து வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தமான பிரெக்ஸிட் வர்த்தக ஒப்பந்தத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் கையெழுத்திட்டனர்.
- விண்வெளியை அமைதியாகப் பயன்படுத்த இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் விதமாக இந்தியாவிற்கும் பூடானிற்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - வெளிப்புற விண்வெளி ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் சபை 1963 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது.
- ஆஸ்திரேலிய அரசானது அதன் பழங்குடி மக்களைக் கௌரவிப்பதற்காக வேண்டி அதன் தேசிய கீதத்தைத் திருத்துகிறது.

- 2021 ஆம் ஆண்டில் எஸ்தோனியா, பராகுவே மற்றும் டொமினியன் குடியரசு உள்ளிட்ட மூன்று நாடுகளில் இந்தியத் தூதரக அலுவலங்களைத் தொடங்க மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மீது 8.5% என்ற அளவிலான வட்டி விகிதத்தை மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் அறிவித்து உள்ளது.
- சமீபத்தில் அமெரிக்க வெள்ளை மாளிகையானது 2026 ஆம் ஆண்டிற்குள் சந்திரனில் முதலாவது அணு உலையை அமைப்பதற்கான ஒரு அறிவிக்கையை வெளியிட்டு உள்ளது.
- 14வது வார கர்ப்ப காலம் வரை கருக்கலைப்புகளை மேற்கொள்வதை அர்ஜென்டினா நாடு சட்டப் பூர்வமாக்கியுள்ளது.
- இரயில்வே வாரியத்தின் தலைவரான வி.கே. யாதவ் என்பவருக்கு சிறந்த பொறியாளர் விருது - 2020 என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
  - இந்திய ரயில்வேயில் நவீனமயமாக்கல் மற்றும் சீர்திருத்தங்களுக்கு அவர் செய்த சிறப்பான பங்களிப்பிற்காக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இந்த விருதானது அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் அணிவகுப்புக் காட்சியகமானது 2021 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பிற்காக தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
  - இந்த அணிவகுப்புக் காட்சியகமானது சத்தீஸ்கரின் பழங்குடியினப் பகுதிகளில் பயன்படுத்தப் படும் நாட்டுப்புறக் கலைகளை அதன் கலாச்சாரச் சூழலுடன் காண்பிக்க உள்ளது.
- சீனாவின் தொழிலதிபரான ஜாங் ஷான்ஷன் என்பவர் முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி ஆசியாவின் பெரிய பணக்காரராக உருவெடுத்துள்ளார்.
- கிழக்கு இரயில்வேயின் முன்னாள் பொது மேலாளர் சுனீத் சர்மா அவர்கள், புதிய இரயில்வே வாரியத் தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய உருக்கு ஆணையத்தின் (Steel Authority of India Limited) புதிய தலைவராக சோமா மண்டல் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.
  - இவர் இந்திய உருக்கு ஆணையத்தின் முதல் பெண் தலைவராவார்.
- கிசான் கல்யாண் என்ற ஒரு திட்டத்தை உத்தரப் பிரதேச அரசானது தொடங்க உள்ளது.
  - உத்தரப் பிரதேச மாநிலத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கியுள்ள பகுதிகளில் உள்ள உழவர்களின் வருமானத்தை இரட்டிப்பாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பஞ்சாப் அமைச்சரவையானது சமீபத்தில் பஞ்சாப் மாநில தரவுக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
  - ஒரு விரிவான தரவுக் கொள்கையை வகுத்த இந்தியாவின் முதல் மாநிலமாக இது திகழ்கிறது.
- கே.சிவனின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிக்க (2022 ஜனவரி 14 வரை) அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
  - இவர் தற்போதைய விண்வெளித் துறையின் செயலாளர் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் பதவி வழித் தலைவராவார்.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அதன் 63வது ஆண்டு தொடக்க தினத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று அனுசரித்தது.
  - இது 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- கோவாவின் 14 வயதான லியோன் மென்டோன்கா இத்தாலியில் நடைபெற்ற வெர்கனி கோப்பையில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியாவின் 67வது செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
  - தமிழ்நாட்டின் ஜி.ஆகாஷுக்குப் பிறகு இந்த ஆண்டு கிராண்ட் மாஸ்டரான இரண்டாவது இந்தியர் லியோன் ஆவார்.
- இந்திய உள்துறை அமைச்சர் தேசியக் காவல் கே-9 என்ற இதழைப் புது தில்லியில் வெளியிட்டார்.
  - இது கே 9 என்ற காவல் சேவைகள், காவல் நாய்கள் போன்றவை பற்றிய நாட்டின் முதல் மாதிரியான வெளியீடாகும்.
- கஜகஸ்தான் நாடு சமீபத்தில் மரண தண்டனையை ரத்து செய்துள்ளது.
- தூர்தர்ஷன் தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலியில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது.
- குறைந்த விலை கொண்ட மற்றும் எளிதில் கொண்டு செல்லக் கூடிய ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ராஜெனெகா கோவிட் - 19 தடுப்பூசியை வெளியிட்ட உலகின் முதல் நாடு பிரிட்டன் ஆகும்.
- 2017 ஆம் ஆண்டின் உலக அழகிப் போட்டியின் வெற்றியாளரான மனுஷி சில்லர், பாலின அடிப்படையிலான வன்முறைகள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக #OrangeTheWorld என்ற உலகளாவிய முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- புதுச்சேரி அரசானது புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்காக அங்கு குடும்ப அட்டை வைத்துள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.200 பொங்கல் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது காதி இந்தியாவின் அதிகாரப் பூர்வ மின் வர்த்தகத் தளமான "ekhadindia.com" என்ற தளத்தை ஆரம்பித்து உள்ளது.
- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பாட்டியாலாவில் உள்ள வடக்கு மண்டல கலாச்சார மையம் மற்றும் ஜம்மு காஷ்மீர் நிறுவனம் ஆகியவை இணைந்து ஜம்மு காஷ்மீர் தேசிய நாட்டுப்புற நடனத் திருவிழாவை நடத்தின.
- 2021 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின அணிவகுப்பின் சிறப்பு விருந்தினராக இந்தியாவிற்கு வரவிருந்த இங்கிலாந்துப் பிரதமர் போரிஸ் ஜான்சன் அவர்கள் தனது பயணத்தை ரத்து செய்து உள்ளார்.
- மதச் சுதந்திர மசோதா-2020 என்ற ஒரு மசோதாவை ஓர் அவசர சட்டமாக பிரகடனப் படுத்த வேண்டி மத்தியப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - முன்னதாக, உத்தரப் பிரதேசமும் இமாச்சலப் பிரதேசமும் இதே போன்ற சட்டங்களை இயற்றியுள்ளன.
- தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் தைப்பூசம் நாளானது ஒரு மாநில அரசுப் பொது விடுமுறையாக அளிக்கப் படும் என்று அறிவித்து உள்ளார்.
- இந்திய அரசு, மேற்கு வங்க மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 105 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான திட்டம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- ❖ சமீபத்தில் தில்லி அரசானது தேசியத் தலைநகரப் பகுதிகளில் பள்ளிக் குழந்தைகள் சுமந்து செல்லும் புத்தகப் பைகளின் எடைகளைக் குறைப்பதற்காக வேண்டி சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
  - ○ அதன்படி ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகளின் புத்தகப் பைகளின் எடையானது பள்ளிக் குழந்தைகளின் உடல் எடையில் 10% அளவிற்கும் அதிகமாக இருக்கக் கூடாது.
- ❖ இந்தியாவின் 51வது சர்வதேசத் திரைப்படத் திருவிழாவின் சர்வதேசத் தலைமை நடுவராக அர்ஜென்டினாவைச் சேர்ந்த பாப்லோ சீசர் என்பவர் அறிவிக்கப் பட்டு உள்ளார்.
- ❖ சமீபத்தில் உலக வங்கியானது உலகப் பொருளாதார வாய்ப்புகள் என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
  - ○ இந்த அறிக்கையின்படி, இந்தியப் பொருளாதாரமானது 2020-21 ஆம் ஆண்டில் 9.6% என்ற அளவிற்குச் சரிவடைய இருக்கின்றது.
- ❖ மத்தியக் கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் மற்றும் மத்திய ஜவுளி மற்றும் பெண்கள் & குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சரான ஸ்மிரிதி இராணி ஆகியோர் ‘டாய்காத்தான் 2021’ (Toycathon - 2021) என்ற ஒரு நிகழ்வைத் தொடங்கி வைத்துள்ளனர்.
  - ○ இது உள்நாட்டு விளையாட்டுப் பொம்மைகளின் உற்பத்தியை ஊக்கப்படுத்த இருக்கின்றது.
- ❖ யுனிசெப் அமைப்பானது ஜனவரி 01 அன்று உலகில் 3,71,504 குழந்தைகள் பிறந்து உள்ளதாக அறிவித்துள்ளது.
  - ○ 59,995 குழந்தைப் பிறப்புகள் என்ற ஒரு எண்ணிக்கையுடன் இந்தியாவானது புத்தாண்டு அன்று உலகின் அதிக எண்ணிக்கையிலான குழந்தைப் பிறப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- ❖ மத்தியப் பெட்ரோலியத் துறை அமைச்சரான தர்மேந்திர பிரதான் அவர்கள் இந்தியாவின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான முதலாவது தகவல் பிரிவை குஜராத்தில் உள்ள சூரத்தில் திறந்து வைத்துள்ளார்.
  - ○ இது அந்நகரின் பல்வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஒடிசா மாநிலப் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவ இருக்கின்றது.
- ❖ ஆண்கள் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதல் பெண் நடுவர் என்ற பெருமையை ஆஸ்திரேலியாவின் கிளாரி போலோசக் பெற்றுள்ளார்.
  - ○ சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் தொடங்கும் ஆஸ்திரேலிய-இந்திய தொடரின் மூன்றாவது டெஸ்டில் நான்காவது நடுவராக (Fourth Umpire) அவர் பங்கேற்க உள்ளார்.
- ❖ லடாக் பிராந்தியத்தின் மொழி, நிலம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காக 10 பேர் கொண்ட ஒரு குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
  - ○ அரசாங்கத்தின் இக்குழுவிற்கு உள்துறை இணை அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி அவர்கள் தலைமை தாங்குவார்.
- ❖ தனது மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் தற்சார்படைய வேண்டி மத்தியப் பிரதேச மாநிலமானது 'Launch Pad Scheme' என்ற திட்டத்தை வகுத்துள்ளது.
- ❖ கடவுளின் பெயரைப் பயன்படுத்தி ஒரு பொருளை விளம்பரம் செய்வது மற்றும் அதில் தெய்வீக சக்தி இருப்பதாகக் கூறுவது சட்டவிரோதமானது என்று மும்பை உயர் நீதிமன்றம் சமீபத்தில் அறிவித்துள்ளது.

- பஞ்சாப் முதல்வரான அமரேந்திர சிங் அவர்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு இலவச மாதவிடாய்ச் சுகாதாரத் துணிகளை வழங்குவதற்காக ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
  - மேலும் அம்மாநிலத்தில் உள்ள குடிசைகளில் வாழ்பவர்களுக்கு சொத்துரிமை வழங்குவதற்காக பசீரா என்ற ஒரு திட்டத்தையும் அவர் தொடங்கி உள்ளார்.
- மத்தியப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு மத்திய நிதித்துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்ட மூன்றாவது மாநிலம் தெலுங்கானா ஆகும்.
- சமீபத்தில் பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவையானது ஜம்மு காஷ்மீரின் தொழிற்துறை மேம்பாட்டை ஊக்கப்படுத்துவதற்காக வேண்டி ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
  - இது அந்தத் திட்டத்திற்காக ரூ.28,400 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.
- பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பதற்காக, இதே வகையைச் சேர்ந்த ஒரு முதல் முயற்சியாக அசாம் மாநில அரசானது பள்ளிகளில் வகுப்புகளைப் புறக்கணிக்காமல் செல்லும் பெண் குழந்தைகள் ஒரு நாளைக்கு ரூ.100 ஊக்கத் தொகை பெறுவார்கள் என்று அறிவித்துள்ளது.
- ஜெர்மனியின் ஒரு புதிய சட்டத்தின்படி, 4 நிர்வாகிகள் மற்றும் அதற்கும் மேற்பட்ட நிர்வாகிகளைக் கொண்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் தங்களது நிர்வாகக் குழுவில் குறைந்தது 1 பெண் உறுப்பினரையாவது நியமிக்க வேண்டும்.
  - ஜெர்மனியில் பாலின இடைவெளியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல தன்னார்வ முயற்சிகள் தோல்வியடைந்ததை அடுத்து இந்தச் சட்டம் முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்தியாவின் தலைமைப் பயிற்சியாளரான ரவி சாஸ்திரி அவர்கள், "இந்தியாவின் 71 ஆண்டு கால டெஸ்ட் போட்டி : ஆஸ்திரேலியாவில் வெற்றிக்கான பயணம்" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
  - இந்தப் புத்தகமானது 1947/48 ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் இந்தியா மேற்கொண்ட முதல் 12 சுற்றுப் பயணங்களைப் பிரதிபலிக்கின்றது.
- சிறு நிதியியல் வங்கிக்கு மாறிய முதலாவது நகர்ப்புற கூட்டுறவு வங்கி சிவாலிக் மெர்க்கண்டைல் கூட்டுறவு வங்கி ஆகும்.
  - இது உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், தில்லி மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் செயல்படுகின்றது.
- திரிபுரா மாநில அமைச்சரவையானது 2018 ஆம் ஆண்டு மார்ச் வரை அரசியல் வன்முறைகளால் உயிரிழந்தவர்களின் நெருங்கிய மற்றும் அடுத்தக் கட்ட உறவினர்களுக்கு அரசு வேலை வழங்க முடிவு செய்துள்ளது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகமானது கடற்படைப் புத்தாக்கம் மற்றும் உள்நாட்டு மயமாக்கல் என்ற ஒரு அமைப்பைத் தொடங்கியுள்ளது.
- டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் நியூசிலாந்து அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.
  - நியூசிலாந்து அணியானது தரவரிசை வரலாற்றில் முதல் முறையாக இந்தச் சாதனையை அடைந்துள்ளது.
- 'Specified Skilled Worker' என்பது தொடர்பாக இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.

- இது இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு தொழிலாளர்கள் மற்றும் திறமையான தொழில்நுட்ப நிபுணர்களை அனுப்ப வழிவகை செய்யும்.

❖ சமூக ஊடக நிறுவனமான ட்விட்டர் நிறுவனமானது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் கணக்கை நிரந்தரமாக நிறுத்தி வைத்துள்ளது.

❖ வட கொரியத் தலைவர் கிம் ஜாங்-உன் சமீபத்தில் அமெரிக்காவை தனது நாட்டின் "மிகப்பெரிய எதிரி" என்று குறிப்பிட்டுள்ளார்.

❖ தெலுங்கானா உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக ஹிமா கோலி என்ற நீதிபதி பதவியேற்றுள்ளார்.

❖ ஆடை வடிவமைப்பாளரான சத்யா பால் தனது 79 வயதில் காலமானார்.

- அவர் இந்தியாவில் L'Affaire என்ற சேலைக் கடையின் முதல் பிரிவைத் தொடங்கினார்.

❖ பஞ்சாப் மாநிலமானது ஜனவரி மாதத்தை 'தீயன் டி லோஹ்ரி' என்ற திட்டமாக பெண் குழந்தைகளுக்கு அர்ப்பணிக்கிறது.

- லோஹ்ரி என்பது ஆண்டுதோறும் ஜனவரி 13 ஆம் தேதி கொண்டாடப்படும் வட இந்தியாவின் அறுவடைத் திருவிழாவாகும்.

❖ உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி ஆற்றல் உற்பத்தித் திட்டமானது மத்தியப் பிரதேசத்தில் பாயும் நர்மதை நதியின் ஓம்காரேஸ்வர் அணையில் கட்டமைக்கப்பட உள்ளது.

- இந்தத் திட்டத்திற்கு சர்வதேச நிதியியல் கழகம், உலக வங்கி மற்றும் மின் தொடரமைப்பு ஆகிய 3 அமைப்புகள் உதவி செய்யவுள்ளன.

❖ கர்நாடக மாநில முதல்வரான B.S. எடியூரப்பா அவர்கள் பெங்களூருவில் கிரிஷி சஞ்சீவினி வனம் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளார்.

- இது நீர், மண் போன்றவற்றை ஆய்வு செய்வதற்காக விவசாயத் துறையைச் சென்றடைவதற்காகவும் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு வேண்டி பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காகவும் தொடங்கப் பட்டுள்ளது.

❖ நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125வது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக பிரதமர் தலைமையிலான ஒரு உயர்நிலைக் குழுவானது அமைக்கப்பட்டுள்ளது.

- இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதி தொடங்கி 1 ஆண்டு கால அனுசரிப்பிற்கான செயல்பாடுகளை முடிவு செய்யும்.

❖ மிகவும் வயதான மற்றும் தற்பொழுது உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கும் ஒலிம்பிக் சாம்பியனான அக்னிஸ் கெலெட்டி என்பவர் தற்போது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 09 அன்று 100 வயதை எட்டினார்.

- இவர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் ஹங்கேரி அணிக்காக 10 பதக்கங்களை வென்றுள்ளார்.

❖ பிலோமெனா புயலானது ஸ்பெயின் நாட்டில் மிகக் கடுமையான பனிப் பொழிவை உருவாக்கியுள்ளது.

❖ ஸ்ரீவிஜயா விமானம் என்ற இந்தோனேஷியாவின் பயணிகள் விமானமானது ஜகார்த்தா பகுதியில் உள்ள கடலில் விழுந்து நொறுங்கியது.

- கடலில் விழுந்த இந்த போயிங் 737-500 வகை விமானமானது ஜகார்த்தாவிலிருந்து இந்தோனேஷியாவின் போர்னியோ தீவில் உள்ள போன்டியானாக் என்ற பகுதிக்குச் சென்றடைய வேண்டி பயணிக்க ஆரம்பித்தது.

- டிவிட்டர் (சுட்டுரை) நிறுவனமானது வன்முறை மேலும் ஏற்படும் என்ற ஒரு அச்சத்தின் காரணமாக அமெரிக்காவின் அதிபர் பதவியிலிருந்து வெளியேறும் டொனால்டு டிரம்பின் கணக்கை நிரந்தரமாக முடக்கியுள்ளது.
- விவசாயிகளின் போராட்டங்களை அரசாங்கம் கையாளுவதை விமர்சித்த உச்ச நீதிமன்றம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 12 அன்று மூன்று வேளாண் சட்டங்களையும் அமல்படுத்துவதை மறு அறிவிப்பு ஒன்றை அறிவிக்கும் வரை நிறுத்தி வைத்துள்ளது.
- 51வது சர்வதேச திரைப்பட விழாவில், வங்க தேசமானது கவனம் செலுத்தப் படும் ஒரு நாடாக இருக்கும்.
    - இது கோவாவில் நடத்தப் படும்.
- பிரேசிலுக்கு கோவாக்சின் மருந்தினை வழங்குவதற்காக பிரிசீசா மெடிகமெண்டோஸ் என்ற ஒரு நிறுவனத்துடன் (Precisa Medicamentos) பாரத் பயோடெக் நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.
- பயங்கரவாத அச்சுறுத்தலுக்குத் தீர்வு காண வேண்டி எட்டு அம்ச நிகழ்ச்சி நிரல் ஒன்றை வெளியுறவு அமைச்சரான ஜெய்சங்கர் முன்மொழிந்து உள்ளார்.
    - '1373 ஆம் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு 20 ஆண்டுகளுக்குப் பிறகு பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் சர்வதேச ஒத்துழைப்பு' குறித்த UNSC அமைப்பின் பொது விவாதத்தில் அவர் இதை முன்மொழிந்தார்.
- 10 பயிற்சி விமானங்கள் மற்றும் 83 தேஜஸ் இலகு ரக போர் விமானங்களை வாங்க மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
    - தேஜஸ் விமானமானது உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு மற்றும் தயாரிக்கப்பட்ட ஒரு நான்காம் தலைமுறை இலகு ரக போர் விமானமாகும்.
- இராணுவத் தளபதியான அபிலாஷ் டாமி அவர்கள் இந்தியக் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்றார்.
    - உலகையே தனியாகவும் மற்றும் பாய்மரப் படகில் உதவி எதுவுமின்றியும் சுற்றி வந்த முதலாவது இந்தியர் இவராவார்.
- சமீபத்தில் மத்திய அமைச்சரவையானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான இந்திய-ஐக்கிய அரபு அமீரகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- சமீபத்தில் மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது புதிய அயல்நாட்டு வர்த்தகக் கொள்கை 2021-26 என்ற கொள்கையை அறிவித்துள்ளது.
    - இது இந்தியாவை 2024 ஆம் ஆண்டில் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான பொருளாதார நாடாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "கிழக்கு நோக்கியப் பார்வை : சீனாவில் புத்தத் துறவிகள் மற்றும் புரட்சியாளர்கள்" என்பது ரொமிலா தாபர் அவர்களால் எழுதப்பட்ட ஒரு புதிய புத்தகமாகும்.
- இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையரான எஸ் ஒய் குரேஷி அவர்கள் "மக்கள்தொகை பற்றிய புதிர் : இந்தியாவில் இஸ்லாம், குடும்பக் கட்டுப்பாடு மற்றும் அது தொடர்பான அரசியல்" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- செர்ரி மலர்த் திருவிழாவின் 4வது பதிப்பானது மணிப்பூரில் உள்ள மாலோவில் காணொலி வாயிலாகத் தொடங்கி வைக்கப் பட்டது.
    - மணிப்பூர் மாநிலமானது இந்தத் திருவிழாவை 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வருகின்றது.
- பெண்கள் 2022 ஆம் ஆண்டிலிருந்து இராணுவ படைப் பிரிவில் விமானிகளாக சேர்க்கப் படவுள்ளனர்.

- தற்பொழுது வரை, பெண்கள் விமானப் படைப் பிரிவில் அலுவலகப் பணிகளையே (விமானி தவிர மற்ற பணிகள்) கவனித்து வந்தனர்.

❖ இந்திய இராணுவமானது "சுவிட்ச்" எனப்படும் அதிக உயர வகையிலான ஆளில்லா குட்டி விமானங்களைக் கொள்முதல் செய்வதற்காக "ஐடியாபோர்ஜ்" என்ற ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

❖ இந்தியா விடுதலையானதிலிருந்து தற்பொழுது வரலாற்றில் முதன்முறையாக, 2021-22 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது கோவிட்–19 நோய்த் தொற்றின் காரணமாக காகிதமற்ற முறையில் தயாரிக்கப்பட உள்ளது.

- பொதுவாக, நிதிநிலை அறிக்கையானது 100 பணியாளர்கள் ஏறத்தாழ 15 நாட்கள் ஒருங்கிணைந்து அச்சிடப்பட்டுத் தயாரிக்கப்படும்.

❖ பிரதமர் அவர்கள் சென்னையிலிருந்து குஜராத்தில் உள்ள கேவாடியாவிற்கு வாராந்திர இரயில் சேவை ஒன்றைத் தொடங்கி வைத்தார்.

- பசுமைக் கட்டமைப்புச் சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதலாவது இரயில் நிலையம் குஜராத்தில் உள்ள கேவாடியா இரயில் நிலையமாகும்.

❖ இந்தியாவின் முதலாவது வாக்காளரான ஷியாம் சரண் நேகி (103) அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 17 அன்று இமாச்சலப் பிரதேசத்தின் கின்னாவுர் மாவட்டத்தில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் வாக்களித்தார்.

- 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களித்த முதல் வாக்காளர் என நம்பப்படும் இவர் 1917 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று பிறந்தார்.

❖ மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் "நிஷாங்க்" அவர்களுக்கு, அவர் ஆற்றிய இலக்கியப் பணிக்காக வேண்டி கனடாவின் இந்தி எழுத்தாளர்கள் சங்கத்தினால் "சாகித்ய கவுரவ் சம்மன்" என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.

❖ கோவாவில் நடத்தப் பட்ட இந்திய சர்வதேசத் திரைப்படத் திருவிழாவின் 51வது பதிப்பானது பிஸ்வாஜித் சட்டர்ஜி என்பவருக்கு இந்த ஆண்டின் சிறந்த இந்திய ஆளுமை என்ற பட்டத்தை வழங்கி உள்ளது.

- இவர் ஒரு முதுபெரும் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், இந்தி மொழிப் பாடகர் மற்றும் வங்காள சினிமா துறையைச் சார்ந்தவர் ஆவார்.

❖ கர்நாடக கால்நடைகள் வதைத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு அவசரச் சட்டம், 2020 என்ற சட்டமானது ஜனவரி 18 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

- இந்த அவசரச் சட்டமானது மாடுகள், காளைகள், அனைத்து வயதிலும் உள்ள எருதுகள் மற்றும் 13 வயதிற்கும் குறைவான ஆண் அல்லது பெண் எருமைகளைக் கொல்வதைத் தடை செய்கின்றது.

❖ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றமானது பிஜி நாட்டினை 2021 ஆம் ஆண்டின் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது.

❖ இந்தியாவானது வங்க தேசத்திற்கு 2 மில்லியன் என்ற அளவிற்கு கோவிஷீல்டு தடுப்பூசிகளை நன்கொடையாக அளிக்கவுள்ளது.

- கோவிஷீல்டு என்ற தடுப்பூசியானது உள்நாட்டிலேயே இந்தியாவின் சீரம் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப் படுகின்றது.

❖ நேபாளத்தைச் சேர்ந்த மலையேற்ற வீரர்கள் குளிர் காலத்தில் உலகின் இரண்டாவது மிக உயரமான சிகரமான கே2 சிகரத்தில் ஏறிய முதலாவது குழுவினர் ஆவர்.

- இந்த சிகரமானது காரகோரம் வரம்பில் கில்ஜிட்-பலுசிஸ்தான் எல்லைப் புறத்தில் அமைந்துள்ளது.

❖ மேற்கு வங்கத்தில் உள்ள மகாநந்தா என்ற வனவிலங்குச் சரணாலயத்தில் ஒரு பறவைத் திருவிழாவானது நடத்தப்பட உள்ளது.

- மேற்கு வங்கத்தில் இதே வகையைச் சேர்ந்த ஒரு திருவிழா நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும்.

❖ பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 1000 கோடி மதிப்பு கொண்ட "ஸ்டார்ட் அப் இந்தியா தொடக்க நிறுவனங்களுக்கான நிதியை" தொடங்கியுள்ளார்.

- இது "பிராரம்ப் : ஸ்டார்ட் அப் இந்தியா சர்வதேச மாநாடு - 2021" என்ற மாநாட்டில் அறிவிக்கப் பட்டது.

❖ அமெரிக்காவில் பதவியிலிருந்து வெளியேறும் டிரம்ப் அரசாங்கமானது உய்கூர் முஸ்லீம்களுக்கு எதிரான சீனாவின் கொடுமைகளை "இனப் படுகொலையாக" அறிவித்துள்ளது.

- உய்கூர்கள் சீனாவின் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 55 இன சிறுபான்மையினர்களில் ஒருவராக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். மேலும் இவர்கள் வடமேற்கு சீனாவில் உள்ள ஜின்ஜியாங் மாகாணத்தில் உள்ள உய்கூர் தன்னாட்சிப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டுள்ளனர்.

❖ இந்தியாவானது கோவிட்-19 தொற்று நோய்க்கான தடுப்பூசிகளை மியான்மர், பூடான், வங்கதேசம், நேபாளம், மாலத் தீவுகள் மற்றும் செசல்ஸ் ஆகிய 6 நாடுகளுக்கு விநியோகிக்க உள்ளது.

- கோவேக்ஸின் ஆனது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்து பாரத் பயோடெக்கினால் உருவாக்கப்பட்ட ஒரு உள்நாட்டுத் தடுப்பூசியாகும். கோவிஷீல்டு ஆனது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ட்ராஜெனேகா என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது.

❖ இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் அமைந்துள்ள செமேரு என்ற ஒரு எரிமலையானது சமீபத்தில் வெடித்துச் சிதறியது.

❖ பாரத் ஸ்டேட் வங்கி, ஐசிஐசிஐ, எச்டிஎப்சி ஆகிய வங்கிகள் உள்நாட்டு முறைசார் முக்கியமான வங்கிகளாக தொடர்வதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

❖ "அப்துல் கலாம் – நினைவுகளுக்கு மரணமில்லை" என்ற புத்தகமானது மறைந்த குடியரசுத் தலைவரின் உடன் பிறந்தோர் மகளான ஏ பி ஜே எம் நசீமா மறைக்காயர் அவர்களால் எழுதப் பட்டது.

❖ மகாராஷ்டிரா மாநில அரசானது நாக்பூரில் உள்ள கோர்வாடா சர்வதேச உயிரியல் பூங்காவை "பாலாசாஹேப் தாக்கரே கோர்வாடா சர்வதேச உயிரியல் பூங்கா" என்று மறு பெயரிட்டுள்ளது.

❖ கோவிட் -19 தடுப்பூசி போடும் நிர்வாகத்திற்கான ஒரு அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் தலைவராக ஆர்.எஸ். சர்மா என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

- இவர் இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவராக இருந்தார்.

❖ இணைய தளங்கள் மற்றும் மொபைல் செயலிகள் உள்ளிட்ட டிஜிட்டல் தளங்கள் மூலமாக கடன் வழங்குவது தொடர்பாக ஜெயந்த் குமார் டாஷ் தலைமையிலான ஒரு செயற்குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

❖ பீகார் முதல்வர் நிதீஷ்குமார் அம்மாநிலத்தின் முதல் பறவைத் திருவிழாவான 'கல்ரவ்' என்ற ஒரு விழாவினை நாகி-நக்தி என்ற பறவைகள் சரணாலயத்தில் துவக்கி வைத்துள்ளார்.

❖ தரவு மற்றும் பகுப்பாய்வுக்கு வேண்டி கூகுள் மேகச் சேமிப்பு கூட்டுச் சிறப்பு அம்சத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்று உள்ளதாக இன்போசிஸ் சமீபத்தில் அறிவித்து உள்ளது.

- ❖ முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர் அவர்கள் இமாச்சலப் பிரதேசத்தின் முதல் இணைய வழி இளைஞர் வானொலி நிலையமான "ரேடியோ ஹில்ஸ்-யங்கிஸ்தான் கா தில்" (Radio Hills-Youngistan Ka Dil) என்பதைத் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ ஹவுரா-கல்கா விரைவு ரயிலுக்கு 'நேதாஜி எக்ஸ்பிரஸ்' என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.
  - ○ இந்த ரயில் கிழக்கு இந்திய மாநிலமான மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் உள்ள ஹவுராவை வடமேற்கு மாநிலமான ஹரியானாவில் உள்ள கல்காவுடன் இணைக்கிறது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டு உள்ளது.
  - ○ இந்த ஒப்பந்தம் நீடித்த மற்றும் நிலையான புவிசார் பேரிடர்களை நிர்வகிப்பதை மேம்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் ஆகும்.
- ❖ இலங்கையைச் சேர்ந்த பந்து வீச்சாளரான லசித் மலிங்கா அவர்கள் குழுமக் கிரிகெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற முடிவெடுத்து இருக்கிறார்.
  - ○ இவர் 2008 ஆம் ஆண்டு முதல் இந்தியன் பிரீமியர் லீக்கில் மும்பை இந்தியன்ஸ் அணியின் சார்பாக விளையாடினார்.
- ❖ சமீபத்தில் கர்நாடக மாநில முதல்வர் B.S எடியூரப்பா அவர்கள் அவலோக்னா என்ற மென்பொருளைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - ○ இந்த மென்பொருளானது 1800 திட்டங்களுக்கு ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் அனுமதி வழங்கல் குறித்தத் தரவை அணுக மாநில அரசை அனுமதிக்கும்.
- ❖ பாகிஸ்தான் நாடானது ஷாஹீன்-3 எனும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
  - ○ இது அணுசக்தி திறன் கொண்ட, 2,750 கி.மீ. வரம்புள்ள, தரையிலிருந்து தரையில் உள்ள இலக்கைத் தாக்கும் ஒரு ஏவுகணை ஆகும்.
- ❖ அமெரிக்காவானது உலக சுகாதார அமைப்பிற்கு வழங்கப்படும் (WHO) தனது நிதி வழங்குதலை மீண்டும் தொடங்கியுள்ளது.
  - ○ WHO அமைப்பிற்கு மிகப்பெரிய நிதிப் பங்களிப்பாளர் அமெரிக்கா ஆகும்.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது பொது விநியோகப் பொருட்களை வீடுகளுக்கேச் சென்று நேரடியாக வழங்கத் தயாராகியுள்ளது.
  - ○ ஏற்கெனவே இது போன்ற ஒரு திட்டத்தை தில்லி மாநில அரசு ஏற்கனவே செயல்படுத்திக் கொண்டு இருக்கின்றது.
- ❖ திரிபுரா மாநில அரசானது தனது மாநிலத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் இலவச மாதவிடாய்த் துணிகள் வழங்கப் படும் என்று அறிவித்துள்ளது.
  - ○ இந்த புதிய திட்டமானது "கிஷோரி சுச்சிதா அபியான்" என்று அழைக்கப்படும்.
- ❖ மத்தியப் பிரதேச அரசானது விதிஷா மாவட்டத்தில் மின்சார மானியத்திற்காக நேரடிப் பயன் பரிமாற்றத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - ○ இது போன்ற ஒரு திட்டம் இந்தியாவில் செயல்படுத்தப்படுவது இதுவே முதல்முறை ஆகும்.
- ❖ ஒடிசா மாநில முதல்வரான நவீன் பட்நாயக் அவர்கள் வருடாந்திர தொசாலி தேசியக் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை புவேனேஸ்வரில் தொடங்கி வைத்தார்.

- இது கிழக்கு இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

❖ மேகாலய மாநில முதல்வரான கான்ராட் K சங்மா அவர்கள் இந்தியாவின் நீளமான சாலை வளைவு மேம்பாலமான "வாக்ரேவ் மேம்பாலத்தை" மேகாலயாவின் கிழக்குக் காசிக் குன்றுகள் மாவட்டத்தில் உள்ள சோஹ்பாரில் திறந்து வைத்தார்.

❖ இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் துறையானது குல்மார்க்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் லடாக்கை வென்று இந்தியப் பனி ஹாக்கிக் கூட்டமைப்பின் 10வது தேசிய பனி ஹாக்கி சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றுள்ளது.

- லடாக்கானது இந்தியாவில் பனி ஹாக்கியின் தலைநகரமாகக் கருதப் படுகின்றது.

❖ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்து மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளதாக அறிவித்துள்ளது.

❖ மத்திய ஆயுதக் காவல் படைக்கான ஆயுஷ்மான் பாரத் சுகாதார திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்.

❖ ஹரித்துவாரைச் சேர்ந்த பத்தொன்பது வயது மாணவியான ஸ்ரீஸ்தி கோஸ்வாமி என்பவர் தேசியப் பெண் குழந்தை தினத்தில் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரு நாள் முதல்வராக பதவி ஏற்றுள்ளார்.

❖ இமாச்சலப் பிரதேசமானது தனது 50வது மாநில தினத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று கொண்டாடியது.

- இது 1971 ஆம் ஆண்டு 25 ஜனவரி அன்று இந்தியாவின் 18வது மாநிலமாக உருவெடுத்தது.

❖ முதல் பி.டி.ஆர் (போடோலாண்ட் பிராந்திய மண்டலம்) ஒப்பந்த நாள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று அசாமில் கொண்டாடப் பட்டது.

❖ ஸ்பெயினில் 590 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் கட்டும் ஒரு ஒப்பந்தத்தில் ஸ்பெயினும் பிரான்சும் சமீபத்தில் கையெழுத்திட்டன.

- இது ஐரோப்பாவின் மிகப்பெரிய ஒரு சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையமாக அமையும்.

❖ இஸ்ரேலின் டெல் அவிவ் நகரத்தில் (Tel Aviv) ஒரு தூதரகத்தை அமைக்க ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியிலும் தனது தூதரகத்தை இஸ்ரேல் அதிகாரப் பூர்வமாக திறந்துள்ளது.

❖ நேபாள நாட்டுப் பிரதமரான கே பி சர்மா ஒலி அவர்கள் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தனது முடிவிற்காக ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப் பட்டுள்ளார்.

❖ தில்லி மற்றும் சிக்கிம் ஆகியவற்றிற்கிடையே முதலாவது வணிக ரீதியிலான விமானச் சேவையானது தொடங்கப் பட்டுள்ளது.

- இந்த விமானமானது நாட்டின் 100வது விமான நிலையமான சிக்கிம் மாநிலத்தில் உள்ள பக்யாங் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் குழந்தைகளுக்குத் தாய் பாலூட்டல் மீதான கவனம் – 2020 ஆம் ஆண்டின் அறிக்கை

- தமிழ்நாட்டில் 34% குழந்தைப் பிறப்புகள் அறுவைச் சிகிச்சை முறையின் மூலம் நிகழ்கின்றன.
- இது உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்த உச்ச வரம்பான 15% என்ற அளவை விட அதிகமாகும்.
- இது மற்ற இதர மாநிலங்களில் பதிவாகியுள்ள வேகத்தை விட மிகவும் அதிகமானது ஆகும்.
- மொத்த அறுவைச் சிகிச்சையில், 26% பொது சுகாதார நிலையங்களிலும் 51% தனியார் நிலையங்களிலும் நிகழ்கின்றன.
- குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டல் என்ற மதிப்பெண்ணின் அடிப்படையில் மற்ற மாநிலங்களிடையே தமிழ்நாடானது 10வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தத் தரவு மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் தேசிய சுகாதாரத் திட்டம் என்ற திட்டத்தினால் வழங்கப் பட்டுள்ளது.


## தமிழ்நாட்டின் 38வது மாவட்டம்

- தமிழக முதல்வர் கே.பழனிசாமி அவர்கள் டிசம்பர் 28 ஆம் தேதி புதிதாக அமைக்கப் பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மாநிலத்தின் 38வது மாவட்டமானது நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதிய மாவட்டம் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, மற்றும் குத்தாலம் ஆகிய நான்கு தாலுகாக்களை உள்ளடக்கியுள்ளது.



## காவிரி-வைகை-குண்டாறு நதிகள் இணைப்பு

- ❖ காவிரி-வைகை-குண்டாறு ஆகிய நதிகளை இணைக்கும் திட்டத்திற்கான அடிக்கல் 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் போடப் பட உள்ளது.
- ❖ காவேரி நதியை வைகை நதியுடன் இணைப்பதற்காக வேண்டிகரூர் மாவட்டத்தின் மாயனூரிலிருந்து 255.60 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு கால்வாயை அமைப்பது இந்தத் திட்டத்தில் அடங்கும்.
- ❖ இந்த இணைப்புக் கால்வாயானது கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் வழியாக செல்லும்.





## விண்வெளியில் கன சதுரங்கள்

- ❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த ரியாஸ்தீன் எனும் மாணவர் விண்வெளியில் கன சதுரங்கள் (க்யூப்ஸ் இன் ஸ்பேஸ்) எனும் உலகளாவிய ஒரு போட்டியில் கலந்து கொண்டார்.
- ❖ அவரது 37 மிமீ அளவிலான ஃபெம்டோ வகை செயற்கைக் கோள்களான விஷன் சாட் வி1 மற்றும் வி2 ஆகியவை உலகின் மிக இலகுவான ஃபெம்டோ வகை செயற்கைக் கோளாக இடம் பிடித்துள்ளது.
- ❖ இந்தச் செயற்கைக் கோள் 2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ஆர்.பி. 6 என்ற ஒரு திட்டத்தின் கீழ் நாசாவின் சுழிய அழுத்தம் கொண்ட ஒரு ஆய்வு பலூன் மூலம் விண்ணில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் ஒரு மாணவரான ரியாஸ்தீன் தஞ்சாவூரில் உள்ள கரந்தை என்ற பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.
- ❖ கியூப்ஸ் இன் ஸ்பேஸ் என்ற ஒரு போட்டியை 11 முதல் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்காக நாசாவின் 'ஐடூடுல் எடுயுங்க்' (idoodle Eduinc) என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.




## தமிழ்நாடு புற்றுநோய் பதிவுத் திட்டம்

- ❖ புற்றுநோய் நிறுவனம் மற்றும் மாநில சுகாதாரத் துறை இணைந்து தமிழ்நாடு புற்றுநோய் பதிவுத் திட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ 1,00,000 என்ற அளவிலான மக்கள்தொகையின் மீதான புற்றுநோயின் நிகழ்வு விகிதமானது ஆண்களில் கண்டறியப் பட்டுள்ள 74.4 என்ற விகிதத்தைக் காட்டிலும் அதிகமாக பெண்களில் 93.9 என்ற விகிதத்தில் உள்ளது.
- ❖ இது உலகின் எந்தவொரு புற்றுநோய் பதிவகத்தாலும் மதிப்பிடப் பட்ட அளவில் ஒரு மிக உயர்ந்த எண்ணிக்கையாகும்.
- ❖ புற்றுநோய்கள் மீதான அதிகபட்ச புற்றுநோயின் நிகழ்வு விகிதமானது (CIR - Crude Incidence Rate) ஆனது சென்னையிலும் (140.8), குறைந்த பட்ச அளவிலான விகிதமானது கிருஷ்ணகிரியிலும் (48.5) காணப் பட்டுள்ளது.
- ❖ சென்னையில் பெண்களுக்கு மத்தியில் காணப் பட்டுள்ள மார்பகப் புற்றுநோயின் பாதிப்பானது நாட்டில் மிக அதிகமானதாகும் (1,00,000 பெண்களுக்கு 46.4).




## மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி

- ❖ நீதிபதி சஞ்சிப் பானர்ஜியை மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.
- ❖ இவர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் 50வது தலைமை நீதிபதியாக இருப்பார்.

- தற்போது இவர் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.
- தற்போதைய தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி அவர்கள் டிசம்பர் 31 அன்று பதவி ஓய்வு பெற்றார்.

## தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவர்

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி S.பாஸ்கரன், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றார்.
- அவர் தமிழக ஆளுநரால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- முதலமைச்சர், மாநில சட்டமன்றத்தின் சபாநாயகர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவால் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாகவும், தலைவராகவும் நியமனம் செய்யப் படுவோர் பரிந்துரைக்கப் படுவார்கள்.
- ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மீனா குமாரியின் பதவிக் காலத்திற்குப் பின்னர் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்தப் பதவி காலியாக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில், இந்த ஆணையத்தின் தற்காலிகத் தலைவராக நீதிபதி ஜெயச்சந்திரன் என்பவர் நியமிக்கப் பட்டிருந்தார்.

## காவிரியின் நீர்ப்பாசன அமைப்பை நவீனப்படுத்துதல் மற்றும் மீட்டெடுத்தல்

- தமிழ்நாடு மாநில அரசானது காவிரி துணை ஆற்றுப் படுகையின் நீர்ப்பாசன அமைப்பை நவீனப்படுத்துதல் மற்றும் மீட்டெடுத்தல் ஆகியவற்றிற்காக ரூ.350 கோடி ரூபாய் மதிப்பிலான பணியை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.
- இது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.
    - தஞ்சாவூர் மாவட்டத்தின் பூதலூர் மற்றும் திருவையாறு.
    - விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நந்தன் கால்வாயை வலுப்படுத்துதல்.
    - ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானி சாகர் அணை மற்றும் காளிங்கராயன் அணைகளுக்கிடையே 7 தடுப்பணைகளைக் கட்டமைத்தல்.
- 69 கிலோ மீட்டர் தூரத்திற்கு பவானி ஆறு மற்றும் அதன் துணையாற்றுப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் 7 தடுப்பணைகள் கட்டமைக்கப்பட உள்ளன.
- முன்மொழியப்பட்ட இந்த செயற்கை நீரேற்று அமைப்புகள் சத்தியமங்கலம், டிஎன் பாளையம், கோபிசெட்டிப் பாளையம் மற்றும் அந்தியூர் ஆகிய பகுதிகளில் கட்டமைக்கப் பட உள்ளன.

## பல்லுயிர் சூழல் பாரம்பரிய மண்டலங்கள்

- சுற்றுச்சூழல் ரீதியாக பாதிக்கப்படும் மூன்று பகுதிகளை தமிழ்நாடு மாநில அரசு அடையாளம் கண்டுள்ளது.
- அவையாவன
    - மதுரையில் அரிட்டாபட்டி,
    - திருநெல்வேலியில் வாகைகுளம் மற்றும்
    - கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியனவாகும்.
- விரைவில் இவை பல்லுயிர் சூழல் மண்டலங்களாக அறிவிக்கப்படும்.

### *அரிட்டாபட்டியைப் பற்றி*

- பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டு (பொது ஆண்டிற்கு முன்) காலத்து தமிழ் பிராமி கல்வெட்டுகள் அரிட்டாபட்டியில் அமைந்துள்ள கழிஞ்சமலையில் காணப் படுகின்றன.
- அரிட்டாபட்டியில் கிடைத்த ஒரு கல்வெட்டு இதற்கு முன்னர் இக்கிராமத்தை 'பாதிரிக்குடி' என்று அழைத்ததைக் குறிக்கிறது.
- நெல்வேலி சிழியன் மற்றும் இலஞ்சி இமயவன் ஆகிய இருவரும் இந்தக் குகையில் சமணத் துறவிகளுக்குத் தங்குமிடம் அளித்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன
- பாண்டிய ஆட்சிக் காலத்தில், அரிட்டாப்பட்டி கிராமம் 'தென்பரப்பு நாட்டின்' ஒரு பகுதியாக இருந்தது.
- இந்தக் குகைக்கு அருகில், ஒரு பழங்கால சமண தீர்த்தங்கரரின் சிற்பம் காணப் படுகிறது.
- இந்தச் சிற்பத்தின் கீழ் காணப்படும் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று கழிஞ்சமலையானது முன்பு 'திருப்பிணையான் மலை' என்று அழைக்கப் பட்டதாகக் கூறுகிறது.
- இந்தக் கிராமத்தின் மற்றுமொரு முக்கியமான பாரம்பரிய இடம் இலகுலீசர் என்ற ஒரு அரிய சிற்பத்துடன் கூடிய 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு குடைவரை சிவன் கோயிலாகும்.
- சதயவர்மன் விக்ரம பாண்டியன் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு மற்றொரு சிவன் கோவிலில் காணப்படுகிறது.

## வெள்ளத்தைத் தடுக்கும் திட்டம்

- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு மேம்பாட்டு வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்தை தமிழ்நாடு நீர்வளத் துறை இறுதி செய்துள்ளது.
- நீர் சேமிப்புத் திறனை அதிகரிக்கவும், அழிந்து போன நீர்நிலைகளின் இணைப்புகளை மீட்டெடுக்கவும், மிகவும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வெள்ளத்தைத் தடுக்கவும் வேண்டி ஒரு பயனுள்ள நீர் மேலாண்மை முறையை உருவாக்க இந்தத் திட்டமானது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இதில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.


## நம்ம திருவண்ணாமலை செயலி

- இது மாவட்ட நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் சிறந்த தகவல் தொடர்புகளை உறுதி செய்வதற்கான ஒரு கைபேசி செயலியாகும்.
- இது ஒரு தனியார் நிறுவனத்தின் உதவியுடன் மாவட்ட நிர்வாகத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது திருவண்ணாமலை மாவட்டம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கொண்டு இருக்கும்.




## பழைய சோறு

- பழைய சோற்றில் உள்ள நுண்ம உயிர்ப் பொருட்களின் (புரோபயாடிக்ஸ்) தாக்கத்தை ஆய்வு செய்ய 600 நோயாளிகளுடன் கூடிய ஓர் ஆராய்ச்சி திட்டத்தை மாநில சுகாதாரத் துறை மேற்கொண்டுள்ளது.
- கிரோன் நோய் மற்றும் குடல்புண் அழற்சி போன்ற குடல் அழற்சி நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் இதைப் பயன்படுத்துவதை இந்தத் திட்டம் ஆய்வு செய்யும்.
- குடல் அழற்சி நோய்களுக்கான சிகிச்சையில் பொதுவாக ஸ்டீராய்டு மருந்துகள், நோய்த் தடுப்பாற்றல் ஒடுக்கிகள், புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சையின் தலையீடு ஆகியன அடங்கும்.




## PMAY விருது

- 2019 ஆம் ஆண்டில் நகர்ப்புறத்திற்கான பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (Pradhan Mantri Awas Yojana Urban) என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டதில் இந்தியாவின் சிறந்த செயல்திறன் கொண்ட ஒன்றியப் பிரதேசத்திற்கான விருதைப் புதுச்சேரி பெற்று உள்ளது.
- இந்த விருதுக்கு புதுச்சேரி இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## பி எச் பாண்டியன் நினைவு மணிமண்டபம்

- தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் முன்னாள் சட்டமன்ற சபாநாயகரான பிஎச் பாண்டியனின் சிலையையும் துணை முதல்வரான ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் பி.எச். பாண்டியனின் மணிமண்டபத்தையும் திருநெல்வேலி மாவட்டத்தின் சேரன்மாதேவியில் உள்ள கோவிந்தப்பேரியில் திறந்து வைத்தனர்.
- இவர் 1985 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றத்தின் சபாநாயகராகப் பணியாற்றினார்.
- இவர் திருநெல்வேலியில் 1990 ஆம் ஆண்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார்.



## A மாதவன்

- சமீபத்தில் தமிழ் எழுத்தாளரான A மாதவன் (87) கேரளாவின் திருவனந்த புரத்தில் காலமானார்.
- இவர் தனது "இலக்கியச் சுவடுகள்" என்ற கட்டுரைகளின் தொகுப்பிற்காக 2015 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார்.
- இவர் 2009 ஆம் ஆண்டில் கலைமாமணி விருதைப் பெற்றுள்ளார்.
- தமிழ்நாடு அரசினால் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கு வழங்கப்படும் ஒரு மிக உயரிய கௌரவ விருது இதுவாகும்.



## வேலைவாய்ப்பின்மை விகிதம்

- இது இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்திடமிருந்து பெற்ற ஒரு தரவாகும்.
- இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 9.06% ஆக இருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு முழுவதும் கிராமப்புற வேலைவாய்ப்பின்மை விகிதமானது நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை விகிதத்தை விட அதிகமாக இருப்பது இதுவே முதல்முறை ஆகும்.
- இந்தியாவானது கொரானா பொது முடக்கத் தாக்கத்தின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் ஏப்ரல் (23.5%) முதல் ஜுன் (10.18%) வரையில் மிக அதிக அளவில் வேலைவாய்ப்பின்மை விகிதத்தைக் கண்டுள்ளது.
- மாநிலங்களைப் பொறுத்த வரையில், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஹரியானா (32.5%) மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மிக அதிக அளவிலான வேலைவாய்ப்பின்மை விகிதத்தையும் ஒடிசா (0.2%) மற்றும் தமிழ்நாடு (0.5%) ஆகிய மாநிலங்கள் மிகக் குறைந்த அளவிலான வேலைவாய்ப்பின்மை விகிதத்தையும் கண்டுள்ளன.
- தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 0.5% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது பொது முடக்கத் தளர்வுகள் குறித்த வழிகாட்டுதல்களுடன் ஒரு நேரடித் தொடர்பை வெளிப்படுத்தியுள்ளது.
- ஏப்ரல் மாதத்தில் முழுப் பொது முடக்கத்தின் போது, தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பின்மை விகிதமானது 49.8% ஆக இருந்தது.
- இது அந்தக் காலகட்டத்தில் தேசிய வேலைவாய்ப்பின்மை விகிதமான 23.5% என்ற அளவை விட அதிகமாக இருந்தது.
- தமிழ்நாடானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 41 மில்லியன் மனித நபர்களுக்கான பணி நாட்கள் என்ற அளவில் அதிக வேலைவாய்ப்பைக் கொண்டு இருந்தது, இது மற்ற மாநிலங்களிடையே மிகவும் அதிகமாகவும் கடந்த ஆண்டை விட 151% அதிகரிப்பையும் கொண்டுள்ளது.

**Unemployment Rate (%) Dec 2020**

| | | | |
|---|---|---|---|
| Andhra Pradesh | 6.7 | Maharashtra | 3.9 |
| Assam | 7.6 | Meghalaya | 6.6 |
| Bihar | 12.7 | Odisha | 0.2 |
| Chhattisgarh | 7.2 | Puducherry | 2.7 |
| Delhi | 7.6 | Punjab | 4.4 |
| Goa | 13.2 | Rajasthan | 28.2 |
| Gujarat | 3.0 | Sikkim | 0.7 |
| Haryana | 32.5 | Tamil Nadu | 0.5 |
| Himachal Pradesh | 7.9 | Telangana | 7.0 |
| Jammu & Kashmir | 16.6 | Tripura | 18.2 |
| Jharkhand | 12.4 | Uttar Pradesh | 14.9 |
| Karnataka | 1.4 | Uttarakhand | 5.2 |
| Kerala | 6.5 | West Bengal | 6.0 |
| Madhya Pradesh | 4.0 | | |

## மாணவர்களுக்கு இலவச இணைய இணைப்பு (டேட்டா)

- தமிழ்நாடு மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 9.69 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு 2 ஜிபி என்ற அளவில் இலவச இணைய இணைப்புகளை (Data Card) வழங்க உள்ளது.
- இது மாணவர்கள் இணையதள வகுப்புகளில் தங்கு தடையின்றி கலந்து கொள்ள வழிவகை செய்யும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை & அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், ஊக்கத் தொகை பெறும் தனியார் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் இந்தத் திட்டத்திற்குத் தகுதியுடையவர்களாவர்.
- இந்த இணைய இணைப்புக் கருவிகள் தமிழ்நாடு மின்னணுக் கழகத்தினால் வழங்கப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் மழைப் பொழிவு

- தமிழகம் முழுவதும் ஜனவரி மாதத்தில் அதிக அளவிலான ஒரு மழைப் பொழிவு அளவினைப் பதிவு செய்துள்ளது.
- தமிழகம் அனைத்து 37 மாவட்டங்களிலும் முதல் முறையாக அதிக அளவு மழைப் பொழிவினைப் பதிவு செய்துள்ளது.
- ஜனவரி மாதத்தில் பெய்த தமிழ்நாட்டின் மொத்த மழையின் அளவு 15.5 மி.மீ. ஆகும்.

## தமிழ்நாடு மாநில விருதுகள்

- முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான மாநில அரசு விருதுகளையும் 2021 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதையும் 2020 ஆம் ஆண்டிற்கான சித்திரைத் தமிழ் புத்தாண்டு விருது மற்றும் தமிழ் செம்மல் விருது ஆகிய விருதுகளையும் அறிவித்தார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான தமிழ் செம்மல் விருதுகளுக்காக 38 மாவட்டங்களில் இருந்து முப்பத்தெட்டு தமிழ் அறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- எழுத்தாளர் கி ராஜநாராயணன் அவர்கள் உ.வே.சா விருதிற்குத் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
  - அவர் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று புகழப் படுகிறார்.
  - கரிசல் வட்டார வழக்கு அகராதி என்ற ஒரு அகராதியை அவர் எழுதியுள்ளார்.
- கம்பர் விருதானது எச்.வி.ஹண்டேவுக்கு வழங்கப்பட்டது.
  - அவர் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு நெருக்கமானவராக ஒரு மூத்த அரசியல்வாதியாக இருந்தார்.
  - இவர் கம்ப ராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

### *திருவள்ளுவர் திருநாள் விருதுகள்*

- 2021 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது - முனைவர் வைகைச் செல்வன்
- தந்தை பெரியார் விருது - அ. தமிழ்மகன் உசேன்
- அண்ணல் அம்பேத்கர் விருது - வரகூர் அ. அருணாச்சலம்,
- பேரறிஞர் அண்ணா விருது - அமரர் திரு. கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன்
- பெருந்தலைவர் காமராசர் விருது - முனைவர் ச. தேவராஜ்

- மகாகவி பாரதியார் விருது - கவிஞர் பூவை செங்குட்டுவன்
- பாவேந்தர் பாரதிதாசன் விருது - அறிவுமதி (எ) மதியழகன்
- தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது - வி.என். சாமி
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது - முனைவர் வீ. சேதுராமலிங்கம்.

***சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள்***


- 2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்த் தாய் விருது - வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம்
- கபிலர் விருது - செ. ஏழுமலை
- உ.வே.சா விருது - கி. இராஜநாராயணன்
- கம்பர் விருது - மருத்துவர் எச்.வி. ஹண்டே
- சொல்லின் செல்வர் விருது - நாகை முகுந்தன்
- உமறுப் புலவர் விருது - ம. அ. சையத் அசன் (எ) பாரிதாசன்
- ஜி.யு.போப் விருது - ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் திருமதி உல்ரீகே நிகோலஸ்
- இளங்கோவடிகள் விருது - மா. வைத்தியலிங்கன்
- அம்மா இலக்கிய விருது - முனைவர் தி. மகாலட்சுமி
- சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது - ஆ. அழகேசன்
- மறைமலையடிகளார் விருது - மறை. தி. தாயுமானவன்
- அயோத்தி தாசப் பண்டிதர் விருது - முனைவர் கோ.ப. செல்லம்மாள்
- அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது - முனைவர் ஊரன் அடிகள்
- காரைக்கால் அம்மையார் விருது - முனைவர் மோ. ஞானப்பூங்கோதை
- தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது - தினமணி நாளிதழ்
- சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது - கல்கி வார இதழ்
- சி.பா. ஆதித்தனார் மாத இதழ் விருது - செந்தமிழ் மாத இதழ்
- தேவநேயப் பாவணர் விருது - முனைவர் கு. சிவமணி
- வீரமாமுனிவர் விருது - ஹாங்காங்கைச் சேர்ந்த முனைவர் கிரிகோரி ஜேம்ஸ்
- சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருது - சோ. சேசாச்சலம், முனைவர் இராம. குருநாதன், ப. குணசேகர், முனைவர் பத்மாவதி விவேகானந்தன், சு. ஜோதிர்லதா கிரிஜா, ஜெ. இராம்கி (எ) இராமகிருட்டினன், சுவாமி விமூர்த்தானந்தர், மீரா ரவிசங்கர், திலகவதி, கிருட்டின பிரசாத்
- 2019 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது - சே. இராஜாராமன்

***மதுரை உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்***

- 2020 ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருது - பிரான்சு நாட்டைச் சேர்ந்த முனைவர் அலெக்சிஸ் தேவராசு சேன்மார்க்
- இலக்கண விருது - இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசு
- மொழியியல் விருது - சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் சுபா திண்ணப்பன்.

## தொல்லியல் அகழாய்வுகள்

- தமிழ்நாடு தொல்லியல் துறையானது மேலும் 7 தளங்களில் அகழாய்வுகளை மேற்கொள்ளவும் 2 இடங்களில் நிகழ்நேர ஆய்வுகளை மேற்கொள்ளவும் முடிவு செய்து உள்ளது.
- மாநிலத் தொல்லியல் துறை மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களால் 10 அகழாய்வுத் திட்டங்களுக்கும் மேற்பட்ட திட்டங்களை தமிழ்நாடு மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- இந்த அகழாய்வுகள் பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.
  - சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள்
  - தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர், சிவகலை, கொற்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள்.
  - ஈரோடு மாவட்டத்தில் கொடுமணல்
  - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும்பாறை
  - அரியலூர் மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் மாளிகைமேடு
- புதிய கற்காலத் தளத்தைக் கண்டறிவதற்காக ஒரு நிகழ்நேர (துறைசார்) ஆய்வானது கிருஷ்ணகிரி, வேலூர், தர்மபுரி, திருவாண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- மற்றொரு துறைசார் ஆய்வானது தாமிரபரணி நதி நாகரிகத்தைக் கண்டறிவதற்காக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- சர்மா பாரம்பரியக் கல்வி மையமானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சென்ராயன்பாளையத்தில் அகழாய்வை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளது, அழகப்பா பல்கலைக்கழகமானது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இலந்தகரையில் அகழாய்வை மேற்கொள்ள தனது பரிந்துரையைச் சமர்ப்பித்துள்ளது.
- தமிழ்ப் பல்கலைக்கழகமானது கோயம்புத்தூரில் உள்ள மூலப் பாளையத்தில் அகழாய்வை மேற்கொள்வதற்கான பரிந்துரையையும் மதராஸ் பல்கலைக் கழகமானது வேலூர் மாவட்டத்தில் உள்ள வாசலையில் அகழாய்வை மேற்கொள்வதற்கான பரிந்துரையையும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகமானது புதுக்கோட்டையில் உள்ள பொற்பனைக் கோட்டையில் அகழாய்வை மேற்கொள்வதற்கான அனுமதியையும் கோரியுள்ளன.



## மருத்துவர் ”சாந்தா” மறைவு




- சமீபத்தில் இவர் ஜனவரி 19 அன்று காலமானார்.
- இவர் ஒரு இந்தியப் புற்றுநோயியல் நிபுணர் மற்றும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்தின் தலைவர் ஆவார்.
- இவர் 1955 ஆம் ஆண்டில் புற்றுநோய் மையத்தில் சேர்ந்தார்.
- 2013 ஆம் ஆண்டில், முன்னாள் முதல்வரான ஜெயலலிதா அவர்கள் இவருக்கு "அவ்வையார் விருது" வழங்கி கௌரவித்தார்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1954 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள அடையாறில் புற்றுநோய் மையத்தை அமைத்தார்.


## தமிழ்நாட்டில் கோவிட் தடுப்பூசி முகாம்

- தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் ஜனவரி 16 அன்று கோவிட் – 19 தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது மதுரையில் உள்ள ராஜாஜி அரசு மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- முதலாவது கோவிஷீல்டு தடுப்பூசியானது டாக்டர் செந்தில் என்பவருக்கு செலுத்தப் பட்டது.
- இவர் தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கத்தின் தலைவராக உள்ளார்.



## தமிழ்நாட்டு வாக்காளர்கள்

- ❖ தமிழ்நாட்டில் மொத்தம் 6.26 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.
- ❖ இதில் 3.18 கோடி பெண்கள், 3.08 கோடி ஆண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த 7,200க்கும் மேற்பட்டவர்கள் ஆகியோர் அடங்குவர்.
- ❖ இம்மாநிலத்தில் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர்.




- ❖ செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் உள்ளனர் (6,94,845 வாக்காளர்கள்).
- ❖ சென்னையில் உள்ள துறைமுகச் சட்டமன்றத் தொகுதியானது மிகக் குறைந்த வாக்காளர்களை (1,76,272 வாக்காளர்கள்) கொண்டுள்ளது.
- ❖ தற்போதைய அரசாங்கத்தின் பதவிக் காலம் 2021 ஆம் ஆண்டின் மே 2 ஆம் தேதியுடன் முடிவடைவதால், தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் மே மாதத்தில் நடைபெறும்.

## தமிழ்நாடு சட்டமன்றத்தில் உருவப் படங்கள்

- ❖ தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஓமந்தூரார் ராமசாமி ரெட்டியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை மற்றும் பரமசிவன் சுப்பராயன் ஆகியோரின் அசல் உருவப் படங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் விரைவில் திறக்கப் படும் என்று சமீபத்தில் அறிவித்து உள்ளார்.
- ❖ இதற்கு முன்பு அவர் 2019 ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று மாநிலத்தின் சட்டமன்றத்தில் சுதந்திரப் போராட்ட வீரரான எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.
- ❖ எஸ் எஸ் ராமசாமி படையாச்சியார் அவர்களின் உருவப்படமானது சட்டமன்றத்தில் திறந்து வைக்கப் பட்ட 12வது உருவப் படமாகும்.

- இவர் 1952 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியைத் தொடங்கினார்.

| S.No | Portrait | Unveiled on | Unveiled by |
|---|---|---|---|
| 1 | C. Rajagopalachari | 24 June 1948 | Jawaharlal Nehru |
| 2 | Mahatma Gandhi | 23 August 1948 | C. Rajagopalachari |
| 3 | Thiruvalluvar | 22 March 1964 | Zakir Hussain |
| 4 | C. N. Annadurai | 6 October 1969 | Indira Gandhi |
| 5 | K. Kamaraj | 18 August 1977 | Neelam Sanjiva Reddy |
| 6 | Periyar E. V. Ramasamy | 9 August 1980 | Jothi Venkatachalam |
| 7 | B. R. Ambedkar | 9 August 1980 | Jothi Venkatachalam |
| 8 | U. Muthuramalingam Thevar | 9 August 1980 | Jothi Venkatachalam |
| 9 | Muhammad Ismail Sahib | 9 August 1980 | Jothi Venkatachalam |
| 10 | M. G. Ramachandran | 31 January 1992 | J. Jayalalithaa |
| 11 | J. Jayalalithaa | 12 February 2018 | P. Dhanapal |
| 12 | S. S. Ramaswami Padayachi | 19 July 2019 | Edappadi K. Palaniswami |

- 1954 ஆம் ஆண்டில் இவர் மறைந்த K காமராஜர் அவர்களின் தலைமையிலான அமைச்சரவையில் ஒரு அமைச்சராகப் பணியாற்றினார்.
- 1948 ஆம் ஆண்டு முதல் திருவள்ளுவர், மகாத்மா காந்தி, பி.ஆர். அம்பேத்கர், பெரியார், ராஜாஜி, K. காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், அறிஞர் அண்ணா, காயிதே மில்லத், எம்.ஜி. ராமச்சந்திரன் மற்றும் ஜெ. ஜெயலலிதா ஆகியோரின் உருவப் படங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளன.

## சாதிவாரியான கணக்கெடுப்பு - குலசேகரன் ஆணையம்

- முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி குலசேகரனின் தலைமையில் முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் ஓர் ஆணையத்தை அமைத்துள்ளார்.
- இது தமிழகத்தில் சாதிவாரியான தரவுகளைச் சேகரிப்பதைத் துவங்கும்.
- சாதியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தொகையை அறிய தமிழகம் முழுவதும் ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்று மாநில அரசு சமீபத்தில் அறிவித்து இருந்தது.
- அரசு வேலைவாய்ப்பில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் மீதான பிரதிநிதித்துவத்தின் போதாமையை எடுத்துக் காட்டி அளவிடக் கூடிய வகையிலான தரவுகளைச் சேகரிக்க வேண்டி அனைத்து மாநிலங்களுக்கும் உத்தரவிடப்பட்ட உச்சநீதிமன்ற உத்தரவுகளின் பின்னணியில் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் பட்டாளி மக்கள் கட்சியின் தொண்டர்கள் அரசாங்க வேலை மற்றும் அரசுக் கல்வியில் வன்னியர்களுக்கு 20% இடஒதுக்கீடு கோரி சென்னை முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.
- மேலும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தமிழகத்தின் 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்பான வழக்கை நடத்துவதற்கு வேண்டி சாதி வாரியான தரவுகளும் இதற்கு தேவைப் படுகின்றன.
- 1950களுக்குப் பிறகு தமிழகத்தில் இது சார்ந்து அமைக்கப் பட்டுள்ள முதல் குழு இதுவே ஆகும்.



### *தமிழ்நாட்டின் பின்னணி*

- 1969 ஆம் ஆண்டில் ஏ.என்.சட்டநாதன் தலைமையிலான முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையமானது தமிழ்நாட்டில் இருந்த பல்வேறு சாதிகள் குறித்த மக்கள் தொகையைத் தீர்மானிக்க வேண்டி சுதந்திரத்திற்கு முந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளைப் பயன்படுத்தியது.
- 1983 ஆம் ஆண்டில், ஜே.ஏ.அம்பாசங்கர் தலைமையிலான இரண்டாவது பிற்படுத்தப் பட்டோர் வகுப்பு ஆணையமானது வீட்டுக்கு வீடு கணக்கீடு என்ற முறையின் மூலம் சாதி வாரியான சமூகப்-பொருளாதார மற்றும் கல்வி மீதான கணக்கெடுப்பை நடத்தியது.
- இது 1985 ஆம் ஆண்டில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது.
- தற்போதுள்ள 69% ஒதுக்கீட்டைப் பாதுகாக்க மாநில அரசானது தமிழ்நாடு பிற்படுத்தப் பட்ட வகுப்புகள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.
- இது 1994 ஆம் ஆண்டில் 76வது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

### *இந்தியாவில் சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு*

- 2021 ஆம் ஆண்டின் போதான மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது இதர பிற்படுத்தப்பட்டோர் பற்றிய தரவுகளைச் சேகரிக்க மத்திய அரசானது முடிவு செய்து உள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் சமூகப்-பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போதிலும், 1931 ஆம் ஆண்டிற்குப் பிறகு இது போன்ற தரவுகளைச் சேகரிக்கும் முதல் பொது மக்கள் தொகை கணக்கெடுப்பு இதுவாகும்.
- இது 1931 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு முதல் சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பாகும்.
- 1992, 1997 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மூன்று மக்கள் தொகை கணக்கெடுப்புகளுக்குப் பின்னர், இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற பல்வேறு நலத் திட்டங்களைப் பெறும் குடும்பங்களை அடையாளம் காண வேண்டி இந்திய அரசு நடத்திய நான்காவது கணக்கெடுப்பாகும்.
- சமூகப் பொருளாதார மற்றும் சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது மக்கள் தொகை கணக்கெடுப்பைப் போன்று அல்லாமல் தனியாக நடத்தப்பட்டது.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு முறையானது 1948 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இதை கிராமப்புறங்களில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகமும் நகர்ப்புறங்களில் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகமும் மேற்கொண்டன.

- ❖ 1931 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல்முறையாக, இதர பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை பற்றிய தரவுகளும் 2011 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டன.
- ❖ முதல் சாதிவாரியான கணக்கெடுப்பானது இந்தியாவில் 1881 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- ❖ 1941 ஆம் ஆண்டில், இரண்டாம் உலகப் போரின் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு முயற்சியானது நிறுத்தப் பட்டது.
- ❖ பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் நிரலானது 1961 ஆம் ஆண்டு முதல் மக்கள் தொகை கணக்கெடுப்புச் சீட்டுகளில் சேர்க்கப்பட்டது.
- ❖ முதலாவது பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ஆணையம் 1953 ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் 340வது பிரிவின் கீழ் காக்கா காலேக்கர் என்பவரின் தலைமையில் அமைக்கப் பட்டது.
- ❖ 1979 ஆம் ஆண்டில், இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ஆணையமானது மண்டல் அவர்களின் தலைமையில் கீழ் அமைக்கப்பட்டது.
- ❖ மண்டல் ஆணையத்தின் அறிக்கையின்படி, பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கையானது மொத்த மக்கள் தொகையில் 22.56 சதவீதம் ஆகும்.
- ❖ மண்டல் ஆணையமானது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை 52 சதவீதமாக கணக்கிட்டு இருந்தது.
- ❖ இது 1931 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் செய்யப் பட்டது.
- ❖ இதனால் அரசு வேலைகள் மற்றும் அரசுப் பல்கலைக்கழகங்களில் 49.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க நேர்ந்தது.
- ❖ இது முதன்முறையாக இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு வழங்கப் பட்ட 27 சதவீத இடஒதுக்கீட்டிற்கான அறிவிப்பை உள்ளடக்கியது ஆகும்.
- ❖ வி.பி.சிங் தலைமையிலான அரசாங்கத்தால் 1990 ஆம் ஆண்டில் இது செயல்படுத்தப் பட்டது.

## ஹன்ஸ்ராஜ் வர்மா குழு

- ❖ முதல்வர் பழனிசாமி அவர்கள் குடும்பன், பன்னாடி, கடையன், பள்ளர், காலாடி, வத்திரியன் மற்றும் தேவேந்திர குலத்தான் என்ற பட்டியல் இனத்தவரின் 7 துணைப் பிரிவுகள் தேவேந்திரகுல வேளாளர் என்று அழைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.
- ❖ இது ஹன்ஸ்ராஜ் வர்மா தலைமையிலான ஒரு குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டதாகும்.



- இது தேவேந்திர குல வேளாளர் சமூகம் மற்றும் புதிய தமிழகம் கட்சி ஆகியவற்றின் ஒரு மிக நீண்ட காலக் கோரிக்கையாகும்.
- தமிழ்நாடு மாநில அரசானது தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தின் கீழ் இந்த 7 துணைப் பிரிவுகளையும் சேர்க்க மத்திய அரசிற்குப் பரிந்துரைக்க உள்ளது.
- ஆனால் அவர்களது சமூகப்-பொருளாதார நிலைமையின் காரணமாக, அந்தச் சமூகமானது கல்வி மற்றும் பணி வாய்ப்புகளில் அதே இடஒதுக்கீட்டையே தொடர்ந்து பெற உள்ளது.
- எனினும், அந்தச் சமூகத்தின் ஒரு இதரக் கோரிக்கையான பட்டியல் இனத்தவர் என்ற பிரிவிலிருந்து தங்களை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையானது அரசிடம் இன்னும் நிலுவையில் உள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்த ஆண்டின் விஞ்ஞானி விருது

- டிஆர்டிஓ விஞ்ஞானியான ஹேமந்த் குமார் பாண்டே அவர்கள் டிஆர்டிஓ அமைப்பின் "இந்த ஆண்டிற்கான விஞ்ஞானி விருது" வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- வெண்கழலைக்கான "லூக்கோசின்" எனப்படும் மூலிகை மருந்தை மேம்படுத்தியதில் இவரின் பங்களிப்பிற்காக வேண்டி இவருக்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- "லூக்கோசின்" என்ற மருந்து இமயமலைப் பகுதியில் காணப்படும் மூலிகைகளைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்டுள்ளது.
- வெண்கழலை என்பது ஒரு உடலின் சில பகுதிகளில் தோலின் மீதான நிற இழப்புகளால் அறியப்படும் ஒரு சுய நோயெதிர்ப்புக் குறைபாட்டுப் பிரச்சினை ஆகும்.

## ஜம்மு காஷ்மீர் மாவட்ட வளர்ச்சி ஆணையத் தேர்தல்

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று சரத்து 370 நீக்கப் பட்டதற்குப் பிறகு ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.
- பரூக் அப்துல்லா தலைமையிலான குப்கார் பிரகடனத்திற்கான மக்கள் கூட்டணி இத்தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.
- மொத்தமுள்ள 280 இடங்களில், இந்தக் கூட்டணியானது 110 இடங்களில் வெற்றி பெற்றுள்ள அதே சமயம் பிஜேபி ஆனது 75 இடங்களில் வெற்றி பெற்று ஒற்றை மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது.
- குப்கார் கூட்டணியானது தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட 6 பிராந்தியக் கட்சிகளை உள்ளடக்கியதாகும்.

## கோவிட்-19 தடுப்பூசி சோதனைப் பயிற்சி

- குஜராத், அசாம், ஆந்திரா மற்றும் பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்களில் கோவிட் தடுப்பூசி குறித்து மீது ஒரு சோதனைப் பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தத் தடுப்பூசி சோதனைகள் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் இணைந்து வழங்கப்படும்.

- சீரம் இந்தியா நிறுவனமானது ஏற்கனவே ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ராசெனெகா நிறுவனத்தின் கோவிட் -19 தொற்று குறித்த 'கோவிஷீல்ட்' என்ற தடுப்பூசியினைச் சுமார் 50 மில்லியன் அளவில் தயாரித்துள்ளது.
- புனேவைச் சேர்ந்த சீரம் இந்தியா நிறுவனமானது உலகின் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தியாளராகும்.
- மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பான இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது ஒரு அவசரப் பயன்பாட்டு ஒப்புதலுக்காக வேண்டி மூன்று தடுப்பூசிகளைப் பரிசீலித்து வருகிறது - அவை அஸ்ட்ராஜெனெகா, ஃபைசர்/பயோன்டெக் மற்றும் உள்நாட்டு நிறுவனமான பாரத் பயோடெக் உருவாக்கிய ஒரு தடுப்பூசி ஆகியன ஆகும்.
- இந்தியாவில் எட்டு கோவிட் -19 தடுப்பூசிகள் வெவ்வேறு கட்ட சோதனைகளின் கீழ் உள்ளன, இதில் மூன்று உள்நாட்டிலேயே தயாரித்தவை ஆகும்.
- இதில் ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியான கோவிஷீல்ட், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்-பாரத் பயோடெக் இணைந்து தயாரித்த தடுப்பூசியான கோவாக்சின், ரஷ்யாவின் தடுப்பூசியான ஸ்புட்னிக்-வி மற்றும் ஜைடஸ் கடிலாவின் தடுப்பூசியான ஜைகோவ்-டி ஆகியவை அடங்கும்.
- மேலும் சீரம் இந்தியாவின் என்விஎக்ஸ்-கோவி 2373 மற்றும் ஜெனீவாவின் எச்ஜிசி 019 ஆகியவற்றுடன் சேர்த்து பாரத் பயோடெக் மற்றும் பயோலாஜிக்கல் இ லிமிடெட் ஆகியவற்றின் பெயரிடப்படாத இரண்டு தடுப்பூசிகள் ஆகியவையும் இதில் அடங்கும்.

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா விருதுகள்

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் விசாகப்பட்டினம் மாநகராட்சியைச் சிறப்பாக செயல்படும் உள்ளாட்சி அமைப்பாக தேர்வு செய்து உள்ளது.
- ஆந்திராவானது சிறந்த மாநிலப் பிரிவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் சிறந்த செயல்திறன் கொண்ட ஒரு நகராட்சி அமைப்பாக உத்தரப் பிரதேசத்தின் மிர்சாபூர் வென்றுள்ளது.
- வடகிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களின் கீழ் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – நகர்ப்புறம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தியதில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக திரிபுரா தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா என்ற திட்டம் "அனைவருக்கும் வீடு" வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதிக்குள் 20 மில்லியன் நகர்ப்புற ஏழைகளுக்கு மலிவு விலையிலான வீடுகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் பிரதமர் மோடி 2019-20 ஆம் ஆண்டைக் 'கட்டுமானத் தொழில்நுட்ப ஆண்டு' என்றும் அறிவித்திருந்தார்.

## டிஜிட்டல் இந்தியா விருதுகளின் 6வது பதிப்பு 2020

- இந்நிகழ்ச்சித் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒரு நிறுவனமான தேசிய தகவல் மையத்தால் நடத்தப் பட்டது.
- டிஜிட்டல் இந்தியா விருதுகளானது இந்தியாவின் தேசியத் தரவு தளம் என்ற அமைப்பின் கீழ் நிறுவப் பட்டது.
- இதன் நோக்கம் "அரசாங்க சேவை விநியோகத்தை டிஜிட்டல் முறையில் மாற்றப் படுவதை" ஊக்குவிப்பதாகும்.

- இந்த விருதுகளை வெல்ல மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் 'வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதரகங்கள்' மட்டுமே தகுதியானவை ஆகும்.

| | | |
|---|---|---|
| 3 | Excellence in Digital Governance - STATE / UT | Haryana |
| | | Tamil Nadu |
| | | Uttar Pradesh |
| | | West Bengal |

- இந்த ஆண்டின் பதிப்பில் இரண்டு புதிய பிரிவுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவை,
  - கொள்ளை நோய்க் காலத்தில் புத்தாக்கம் மற்றும்
  - முன்மாதிரியான தயாரிப்புகள் பிரிவில் விருதுகள் என்பவையாகும்.
- 2020 ஆம் ஆண்டின் டிஜிட்டல் இந்தியா விருதில் ஹரியானா தனது மின்-ஆளுமை முயற்சிகளுக்காக முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- மின்-ஆளுமை முயற்சிகளில் தமிழகம் இரண்டாவது இடத்திலும், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்தில் டிஜிட்டல் நிர்வாகத்தில் சிறந்து விளங்குதல் என்ற பிரிவில் தமிழகம் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- தபால் துறையானது தங்கப் பதக்கத்தையும், நீதித்துறையின் கீழ் உள்ள இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் மின்னணு-குழுவானது அமைச்சகம்/துறையினுள் சிறந்த டிஜிட்டல் ஆளுமைப் பிரிவில் பிளாட்டினம் பதக்கத்தையும் வென்றுள்ளது.
- சிறந்த டிஜிட்டல் ஆளுமைப் பிரிவில் ஹரியானாவானது பிளாட்டினப் பதக்கத்தையும் உத்தரப் பிரதேசம் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளது.
- கொள்ளை நோய்க் காலத்தில் புத்தாக்கம் என்ற பிரிவில் பீகார் மாநிலம் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

## நாகாலாந்து - அமைதி குலைந்த பகுதி

- மத்திய உள்துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று நாகாலாந்தை 1958 ஆம் ஆண்டு ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ், மேலும் ஆறு மாதங்களுக்கு 'அமைதி குலைந்த பகுதி' என்று அறிவித்துள்ளது.
- நாகாலாந்து கிட்டத்தட்ட ஆறு தசாப்தங்களாக ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ் உள்ளது.
- ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டமானது 1958 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் நடைமுறையில் உள்ளது.
- உள்துறை அமைச்சகமானது முன்னதாக ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தை மேகாலயா மாநிலம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சில இடங்கள் ஆகிய இடங்களில் இருந்து முழுமையாக திரும்பப் பெற்றது.
- தற்போது, நாகாலாந்து, மணிப்பூர் (இம்பால் மாநகராட்சி தவிர), அசாம், அருணாச்சலப் பிரதேசத்தின் சில மாவட்டங்கள் ஆகிய இடங்களில் மட்டுமே ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டமானது நடைமுறையில் உள்ளது.

- மாநில ஆளுநரோ அல்லது மத்திய அரசோ ஒரு மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஒரு அமைதி குலைந்த பகுதியாக அறிவிக்க முடியும்.




## ஆர் பி திவாரி குழு

- பல்கலைக்கழக மானியக் குழுவானது (University Grants Commission) ஆர் பி திவாரி என்பவரின் தலைமையில் ஏழு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- கல்லூரிச் சேர்க்கைக்கு ஒரே முறையான தளத்தை வழங்குவதற்காக மத்திய பல்கலைக் கழகங்களில் அடுத்த கல்வியாண்டிலிருந்து இளங்கலை மட்டத்தில் ஒரு பொதுவான நுழைவுத் தேர்வை நடத்துவதற்கான நடைமுறைச் சிக்கல் குறித்து இந்தக் குழு பரிசீலிக்கும்.
- புதிய தேசியக் கல்வி கொள்கையானது (NEP - National Education Policy) இந்தத் தேர்வுகளுக்குப் பயிற்சி பெறுவதற்கான தேவையை அகற்ற நுழைவுத் தேர்வுகளின் எண்ணிக்கையை குறைக்கப் பரிந்துரைக்கிறது.
- NEP பரிந்துரையானது செயல்படுத்தப்பட்டால், தேசியத் தேர்வு முகமையானது நிறுவப் படும்.



## ராம்கோபால் ராவ் குழு

- தில்லியின் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த வி ராம்கோபால் ராவ் என்பவரின் தலைமையில் மத்தியக் கல்வி அமைச்சகமானது ஒரு குழுவை அமைத்து உள்ளது.
- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் ஆசிரியர் ஆட்சேர்ப்பில் இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்வதற்காக வேண்டி இது அமைக்கப் பட்டுள்ளது.
- 23 இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடஒதுக்கீட்டில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.
- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களை "சிறந்த நிறுவனங்கள்" (Institutions of Excellence) பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இந்தக் குழு அறிவுறுத்துகின்றது.



## விஸ்டாடோம் சுற்றுலா ரயில் பெட்டிகள்

- புதிய விஸ்டாடோம் சுற்றுலா ரயில் பெட்டிகளின் சோதனை ஓட்டத்தை இந்திய ரயில்வே வெற்றிகரமாக முடித்துள்ளது.
- இந்த ரயில் பெட்டிகள் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலையால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- விஸ்டாடோம் சுற்றுலா ரயில் பெட்டிகள் கண்ணாடி மேற்கூரை மற்றும் பரந்த சாளரங்களின் மூலம் சிறந்த காட்சி ஆகியவற்றை வழங்குவதற்காக உருவாக்கப் பட்டுள்ளது.



- தற்போது இந்தியாவில் 13 விஸ்டாடோம் சுற்றுலா ரயில் பெட்டிகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- அரக்குப் பள்ளத்தாக்கு, தாதர் மற்றும் மடகாவோன், டார்ஜிலிங் - இமயமலை ரயில்வே, காங்க்ரா பள்ளத்தாக்கு ரயில்வே, கல்கா - சிம்லா ரயில்வே, நீலகிரி மலை ரயில், மாதேரன் மலை ரயில்வே ஆகிய இடங்களில் அவை இயக்கப் படுகின்றன.

## உலகளாவிய பிரவசி ரிஷ்டா தளம் மற்றும் கைபேசி செயலி




- இந்தச் செயலியை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது உலகம் முழுவதும் வாழும் 3.12 கோடி இந்தியப் புலம் பெயர்ந்தோரை இணைக்க உதவும்.
- புதிதாக உருவாக்கப் பட்டுள்ள இந்தத் தளமானது இந்தியப் புலம்பெயர் உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கு உதவ இருக்கின்றது.
- இதில் PIOகள் (இந்திய வம்சாவளியினர்), NRIகள் (வெளிநாடு வாழ் இந்தியர்கள்) மற்றும் OCIகள் (வெளிநாடு வாழ் இந்தியர்கள்) ஆகியவை அடங்கும்.

## குஜராத்தில் உள்ள ராஜ்கோட்டில் எய்ம்ஸ்

- குஜராத்தின் ராஜ்கோட்டில் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இது பிரதான் மந்திரி சுவஸ்திய சுரக்சா யோஜனா என்ற திட்டத்தின் கீழ் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் நிறுவப் படுகின்றது.
- இதன் பணிகள் 2022 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ராஜ்கோட் நகரில் உள்ள எய்ம்ஸ் ஆனது நாட்டின் 16வது நிறுவனமாக இருக்கும்.
- 2019 ஆம் ஆண்டில் ஜார்க்கண்டின் தியோகர் நகரில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது கடைசியாக செயல்பாட்டிற்கு வந்த ஒரு எய்ம்ஸ் நிறுவனமாகும்.
- இந்த நிறுவனங்கள் ஒரு பாராளுமன்றச் சட்டத்தால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- இதில் முன்னோடி நிறுவனமான புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது 1956 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- அதன் பின்னர், மேலும் 22 நிறுவனங்கள் அறிவிக்கப் பட்டன.

## லைட் ஹவுஸ் (ஒளிரும் வீடு) திட்டங்கள்

- லைட் ஹவுஸ் திட்டங்கள் இந்தியாவில் புதிய தலைமுறைக்கான சிறந்த உலகளாவிய மாற்றுத் தொழில்நுட்பங்கள், பொருட்கள் மற்றும் செயல்முறைகள் முதன்முறையாக கட்டுமானத் துறையில் பெரிய அளவில் வரவுள்ளதை எடுத்துக் காட்டுகின்றன.
- இவை உலகளாவிய வீட்டுவசதித் தொழில்நுட்ப சவால்-இந்தியா (Global Housing Technology Challenge - GHTC) என்பதின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.
- 2019 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட இது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (நகரம்) என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது.
- GHTC ஆனது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது.
- இது குஜராத்தின் ராஜ்கோட், உத்தரப் பிரதேசத்தின் லக்னோ, மத்தியப் பிரதேசத்தின் இந்தூர், ஜார்க்கண்டின் ராஞ்சி, தமிழ்நாட்டின் சென்னை மற்றும் திரிபுராவின் அகர்தலா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும்.




## சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருதுகள் 2020 - 16வது பதிப்பு

- இது 2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறுமோ அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ வழங்கப் படுகிறது.
- இது ஹார்மனி அறக்கட்டளையின் ஒரு முன்னெடுப்பாகும்.
- ஹார்மனி அறக்கட்டளையானது சமூக நீதித்துறையில் செயல்படும் ஒரு சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.
- இதை டாக்டர் ஆபிரகாம் மத்தாய் அவர்கள் 2005 ஆம் ஆண்டில் மும்பையில் உருவாக்கினார்.
- இதுவே Missionaries of Charity (கருணைச் சபைகள்) எனும் அமைப்பின் உயர் தலைவர் சகோதரி பிரேமா அவர்களால் ஒப்புதல் அளிக்கப் பட்ட ஒரே விருதாகும்.
- Missionaries of Charity என்பது 1950 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் அன்னை தெரசா அவர்களால் துவங்கப் பட்ட ஒரு அமைப்பாகும்.
- இந்த ஆண்டில் இந்த விருதுகளுக்கான கருத்துரு 'Celebrating Compassion in Times of Covid' / கோவிட் காலத்தில் இரக்கக் குணத்தைக் கொண்டாடுதல் என்பதாகும்.
- இந்த ஆண்டு இந்த விருதினைப் பெற்றவர்கள் பின்வருமாறு
  - டாக்டர் அந்தோணி ஃபாசி (அமெரிக்கா)
  - தந்தை ஃபேபியோ ஸ்டீவனாஸி (மிலன், இத்தாலி)
  - கிறிஸ்டியன் ஃப்ராகாஸி மற்றும் அலெஸாண்ட்ரோ ரோமாயோலி (இத்தாலி)

- டாக்டர் பிரதீப் குமார் (சென்னை)
- ஐ.பி.எஸ் சஞ்சய் பாண்டே ( மகாராஷ்டிரா)
- விகாஸ் கண்ணா (மன்ஹாட்டன், அமெரிக்கா) மற்றும்.
- கே.கே.ஷைலஜா (சுகாதார அமைச்சர், கேரளா).

## இந்தியாவில் அவசர காலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல்

- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது (DGCI) "கோவிஷீல்டு" மருந்தினைக் கட்டுப்பாடு கொண்ட ஒரு அவசர காலப் பயன்பாட்டு ஒப்புதலுக்காக பரிந்துரை செய்துள்ளது.
- கோவிஷீல்டு தடுப்பு மருந்தானது இந்தியாவின் சீரம் மருந்து நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த ஒரு மருந்து நிறுவனமான ஆஸ்ட்ரா ஜெனேகா ஆகியவற்றினால் இணைந்து தயாரிக்கப் பட்டு உள்ளது.
- இந்தியாவில் இந்த மருந்தானது புனேவில் உள்ள சீரம் இந்திய நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டு சந்தைப் படுத்தப்பட உள்ளது.
- இந்தியாவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முதலாவது தடுப்பு மருந்து இதுவாகும்.
- இந்தியாவின் மத்திய மருந்துகள் தரநிர்ணயக் கட்டுப்பாட்டு அமைப்பானது பாரத் பயோடெக்கின் கொரானா வைரஸ் தடுப்பு மருந்தான கோவேக்ஸின் மருந்தின் மீதான அவசர காலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளிப்பதற்காக வேண்டி DGCI அமைப்பிற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- இதன் மூலம் வல்லுநர் குழுவிடமிருந்து சந்தைப்படுத்துதலுக்கான ஒப்புதலைப் பெற்ற இரண்டாவது தடுப்பு மருந்து பாரத் பயோடெக்கின் கோவேக்ஸின் மருந்து ஆகும்.
- இந்த 2 தடுப்பு மருந்துகளும் 2 அளவுகளில் கொடுக்கப்பட வேண்டும், மேலும் இவை 2 முதல் 8ºC வெப்ப நிலையில் சேமித்து வைக்கப்பட வேண்டும்.




## தான்சேன் சம்மான்

- 96வது தான்சேன் இசைத் திருவிழாவானது மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் நடத்தப் பட்டது.
- இந்தத் திருவிழாவானது அக்பரின் அவையில் இருந்த 9 அறிஞர்களில் ஒருவரான தான்சேன் என்பவருக்கு மரியாதை செலுத்துகின்றது.
- புகழ்பெற்ற சந்தூர் இசைக் கலைஞரான பண்டிட் சதீஷ் வியாஸ் என்பவருக்கு தான்சேன் சம்மான் விருதானது வழங்கப் பட்டுள்ளது.


- போபாலில் உள்ள அபினவ் கலா பரிசத் நிறுவனத்திற்கு ராஜா மான்சிங் தோமர் விருதானது வழங்கப் பட்டுள்ளது.



## மனித உரிமைகள் பிரிவு

- சமீபத்தில் இந்திய இராணுவமானது இந்தியாவின் படைத் தளபதியின் தலைமையில் ஒரு புதிய மனித உரிமைகள் பிரிவை உருவாக்கியுள்ளது.
- இந்தப் பிரிவானது அமைதி சீர்குலைந்த பகுதிகளில் இந்திய இராணுவத்தின் செயல்பாடுகளில் அதிக அளவிலான வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மை ஆகியவற்றிற்காக உருவாக்கப் பட்டுள்ளது.
- இராணுவத் தளபதி கௌதம் சவ்ஹான் அவர்கள் புது தில்லியில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் முதலாவது கூடுதல் மனித உரிமைகள் பிரிவு பொது இயக்குநராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

## விக்ரம் – 1




- ஐதராபாத்தில் உள்ள இந்திய விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனமான ஸ்கைரூட் விண்வெளி நிறுவனமானது கலாம்-5 எனப்படும் தனது முதலாவது திட ராக்கெட் உந்து நிலை அமைப்பை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இதன் மூலம், இந்தியாவின் முதலாவது தனியார் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு ராக்கெட்டான விக்ரம்-1 ஆனது செயல்பாட்டு நிலையை நோக்கி நெருங்கியுள்ளது.
- கலாம் -5 ஆனது விக்ரம்–1 ராக்கெட்டில் பொருத்தப்பட இருக்கும் அதே உந்து பொருள், பொருட்கள் மற்றும் இடைமுகம் ஆகியவற்றுடன் அதே விசைப் பொறியையும் பயன்படுத்துகின்றது.

- விக்ரம்-1 ராக்கெட் ஆனது மூன்று திட-திரவ எரிபொருள் நிலைகள் மற்றும் 1 திரவ-எரிபொருள் நிலை என 4 என்ஜின்களால் செயல்படுத்தப்படுகின்றது.

## லடாக்கில் வானிலை ஆய்வு மையம்

- மத்தியப் புவி அறிவியல் அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன் அவர்கள், சமீபத்தில் லடாக் ஒன்றியப் பிரதேசத்தில் ஒரு வானிலை ஆய்வு மையத்தைத் திறந்து வைத்தார்.
- லடாக்கில் அமைந்துள்ள முதல் வானிலை ஆய்வு மையம் இதுவாகும்.
- இது 3,500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்தியாவின் மிக உயர்ந்த வானிலை ஆய்வு மையமாகும்.
- கொல்கத்தா, குவஹாத்தி, மும்பை, புது தில்லி, சென்னை மற்றும் நாக்பூர் ஆகிய இடங்களில் ஆறு பிராந்திய வானிலை மையங்களை இந்திய வானிலை ஆய்வுத் துறை கொண்டுள்ளது.



## சாகர்மாலா கடல் விமான சேவைத் திட்டம்


- சில தேர்ந்தெடுக்கப்பட்ட வழித் தடங்களில் சாகர்மாலா கடல் விமான சேவைத் திட்டத்தை இந்திய அரசு தொடங்க உள்ளது.
- அகமதாபாத்தில் உள்ள கெவடியா மற்றும் சபர்மதி ஆற்றங்கரைக்கு இடையேயான கடல் விமானச் சேவையானது ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது.
- இது பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று திறந்து வைக்கப் பட்டது.
- தற்போது நாட்டில் செயல்படும் ஒரே கடல் விமானச் சேவை இதுவேயாகும்.
- முன்மொழியப் பட்டுள்ள வழித்தடங்கள் பின்வருமாறு
    - அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்
    - லட்சத் தீவுகள்
    - மும்பை
    - துவாரகா, குஜராத்
    - காண்ட்லா, குஜராத்
    - யமுனா நதிக்கரை, டெல்லி
    - கவுகாத்தி நதிக்கரை, அசாம்
    - உம்ரான்சோ நீர்த்தேக்கம், அசாம்

- கிந்த்சி அணை, மகாராஷ்டிரா மற்றும்
- எராய் அணை, மகாராஷ்டிரா ஆகும்.




## கொச்சி-மங்களூரு இயற்கை எரிவாயு குழாய்

- பிரதமர் நரேந்திர மோடி இந்தக் குழாய்த் திட்டத்தை ஜனவரி 5 ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்தக் குழாயின் நீளம் 444 கிலோமீட்டர் ஆகும்.
- இந்தக் குழாய் கேரளாவின் எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு மாவட்டங்கள் வழியாக சென்று கர்நாடகாவின் தட்சிணா கன்னட மாவட்டத்தில் உள்ள மங்களூருவில் சென்று முடிவடைகிறது.
- இது இந்திய எரிவாயு ஆணைய நிறுவனத்தால் செயல்படுத்தப் படுகின்றது.



## தில்லி தமிழ் அகாடமி

- தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்க தில்லி அரசானது தமிழ் அகாடமியை அமைத்துள்ளது.
- மேலும் இது முன்னாள் மாநகராட்சி கவுன்சிலர் மற்றும் தில்லி தமிழ் சங்கத்தின் தற்போதைய உறுப்பினரான N. ராஜாவை இந்த அகாடமியின் துணைத் தலைவராக நியமித்துள்ளது.
- 2004 ஆம் ஆண்டில் இந்தியாவில் செம்மொழியாக வகைப்படுத்தப்பட்ட முதல் மொழி தமிழ் ஆகும்.
- டெல்லி அரசு ஏற்கனவே சமஸ்கிருதம், உருது, இந்தி, பஞ்சாபி, மைதிலி மற்றும் போஜ்புரி மொழிகளுக்கான அகாடமிகளை நடத்தி வருகிறது.
- இந்தி, உருது, பஞ்சாபி மற்றும் ஆங்கிலம் ஆகியவை டெல்லி அரசின் அலுவல்பூர்வ மொழிகள் ஆகும்.

## தேசிய அளவியல் கருத்தரங்கம் 2021

- இது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் நிறுவப்பட்ட 75வது ஆண்டு கொண்டாட்டமான 2021 ஆம் ஆண்டு ஜனவரி 4, அன்று நடத்தப் பட்டது.
- இது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் - தேசிய இயற்பியல் ஆய்வகம் என்ற நிறுவனத்தால் தில்லியில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்த மாநாட்டிற்கான கருத்துரு “தேசத்தின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அளவியல்” என்பதாகும்.
- இந்நிகழ்வில் தேசிய அணுவியல் நேர அளவீட்டு முறை மற்றும் பாரதிய நிர்தேஷக் திரவியா ஆகியவற்றை பிரதமர் அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- 2.8 நானோ நொடிகள் என்னும் துல்லியத்துடன் இந்திய நிலையான நேரத்தை தேசிய அணுவியல் நேர அளவீட்டு முறை வழங்கும்.
- அவர் தேசிய சுற்றுச்சூழல் தரநிலை ஆய்வகத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.


## வேளாண் -ஹாக்கத்தான் 2020

- இது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் புதுமைகளை விரைவுபடுத்துவதற்கும் வேண்டி நடைபெற்ற ஒரு மிகப்பெரிய இணைய வழிக் கூட்டமாகும்.
- புதுடெல்லியின் பூசாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து வேளாண்மை, ஒத்துழைப்பு மற்றும் உழவர் நலத்துறையால் இது ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்த 2 மாத கால நிகழ்வு இந்திய வேளாண் வரலாற்றில் முதல் மற்றும் மிகப்பெரிய ஒரு இணைய வழி நிகழ்வாகும்.

## 4வது உலகளாவிய ஆயுர்வேத திருவிழா


- 4வது உலகளாவிய ஆயுர்வேத விழாவானது 2021 ஆம் ஆண்டின் மே மாதத்தில் கேரளாவின் கொச்சியில் நடைபெற உள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு ‘ஆயுர்வேத மருத்துவச் சுற்றுலா : இந்தியாவின் நம்பகத் தன்மையை உணர்தல்’ என்பதாகும்.

- இது உலகம் முழுவதும் எங்கும் நடத்தப் படாத மிகப்பெரிய ஒரு ஆயுர்வேதம் சார்ந்த நிகழ்வாக அமையும்.




## மாநிலங்களவை - குறைந்த எண்ணிக்கையிலான அமர்வுகள்

- மாநிலங்களவையில் எந்த ஒரு ஆண்டிலும் இல்லாத அளவாக 2020 ஆம் ஆண்டில் மிகக் குறைவாக, அல்லது 33 நாட்களில் மட்டுமே அவை நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளன.
- பட்ஜெட் கூட்டத் தொடர் மற்றும் மழைக்காலக் கூட்டத் தொடர் ஆகிய நாடாளுமன்றத்தின் இரு தொடர்களின் அமர்வுகளும் கோவிட்-19 நோய்த் தொற்றின் காரணமாக குறைக்கப்பட்டன.
- 31 அமர்வுகள் எனத் திட்டமிடப் பட்டிருந்த பட்ஜெட் கூட்டத் தொடரானது 23 அமர்வாகக் குறைக்கப் பட்டது.
- அதே போன்று, மழைக்காலக் கூட்டத் தொடரானது கடுமையான கட்டுப்பாடுகளின் காரணமாக 18 அமர்வுகள் மட்டுமே என திட்டமிடப் பட்டிருந்தது, ஆனால் 10 அமர்வுகள் மட்டுமே நடத்தப் பட முடிந்தது.
- ஒரு ஆண்டில் 50 நாட்களுக்கும் குறைவாக மேலவை நடவடிக்கைகள் நடைபெற்றது இதுவரை 3 முறை மட்டுமே.



- 1999 ஆம் ஆண்டில் 48 நாட்களும் 2004 ஆம் ஆண்டில் 46 நாட்களும் 2008 ஆம் ஆண்டில் 46 அமர்வுகளும் நடைபெற்றன.
- ஆனால் 2020 ஆம் ஆண்டில், மாநிலங்களவையின் செயல்திறனானது 82.7% ஆக இருந்தது, இது கடந்த 11 ஆண்டுகளில் மிக அதிக வருடாந்திர செயல்திறன் ஆகும்.
- பட்ஜெட் கூட்டத் தொடரின் போது 12 மசோதாக்களையும் மழைக்காலக் கூட்டத் தொடரின் போது 27 மசோதாக்களையும் சேர்த்து 2020 ஆம் ஆண்டில் மாநிலங்களவையினால் மொத்தம் 39 மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

## உலகின் நீளமான இரயில் நிலைய நடைமேடை

- 1400 மீட்டர் நீளம் மற்றும் 10 மீட்டர் அகலத்துடன் உலகின் மிக நீளமான இரயில்வே நிலைய நடைமேடை கர்நாடகாவின் ஹுப்ளி இரயில் நிலையட்டில் அமைக்கப்பட உள்ளது.
- தென் மேற்கு இரயில்வேயின் தலைமையகம் ஹுப்ளி ஆகும்.
- தற்பொழுது செயல்பாட்டில் உள்ள மிக நீண்ட இரயில்வே நடைமேடையைக் கொண்டு இருப்பது (1366 மீட்டர்) உத்தரப் பிரதேசத்தில் உள்ள கோரக்பூர் இரயில்வே நிலையம் ஆகும். இதில் 2வது இடத்தில் (1180 மீட்டர்) இருப்பது கேரளாவில் உள்ள கொல்லம் இரயில் நிலையமாகும்.




## தாதா சாஹிப் பால்கே தென்னக விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டிற்கான தாதா சாஹிப் பால்கே தென்னக விருதுகளுக்கான வெற்றியாளர்கள் தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாள மொழித் திரைப்படங்களில் இருந்து அறிவிக்கப் பட்டுள்ளனர்.
- தமிழ்த் திரைப்படத் துறையிலிருந்து, அசுரன் திரைப்படத்தில் தனது அபார நடிப்பிற்காக சிறந்த நடிகர் என்ற விருதை தனுஷ் பெற்றுள்ளார். மேலும் ராட்சசி திரைப்படத்திற்காக சிறந்த நடிகைக்கான விருதை ஜோதிகா பெற்றுள்ளார்.
- பார்த்திபன் அவர்கள் ஒத்த செருப்பு அளவு 7 என்ற புகழ்பெற்ற அவருடைய திரைப்படத்திற்காக சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றுள்ளார்.
- அஜித் அவர்கள் தமிழ்த் திரைப்படங்களில் மிகவும் பல்துறைசார் நடிகர் என்ற விருதைப் பெற்றுள்ளார்.




| DADASAHEB PHALKE AWARDS SOUTH 2020 | |
|---|---|
| TAMIL | |
| Best Film | To Let |
| Best Actor | Dhanush ( Asuran) |
| Best Actress | Jyothika (Raatchasi) |
| Best Director | R Parthiepan(Oththa Seruppu Size 7) |
| Best Music Director | Anirudh Ravichander |
| Most Versatile Actor | Ajith Kumar |

## அண்டார்டிகாவிற்கு 40வது அறிவியல் பயணம்

- இந்தியா அண்டார்டிகாவிற்கு 40வது அறிவியல் பயணத்தைத் துவங்கியுள்ளது.
- இது இக்கண்டத்திற்கான இந்தியாவின் 40 ஆண்டுகால அறிவியல் முயற்சியைக் குறிக்கிறது.
- கோவாவிலிருந்து ஒரு பனி வகுப்புக் கப்பலான எம்.வி.வாசிலி கோலோவ்னின் (ice-class vessel MV Vasiliy Golovnin) என்ற கப்பல் மூலம் இந்தப் பயணம் தொடங்கப் பட்டு உள்ளது.
- இந்தியா தனது அண்டார்டிக் ஆராய்ச்சிகளை 1981 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்தியா அண்டார்டிகா கண்டத்தில் மைத்ரி, தட்சிண கங்கோத்ரி மற்றும் பாரதி என்று 3 நிரந்தர ஆராய்ச்சி தளங்களைக் கட்டியுள்ளது.
- தற்போது, அண்டார்டிகாவில் பாரதி மற்றும் மைத்ரி என்ற இரண்டு செயல்பாட்டு நிலையங்களை இந்தியா கொண்டுள்ளது.
- கோவாவில் உள்ள துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையமானது மொத்த இந்திய அண்டார்டிக் திட்டத்தையும் நிர்வகிக்கின்றது.



## மிதக்கும் சூரிய ஒளி ஆற்றல் திட்டம்

- உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி ஆற்றல் திட்டத்தை இந்திய அரசு செயல்படுத்த உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் நர்மதா ஆற்றில் உள்ள ஓம்காரேஷ்வர் என்ற அணையில் இது கட்டப்பட உள்ளது.
- மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையம் என்பது நீரின் மேற்பரப்பில் மிதக்கும் கட்டமைப்புகளில் நிறுவப்படும் சூரிய ஒளி தகடுகளைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டத்திற்கான நிதி உதவியை சர்வதேச நிதிக் கழகம் மற்றும் உலக வங்கி வழங்கவுள்ளன.



## மத்திய எழில்முற்றத் திட்டம்


- மத்திய எழில்முற்றத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் புதுதில்லியில் உள்ள லூத்தேயன் தோட்டத்தில் உள்ள 86 ஏக்கர் நிலத்தைப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



- இதில் இந்திய அரசாங்கத்தின் முக்கியக் கட்டமைப்புகளான ராஷ்டிரபதி பவன், பாராளுமன்றம், இந்திய நுழைவு வாயில், வடக்கு மற்றும் தெற்கு தொகுதி அலுவலங்கள் ஆகியவை அடங்கும்.
- தற்போதைய பாராளுமன்றமானது 1927 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கட்டப் பட்டது.

## வரைவு ஆர்க்டிக் கொள்கை


- சமீபத்தில் இந்திய அரசானது வரைவு ஆர்க்டிக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையமானது ஆர்க்டிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு தலைமை நிறுவனமாகச் செயல்பட உள்ளது.
- இந்தக் கொள்கையானது ஆர்க்டிக்கில் வசிப்பவர்களை, அதிலும் குறிப்பாக அங்கு வாழும் சமூகத்தினரை இமயமலைப் பகுதிகளில் வாழ்பவர்களுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆர்க்டிக் பகுதியின் வளங்கள் ஆய்வு செய்யப் பட்டு, அவை நீடித்த அளவில் பயன்படுத்தப் படுவதை இந்தக் கொள்கையானது உறுதி செய்கின்றது.
- இந்தக் கொள்கையின்கீழ், இந்தியாவானது ஆர்க்டிக் ஆணையத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்படுவதை உறுதி செய்கின்றது.
- இந்தியாவானது 2013 ஆம் ஆண்டில் ஆர்க்டிக் ஆணையத்தில் பார்வையாளர் நாடு என்ற தகுதியினைப் பெற்றது.
- இந்தியாவின் பார்வையாளர் நாடு என்ற தகுதிநிலையானது 2018 ஆம் ஆண்டில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- ஆங்கிலேயே ஆட்சியின் கீழ் இந்தியாவானது 1920 ஆம் ஆண்டில் ஸ்வால்பேர்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் இந்தியாவானது நார்வேயின் ஸ்வால்பேர்டின் நை ஆல்சந்த் என்ற இடத்தில் "ஹிமாத்ரி" எனப்படும் ஆராய்ச்சித் தளத்தை ஏற்படுத்தியுள்ளது.




## மேற்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடம்

- மேற்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடத்தின் 306 கி.மீ நீளமுள்ள புதிய ரெவாரி - புதிய மதார் என்ற பிரிவை பிரதமர் திறந்து வைத்தார்.

- இந்தப் புதிய பாதையானது ராஜஸ்தானின் மதார் மற்றும் ஹரியானாவின் ரெவாரி பகுதிகளுக்கு இடையேயான வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படும்.
- இந்த நிகழ்வின் போது, 1.5 கி.மீ நீளமுள்ள உலகின் முதல் இரட்டை அடுக்கு கொண்ட சரக்குப் பெட்டக இரயிலையும் பிரதமர் மோடி அவர்கள் துவக்கி வைத்தார்.
- இது ஹரியானாவின் அட்டெலி முதல் ராஜஸ்தானின் கிஷன்கர் வரை மின்சார இழுவை மூலம் இயக்கப் படுகிறது.
- மேற்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடமானது உத்தரப் பிரதேசத்தின் தாத்ரி முதல் மகாராஷ்டிராவின் மும்பை வரை செல்கிறது.
- இந்தப் பாதையானது உத்தரப் பிரதேசம், தில்லி தேசிய தலைநகரப் பகுதி, ஹரியானா, ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் வழியாக செல்கிறது.
- மேற்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடமானது உத்தரப் பிரதேசத்தின் குர்ஜாவில் கிழக்குப் பிராந்தியத்திற்கான பிரத்தியேக சரக்குத் தடத்தைச் சந்திக்கிறது.





## செங்குத்து மற்றும் கிடைமட்ட இடஒதுக்கீடுகள்

- சௌரவ் யாதவ் வழக்கின் மூலம், செங்குத்து மற்றும் கிடைமட்ட ஆகிய இரு வகை இடஒதுக்கீடுகளுக்கிடையேயான இருதிசை தாக்கத்தின் மீது சட்டத்தின் நிலைமை குறித்த ஒரு நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.
- இவ்வழக்கில் உத்தரப் பிரதேச அரசின் உத்தரவிற்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- செங்குத்து இடஒதுக்கீடு என்பது பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டைக் குறிக்கிறது.
- கிடைமட்ட இடஒதுக்கீடு என்பது பெண்கள், முதியோர்கள், மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற இதர வகைப் பயனாளிகளுக்கு செங்குத்து இடஒதுக்கீட்டில் வழங்கப் படும் சம வாய்ப்பைக் குறிக்கிறது.

## ராஸ்திரிய காமதேனு ஆயோக்

- இது அதிக அதிகாரம் பெற்ற ஒரு நிரந்தர ஆலோசனைக் குழுவாகும்.
- பூர்வீக பசு இனங்களின் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் மரபணு மேம்பாடு ஆகியவற்றுக்கான திட்டங்களை உருவாக்க இது மத்திய அரசுக்கு உதவுகிறது.
- இது ராஷ்டிரிய கோகுல் திட்டத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக செயல்படும்.
- நவீன மற்றும் விஞ்ஞான அடிப்படையில் கால்நடை வளர்ப்பை ஒழுங்கமைப்பதற்கும், அந்த இனங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வேண்டி இது அமைக்கப் பட்டுள்ளது.




## இந்தியத் தர நிர்ணய முகமை (BIS)

- இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 06 அன்று தனது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இது மத்திய நுகர்வோர் விவகாரம், உணவு & பொது விநியோகத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியத் தேசியத் தர நிர்ணய அமைப்பாகும்.
- இந்தியத் தர நிர்ணய முகமைச் சட்டம், 2016 என்ற சட்டமானது BIS முகமையைத் தேசியத் தர நிர்ணய அமைப்பாக மாற்றியது.




## இந்தியாவின் நீள் வெட்டு ரீதியிலான வயது முதிர்ச்சி தொடர்பான ஆய்வு

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் இந்தியாவின் நீள் வெட்டு ரீதியில் (Longitudinal Ageing Study of India - LASI) வயது முதிர்ச்சி தொடர்பான ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளார்.
- இது இந்தியாவின் மக்கள் தொகையில் மூத்த மக்களால் ஏற்படும் பொருளாதார, சுகாதார மற்றும் சமூகத் தீர்வுகள் மற்றும் விளைவுகள் குறித்த அறிவியல்சார் ஆய்வின் முழு அளவிலான ஒரு தேசிய ஆய்வாகும்.
- இந்த அறிக்கையானது முதியோர்களுக்கு வேண்டி தேசிய மற்றும் மாநில அளவிலான திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கான ஒரு அடிப்படையை அளிக்க உள்ளது.
- இது மத்திய சுகாதார & குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய முதியவர்கள் சுகாதார நலத் திட்டத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது மும்பையில் உள்ள சர்வதேச மக்கள் தொகை அறிவியல் மையத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- முதியோர்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கான இந்தியாவின் முதலாவது மற்றும் உலகின் மிகப்பெரிய ஆய்வு இதுவாகும்.
- இது இந்தியாவின் அனைத்து மாநிலங்கள் (சிக்கிம் மாநிலத்தைத் தவிர்த்து) மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது.

### *முக்கிய அம்சங்கள்*

- இந்தியாவில் 2050 ஆம் ஆண்டில் 319 மில்லியன் அளவில் மூத்தக் குடிமக்கள் இருப்பர், இது 2011 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பினால் அடையாளம் காணப் பட்டுள்ள முதியோர்களை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- இதில் 75% முதியோர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் நாள்பட்ட நோய்களாலும் 40% முதியோர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் உடல் குறைபாடுகளாலும் 20% முதியோர்கள் மன நலமின்மையாலும் பாதிக்கப் பட்டு இருப்பர்.



## EDUCON 2020

- மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அவர்கள் சர்வதேச அகாந்த் (Akhand) கருத்தரங்கான "EDUCON 2020" என்ற ஒன்றைக் காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
- இந்தக் கருத்தரங்கிற்கான கருத்துரு, "உலக அமைதியை மீட்டெடுப்பதற்காக வேண்டி இளைஞர்களை மாற்றுவதற்கான ஒரு கல்வியைக் கொண்டு சேர்த்தல்" என்பதாகும்.
- இந்தக் கருத்தரங்கானது பஞ்சாப் மத்தியப் பல்கலைக்கழகம் மற்றும் உலகக் கல்வி ஆராய்ச்சிக் கூட்டமைப்பு ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## 16வது பிரவசி பாரதிய திவாஸ் (PBD)

- இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 09 அன்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப் பட்டது.
- இந்த ஆண்டில் இதற்கான கருத்துரு, "சுய சார்பு இந்தியாவிற்குப் பங்களித்தல்" என்பது ஆகும்.
- இந்த நிகழ்வானது தலைமை விருந்தினரான சுரினாமின் அதிபரான சந்திரிகா பிரசாத் சந்தோகி என்பவரின் தலைமை உரையையும் உள்ளடக்கியுள்ளது.
- இது இந்தியாவின் வளர்ச்சியில் வெளிநாடு வாழ் இந்தியச் சமூகத்தின் பங்களிப்பைக் குறிப்பதற்காக ஜனவரி 09 அன்று அனுசரிக்கப்ப டுகின்றது.
- 1915 ஆம் ஆண்டில் இந்த தினத்தன்று காந்தி அவர்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார்.
- PBD மாநாடுகள் 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தப் பட்டன.
- 2015 ஆம் ஆண்டு முதல், PBD ஆனது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுமாறு இதன் செயல்வடிவத்தில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.





## தொற்றுநோய் எதிர்கொள்தலுக்கான புத்தாக்கக் கூட்டிணைவு ஆய்வகம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் மற்றும் புவி அறிவியல் அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் அவர்கள் சமீபத்தில் CEPI (Coalition for Epidemic Preparedness Innovations) ஆய்வகத்தைத் திறந்து வைத்தார்.
- CEPI ஆய்வகத்தின் மையப்படுத்தப்பட்ட வலையமைப்பு ஆய்வகங்களாக உலகளவில் நிறுவப்பட்டுள்ள ஏழு ஆய்வகங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இது ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் உள்ள Translational Health Science & Technology Institute' என்ற நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தால் இந்த ஆய்வகம் அங்கீகாரம் பெற்றுள்ளது.
- அனைத்து கோவிட் - 19 தடுப்பூசி உருவாக்குநர்களும் இந்த அமைப்பைத் தடுப்பூசி செலுத்தப்படுவோரின் நோயெதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கு வேண்டி இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- CEPI என்பது சமுதாய அக்கறை கொண்ட பொது, தனியார் மற்றும் குடிமை அமைப்புகளுக்கிடையேயான ஒரு புதுமையான கூட்டாண்மை ஆகும்.
- இது எதிர்கால தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசிகளை உருவாக்கிட வேண்டி 2017 ஆம் ஆண்டில் டாவோஸில் தொடங்கப்பட்டது.

## NFHS 5 கண்டுபிடிப்புகள்

- தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு 5 (NFHS - National Family Health Survey 5) மீதான தவறான கண்டுபிடிப்புகளை ஆராய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது ஒரு தொழில்நுட்ப நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இது மக்கள் தொகை, இனப்பெருக்கம் மற்றும் குழந்தை ஆரோக்கியம், குடும்ப நலன், ஊட்டச்சத்து பற்றிய முக்கிய குறிகாட்டிகளின் உண்மைத் தரவுகளை வெளியிட்டு உள்ளது.
- NFHS 5 ஆய்வின் முதல் கட்ட ஆய்வானது 2019-20 காலகட்டத்தில் 22 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கி இருக்கின்றது.
- NFHS ஆய்வின் நான்கு சுற்று ஆய்வுகள் (1992–93, 1998–99, 2005–06 மற்றும் 2015–16) இந்தியாவில் வெற்றிகரமாக முடிக்கப் பட்டுள்ளன.
- NFHS ஆய்வின் அனைத்துச் சுற்றுகளும் மும்பையில் உள்ள சர்வதேச மக்கள் தொகை அறிவியல் நிறுவனத்தால் நடத்தப் படுகிறது.



### *முக்கியக் கண்டுபிடிப்புகள்*

- ❖ மாற்று நிலை கருவுறுதலின் விகிதமான 2.1 ஆனது கணக்கெடுக்கப்பட்ட 22 மாநிலங்களில் 19 மாநிலங்கள்/ ஒன்றியப் பிரதேசங்களில் அடையப் பட்டுள்ளது.
- ❖ மணிப்பூர் (2.2), மேகாலயா (2.9) மற்றும் பீகார் (3.0) ஆகிய 3 மாநிலங்களில் மட்டுமே மொத்த கருவுறுதல் விகிதமானது தற்போதைய மாற்று நிலை விகிதங்களை (replacement levels) விட அதிகமாக உள்ளது.
- ❖ ஒட்டு மொத்தக் கருத்தடை பரவல் விகிதமானது இமாச்சலப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் (74%) அதிகமாக உள்ளது.
- ❖ நாகாலாந்து, மேகாலயா மற்றும் அசாம் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் முழுமையாக நோய்த் தடுப்பாற்றல் கொண்டிருக்கிறார்கள்.
- ❖ சிக்கிம், அசாம், கோவா மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகியவை பிறந்த குழந்தை இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் மற்றும் ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்பு விகிதம் ஆகியவற்றில் சரிவைக் கண்டுள்ளன.
- ❖ மேகாலயா, மணிப்பூர் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றில் பிறந்த குழந்தை இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் மற்றும் ஐந்து வயதுக்கு உட்பட்டோர் இறப்பு விகிதம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் குழந்தை இறப்புகள் அதிகரித்துள்ளன.
- ❖ கணக்கெடுக்கப்பட்ட அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில், பீகார் மாநிலம் மூன்று பிரிவுகளிலும் ஒரு வயதுக்குட்பட்ட மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதத்தில் மிக அதிகமாக இருப்பதைக் காட்டியுள்ளது, அதே நேரத்தில் மிகக் குறைந்த இறப்பு விகிதம் கேரளாவில் பதிவாகியுள்ளது.
- ❖ பெரும்பாலான இந்திய மாநிலங்களில் ஒரு வயதுக்குட்பட்ட மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்புகளானது குறைந்துள்ளது.
- ❖ பெரும்பான்மையான மாநிலங்கள் 952 அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் சாதாரண பாலின விகிதத்தைக் கொண்டு உள்ளன.
- ❖ இது தெலுங்கானா, இமாச்சலப் பிரதேசம், கோவா, தாத்ரா நகர் ஹவேலி & டையு டாமன் ஆகிய இடங்களில் 900 என்ற எண்ணிக்கைக்குக் கீழே உள்ளது.
- ❖ 2014 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் பிறந்த குழந்தைகள் முந்தைய தலைமுறையை விட அதிகமாக ஊட்டச்சத்து குறைபாட்டைக் கொண்டுள்ளனர்.
- ❖ தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு 3 (2005-06) மற்றும் தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு 4 (2015-16) ஆகியவற்றுக்கு இடையில் குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டில் இந்தியா முன்னேற்றம் கண்டாலும், நாடு இப்போது குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படையில் மீண்டும் மோசமான நிலைக்குத் திரும்பியுள்ளது.
- ❖ அதிக அல்லது மிக உயர்ந்த இரத்தச் சர்க்கரை உள்ள ஆண்களின் சதவீதம் அதிக அளவில் கேரளாவிலும் (27%), அதைத் தொடர்ந்து கோவாவிலும் (24%) உள்ளது.

## AGMUT பிரிவில் ஜம்மு-காஷ்மீர்

- ❖ மத்திய அரசானது அகில இந்தியச் சேவைகளுக்கான ஜம்மு-காஷ்மீர் அதிகாரிகளை AGMUT (Arunachal Pradesh, Goa, Mizoram, and Union Territory) - அருணாச்சலப் பிரதேசம், கோவா, மிசோரம் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகிய பணியிடப் பிரிவுடன் இணைத்துள்ளது.

- ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019 என்ற சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு அவசரச் சட்டம் மூலம் இது செய்யப்பட்டது.
- இந்த நடவடிக்கையானது குறிப்பிட்டுள்ள ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள் ஜம்மு-காஷ்மீரில் பணிபுரிய அனுமதிக்கும்.
- அகில இந்தியச் சேவைகளானது ஐபிஎஸ், ஐஏஎஸ் மற்றும் ஐஎஃப்ஓஎஸ் அதிகாரிகளை உள்ளடக்கியதாகும்.

## குடிமக்களை மையமாகக் கொண்ட சீர்திருத்தங்கள்

- மத்தியப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகளுக்கு 1,004 கோடி ரூபாய் அளவிலான கூடுதல் நிதி உதவியை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- மூலதனச் செலவினங்களுக்காக வேண்டி மாநிலங்களுக்கு என்று புதிதாக தொடங்கப் பட்ட சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் இது வழங்கப்படுகிறது.
- இரு மாநிலங்களும் குடிமக்களை மையமாகக் கொண்ட நான்கு சீர்திருத்தங்களில் மூன்றை நிறைவு செய்துள்ளன.
- இவை ஒரு நாடு ஒரே ரேஷன் அட்டை சீர்திருத்தங்கள், எளிதில் வணிகம் தொடங்குவதற்கான சீர்திருத்தங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை நிறைவு செய்துள்ளன.
- 4வது சீர்திருத்தம் பயன்பாட்டுச் சீர்திருத்தம் மற்றும் மின் துறை சீர்திருத்தம் ஆகும்.




## NCAVES இந்தியா மன்றம் 2021


- NCAVES (Natural Capital Accounting and Valuation of the Ecosystem Services) என்றால் இயற்கை மூலதனக் கணக்கியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளின் மதிப்பீடு என்பதாகும்.
- இது புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.

- இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- மற்ற 4 நாடுகள் பிரேசில், சீனா, தென்னாப்பிரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகியனவாகும்.
- இந்தத் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியளிக்கிறது.




## இரயில்வேயின் அதிகபட்ச வேகம்

- மத்திய இரயில்வேத் துறை அமைச்சகமானது 1280 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஒரு மணி நேரத்திற்கு 130 கிலோ மீட்டர் வேகம் என்ற அளவில் இந்திய இரயில்களின் வேகததைக் கணிசமாக அதிகரித்துள்ளது.
- இந்த அதிகரிப்பானது தங்க நாற்கரம் – தங்க எதிர்கோண வழிப் பாதையில் (GQ – GD) 1612 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- குறிப்பிடப்பட்டுள்ள இந்த வழித்தடமானது துவ்வாடா - விஜயவாடா பிரிவைத் தவிர தெற்கு மத்திய இரயில்வேயில் உள்ள GQ – GD பாதை முழுவதையும் உள்ளடக்க உள்ளது.
- தங்க நாற்கரத் திட்டம் (GQ – Golden Quadrilateral) என்பது இந்தியாவின் மிக முக்கியமான தொழிற்துறை, வேளாண் மற்றும் கலாச்சார மையங்களை இணைக்கும் ஒரு தேசிய நெடுஞ்சாலை அமைப்பாகும்.
- இது இந்தியாவின் 4 மிக முக்கிய மெட்ரோ நகரங்களான தில்லி (வடக்கு), கொல்கத்தா (கிழக்கு), மும்பை (மேற்கு), சென்னை (தெற்கு) ஆகியவற்றை இணைத்து நாற்கர வடிவத்தை உருவாக்குகின்றது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய நெடுஞ்சாலைத் திட்டம் மற்றும் உலகின் 5வது மிகப்பெரிய திட்டம் இதுவாகும்.
- இந்திய இரயில்வேயின் 18 மண்டலங்களில் தெற்கு மத்திய இரயில்வேயும் ஒன்றாகும்.
- இது தெலுங்கானா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பரவியுள்ளது.
- இதன் தலைமையகம் செகந்திராபாத்தில் உள்ளது.





## 2021 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினர்

- சுரிநாமின் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அதிபரான சந்திரகாபிரசாத் சந்தோகி அவர்கள் 2021 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார்.
- இதற்கு முன்பு சுரிநாமின் அதிபர் பிரவசி பாரதிய திவாஸ் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.
- ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரதமரான போரிஸ் ஜான்சனின் இந்தியப் பயணம் ரத்து செய்யப் பட்டுள்ளதைத் தொடர்ந்து இவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார்.
- சுரிநாம் இதற்கு முன்னர் டச்சு நாட்டின் காலனியாக இருந்தது.
- இங்கு இந்திய வம்சாவளி மக்கள் மிகப்பெரிய பூர்வக்குடி குழுக்களாக உள்ளனர்.
- சுரிநாம் ஆனது தென் அமெரிக்காவின் வடகிழக்கு அட்லாண்டிக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு நாடாகும்.

## இந்தியாவின் கோவிட் – 19 தடுப்பூசி இயக்கம்


- இந்தியாவானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதியிலிருந்து உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியது.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 2 தடுப்பூசிகளுக்கு அவசர காலப் பயன்பாட்டு ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகமானது கோவிஷீல்டு மற்றும் கோவேக்ஸின் ஆகிய 2 தடுப்பு மருந்துகளுக்கு அவசர காலப் பயன்பாட்டு ஒப்புதலை வழங்கியுள்ளது.
- மத்திய அரசானது இந்த இயக்கத்தின் கீழ் 30 கோடி மக்களுக்கு தடுப்பூசி வழங்க முடிவு செய்துள்ளது.
- தொடக்கத்தில் இது சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 50 வயதிற்கும் மேற்பட்ட மக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளது.

- பயனாளிகளுக்கு ஆக்ஸ்போர்டு - ஆஸ்ட்ராஜெனேகாவின் கோவிஷீல்டு மற்றும் பாரத் பயோடெக்கின் கோவேக்சின் ஆகிய 2 தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன.
- கோவிஷீல்டு தடுப்பூசியானது ரூ.200 (1 தடுப்பூசி) என்ற விலையில் கிடைக்கப் பெற உள்ளது.
- நிகழ் நேரத் தகவலானது ஒரு தனித்துவ டிஜிட்டல் தளமான "கோ-வின்" என்ற தடுப்பூசி மேலாண்மை அமைப்பில் கிடைக்கப் பெறும்.
- இது கோவிட் தடுப்பு மருந்து நுண்ணறிவு அமைப்பு என்று பெயரிடப்பட்ட ஒரு டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தளமாகும்.
- இதற்காக மக்கள் தாங்களாகவே கோ-வின் தளம் அல்லது செயலியில் பதிவு செய்ய வேண்டும்.




## தேசிய இளைஞர் நாடாளுமன்றம்

- பிரதமர் அவர்கள் தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.
- இது 18 வயது முதல் 25 வயதுக்குட்பட்டவர்களின் கருத்தைக் கேட்பதற்காக வேண்டி ஒருங்கிணைக்கப் பட்டது.
- இது சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக ஜனவரி 12 அன்று நடத்தப்பட்டது.
- மேலும் இந்திய அரசானது சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடுகின்றது.
- முதலாவது தேசிய இளைஞர் நாடாளுமன்றமானது "புதிய இந்தியாவின் குரலாக இரு, தீர்வுகளைக் கண்டுபிடி மற்றும் கொள்கைகளுக்குப் பங்களி" என்ற கருத்துருவின் கீழ் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய சேவைத் திட்டமானது தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தை ஒருங்கிணைக்கின்றது.




## அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள் (ATL)

- சமீபத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது நாடு முழுவதும் 100 அடல் மேம்படுத்து ஆய்வகங்களை ஏற்று நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.
- நிதி ஆயோக் ஆனது ATL திட்டத்தை (Atal Tinkering Labs) ஏற்படுத்தியுள்ளது.
- ATL ஆய்வகங்கள் அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- அடல் புத்தாக்கத் திட்டமானது நாடு முழுவதும் தொழில் முனைவு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

## குடியரசு தின சிறப்பு விருந்தினர் 2021

- 2021 ஆம் ஆண்டின் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக வெளிநாட்டுத் தலைவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.
- 50 ஆண்டுகளுக்கும் மேலாக குடியரசு தின அணிவகுப்பில் எந்தவொரு வெளிநாட்டுத் தலைவரும் பங்கேற்காதது இதுவே முதல் முறையாகும்.

## பாரம்பரிய பாதுகாப்புக் குழு

- ஒரு புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை நிர்மாணிக்க பாரம்பரிய பாதுகாப்புக் குழுவானது தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- இது நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.
- பாரம்பரியக் கட்டிடங்களைப் பாதுகாப்பதற்காக டெல்லி கட்டிட சட்ட விதிகள் 1983 என்ற சட்டத்தின் விதிகளின் கீழ் இது அமைக்கப் பட்டுள்ளது.
- டெல்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் மட்டுமே இந்தச் சட்டங்களால் நிர்வகிக்கப் படுகின்றன.

## அனைத்துப் பெண்கள் விமான ஓட்டுனர் குழு

- ஏர் இந்தியாவானது சமீபத்தில் அனைத்துப் பெண்கள் விமான ஓட்டுனர் குழுவால் இயக்கப் படும் ஒரு மிக நீண்ட இடை விடாத விமானத்தை இயக்கியது.
- விமானப் பாதையாக துருவப் பாதையில் பறப்பதன் மூலம் எரிபொருள் நுகர்வு, பறக்கும் நேரம் மற்றும் கார்பன் தடம் ஆகியவற்றை இந்தப் புதிய பாதையானது கட்டுப்படுத்துகிறது.

- ❖ இந்த விமானம் ஏர் இந்தியாவின் போக்குவரத்துப் பாதைகளில் நீண்ட தூரமாக சுமார் 14,000 கிமீ (8,698 மைல்) பயணம் செல்லக் கூடியது ஆகும், மேலும் இது இந்தியாவிலிருந்து சென்று மீண்டும் நாடு திரும்பும் வகையில் மிக நீண்ட நேரம் பயணம் செல்லும் ஒரு விமானமாகும் (தோராயமாக 16 மணிநேரம்).
- ❖ இதில் கேப்டன் சோயா அகர்வால், கேப்டன் பாபகரி தன்மாய், கேப்டன் அகன்ஷா சோனாவாரி மற்றும் கேப்டன் சிவானி மன்ஹாஸ் ஆகிய நான்கு பெண்கள் அடங்குவர்.
- ❖ இவர்கள் 17 மணி நேர அளவிற்கு விமானப் பயணம் மேற்கொண்டனர்.
- ❖ இந்த விமானப் பயணம் அமெரிக்காவின் சான் பிரான்சிஸில் தொடங்கப்பட்டது.
- ❖ இது பெங்களூருவில் உள்ள கெம்பகவுடா சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது.
- ❖ பறக்கும் தூரத்தைப் பொறுத்த வரை, இந்தப் பாதை உலகின் முதல் 10 மிக நீண்ட விமானப் பாதைகளில் ஒன்றாகும்.
- ❖ உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான அளவில் பெண் விமானிகளை ஏர் இந்தியா கொண்டுள்ளது.




## காயகல்ப் விருதுகள் 2019-20

- ❖ இந்த விருதுகள் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் வழங்கப் படுகின்றன.
- ❖ இவை உயர் தரத்துடன் சேர்த்து சுகாதாரமாக மற்றும் சுத்தமாக விளங்கும் சுகாதார நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப் படுகின்றது.
- ❖ இந்த விருதானது 1000 படுக்கைகளுக்கும் மேல் உள்ள மருத்துவமனைகள் அல்லது தொகுதி ஏ என்ற பிரிவைச் சேர்ந்த மத்திய அரசு சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப் படுகின்றது.
- ❖ ஜம்மு காஷ்மீரில் உள்ள ரியாஸி மாவட்ட மருத்துவமனைக்கு முதல் பரிசானது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ ஜவஹர்லால் நேரு முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ஜிப்மர்) இத்திட்டத்தின் கீழ் 2வது பரிசானது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ புவனேஸ்வரில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது தூய்மைக்காக இவ்விருதுகளின் பிரிவு பி என்பதின் கீழ் சிறந்த மத்திய அரசு மருத்துவமனை என்ற பரிசைப் பெற்றுள்ளது.

## 30வது தேசிய ஆற்றல் பாதுகாப்பு விருதுகள் 2020

- இந்த விருதானது இந்திய அரசின் மத்திய மின்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஆற்றல் செயல்திறன் முகமையினால் நிறுவப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது, தன்னார்வ அடிப்படையிலான ஒரு உயர்தர காட்சிப்படத் தொலைக்காட்சி மற்றும் காற்றழுத்திகளுக்கான தரங்கள் மற்றும் குறியிடல் திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- மேலும் "சாத்தி" (SAATHEE) என்ற ஒரு தளமும் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஆற்றல் செயல்திறன் மீதான வருடாந்திர இலக்குகள் மற்றும் முன்னேற்றம் குறித்த மாநில வாரியான செயல்பாடுகள் எனும் ஒரு மேலாண்மை தகவல் அமைப்புத் தளமாகும்.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு முன்னெடுப்பாகும்.
- ஒடிசாவின் பாரதீப் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமானது "பெட்ரோலியம் சுத்திகரிப்புத் துறையில்" முதல் பரிசைப் பெற்றுள்ளது.




## பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 3.0

- இது 2020-21 ஆம் ஆண்டுத் திட்டக் காலக் கட்டத்தின் போது 8 இலட்சம் நபர்களுக்கு பயிற்சியளிப்பதின் மீது கவனம் செலுத்த உள்ளது.
- இது மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப் படுகின்றது.
- இது புதிய இந்தியா மற்றும் கோவிட் தொடர்பான திறன்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 3வது கட்டத்தின் கீழ், 729 பிரதான் மந்திரி கௌசல் கேந்திரா மையங்கள் அமைக்கப் படவுள்ளன.
- 200ற்கும் மேற்பட்ட ஐடிஐ நிறுவனங்கள் திறன் இந்தியா திட்டத்தின் கீழ் உருவாக்கப் படவுள்ளன.
- பிரதமர் 2015 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று திறன் இந்தியா திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா தொடங்கப் பட்டதின் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது.
- திறன் மேம்பாடு குறித்த தேசியக் கொள்கையானது 2022 ஆம் ஆண்டில் 50 கோடி மக்களுக்கு திறன் அளிப்பதற்கான இலக்கு ஒன்றை நிர்ணயித்துள்ளது.




## இந்திய உணவுக் கழகம்

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று இந்திய உணவுக் கழகத்தின் 75வது நிறுவன தினமானது அனுசரிக்கப்பட்டது.
- இது மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது தனது முதலாவது மாவட்ட அலுவலகத்தை தமிழ்நாட்டின் நெற்கிண்ணமான தஞ்சாவூரை அடிப்படையாகக் கொண்டு 1965 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று ஏற்படுத்தப் பட்டது.
- இதன் ஆரம்ப காலத் தலைமையகம் சென்னை ஆகும், அதன் பிறகு இதன் தலைமையகம் புதுதில்லிக்கு மாற்றப் பட்டது.

## ஸ்காச் சவால் விருது

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சரான அர்ஜுன் முண்டா அவர்களுக்கு ஸ்காச் சவால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இது அதனது மின் ஆளுகை, தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்புகள், இதர மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் ஆகியவற்றிற்காக வேண்டி மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சக்கத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

## பிராரம்பாஹ் – ஸ்டார்ட் அப் இந்தியா சர்வதேச மாநாடு 2021


- ஸ்டார்ட் அப் இந்தியா (புதிதாகத் தொழில் தொடங்குதல்) சர்வதேச மாநாடானது ஸ்டார்ட் அப் இந்தியா முன்னெடுப்பு தொடங்கப்பட்டதின் 5 ஆண்டுகளைக் குறிக்கின்றது.
- இது இந்தியா முழுவதிலும் தொழில்முனைவின் உறுதித் தன்மையை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றது.

- இது மத்திய தொழிற்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையால் நடத்தப் படுகின்றது.
- இந்த மாநாட்டின் முதலாவது தினமானது பிம்ஸ்டெக் ஸ்டார் அப் மாநாட்டை நடத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.




## இந்தியாவில் எத்தனால் கலப்பு

- 2025 ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலக்கப் படும் ஒரு இலக்கை அடைய இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இது அதன் முந்தைய இலக்கை விட ஐந்து ஆண்டுகள் முன்னதாகவே இருக்கும்.
- இது விலை உயர்ந்த கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும்.
- 2020 ஆம் ஆண்டின் இலக்கின் படி 2022 ஆம் ஆண்டில் 10% எத்தனால் கலப்பதை எட்ட வேண்டும் என அரசாங்கம் இலக்கு நிர்ணயித்திருந்தது.
- இதன் பொருள் 90% பெட்ரோலுடன் 10% எத்தனால் கலப்பு என்பதோடு மேலும் 20% கலப்பு விகிதத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் எட்டுதல் என்பதாகும்.
- 80%க்கும் அதிகமான அளவில் தனது கச்சா எண்ணெய்யின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியா வெளிநாட்டு வழங்குநர்களை நம்பியுள்ளது.



## இந்தியாவின் முதல் தீயணைப்புப் பூங்கா

- ஒடிசாவின் முதல்வர் நவீன் பட்நாயக் இந்தத் 'தீயணைப்புப் பூங்காவை' திறந்து வைத்தார்.
- தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்று அமைந்துள்ள இது நாட்டின் ஒரு முதல் முயற்சியாகும்.
- இது புவனேஷ்வரில் உள்ள ஒடிஷா தீ மற்றும் பேரிடர் பயிற்சி நிறுவனத்தின் வளாகத்தினுள் அமைந்து இருக்கின்றது.
- மேலும் ஒடிசா தீயணைப்புச் சேவையின் 'அக்னிஷாம சேவா' என்ற ஒரு செயல்பாட்டு இணையத் தளத்தை மெய்நிகர் தளத்தில் அவர் தொடங்கி வைத்தார்.




## இந்திய வானிலை ஆய்வுத் துறை

- இந்திய வானிலை ஆய்வு மையமானது தனது 146வது துவக்க தினத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று கொண்டாடியது.
- இது கல்கத்தாவில் 1875 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் ஓர் அமைப்பாகும்.
- இது வானிலை ஆய்வு, வானிலை முன்னறிவிப்பு மற்றும் நில அதிர்வு ஆகியவற்றிற்குப் பொறுப்பான ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- உலக வானிலை அமைப்பின் ஆறு பிராந்திய சிறப்பு வானிலை மையங்களில் இதுவும் ஒன்றாகும்.
- வட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் வெப்ப மண்டலச் சூறாவளிகளுக்கான எச்சரிக்கைகளை முன்னறிவித்து அவற்றைப் பரப்புதல் மற்றும் அவற்றுக்குப் பெயரிடுதல் ஆகிய பொறுப்புகளை இது கொண்டு உள்ளது.
- இதில் மலாக்கா நீர்ச்சந்தி, வங்காள விரிகுடா, அரபிக் கடல் மற்றும் பாரசீக வளைகுடா ஆகியவை அடங்கும்.

## சாக்சம் விழிப்புணர்வு பிரச்சாரம்

- பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமானது சமீபத்தில் சாக்சம் என்ற ஒரு விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- பசுமை ஆற்றல் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக இந்த பிரச்சாரம் தொடங்கப் பட்டது.

- இது மக்களை மையமாகக் கொண்ட ஒரு மாத கால அளவிலான எரிபொருள் பாதுகாப்புப் பிரச்சாரமாகும்.




## இந்தியாவின் முதலாவது "தொழிலாளர் இயக்க அருங்காட்சியகம்"


- இந்தியாவின் முதலாவது தொழிலாளர் இயக்க அருங்காட்சியகமானது கேரளாவின் ஆலப்புழாவில் தொடங்கப்பட உள்ளது.
- இது உலகத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றை எடுத்துக்காட்ட உள்ளது.

## குடியரசு தின அணி வகுப்பு 2021

- 2021 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் புதிதாக வாங்கப்பட்ட ரபேல் போர் விமானங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- ரபேல் போர் விமானங்கள் ஏகலைவா உருவாக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.
- ஏகலைவா உருவாக்கமானது 1 ரபேல் போர் விமானம், 2 மிக் 29எஸ் மற்றும் 2 ஜாக்குவார் ரக விமானங்களைக் கொண்டிருக்கும்.


## மத்தியத் தத்தெடுப்பு வள ஆணையம்

- சமீபத்தில் மத்தியத் தத்தெடுப்பு வள ஆணையமானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று தனது 6வது வருடாந்திர தினத்தைக் கொண்டாடியது.
- இதற்கு 2015 ஆம் ஆண்டு சிறார் நீதியியல் சட்டத்தால் ஒரு சட்டப்பூர்வ அமைப்பு என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- இது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது இந்தியக் குழந்தைகளின் தத்தெடுப்பிற்கான ஒரு தலைமை அமைப்பாக செயல்படுகின்றது.





## ஸ்ரீ சோம்நாத் ஆலய அறக்கட்டளை

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த அறக்கட்டளையின் அடுத்தத் தலைவராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- முன்னாள் பிரதமரான மொராஜி தேசாய் அவர்களுக்குப் பிறகு இப்பதவியை வகிக்கும் 2வது பிரதமர் இவராவார்.
- இந்த ஆலயமானது குஜராத்தில் உள்ளது.
- சோம்நாத் ஆலயமானது சிவனின் 12 ஜோதிர்லிங்கத் தளங்களில் முதலாவது தளமாக இருப்பதாக நம்பப் படுகின்றது.
- இந்துக் கோவில் கட்டிடக் கலையின் பாணியில் மீண்டும் கட்டப்பட்ட தற்போதைய சோம்நாத் ஆலயமானது 1951 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.
- இந்தக் கோவிலின் மறுகட்டுமானமானது இந்தியாவின் முன்னாள் உள்துறை அமைச்சரான வல்லபாய் படேல் அவர்களின் ஆணையின் கீழ் தொடங்கப் பட்டது.



## பராக்கிராம் திவாஸ்

- மத்திய அரசானது நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினத்தைத் கொண்டாடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 23 ஆம் தேதியை பராக்கிராம் திவாஸ் என்ற தினமாக அனுசரிக்க முடிவு செய்துள்ளது.
- இந்த ஆண்டு நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125வது பிறந்த தினமாகும்.
- 1942 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் பெர்லினில் உள்ள இந்தியாவிற்கான சிறப்பு முகமையில் உள்ள இந்தியப் போர் வீரர்களைக் கொண்ட இந்தியப் படைப் பிரிவு மற்றும் ஜெர்மானிய மற்றும் இந்திய அதிகாரிகளால் சுபாஷ் சந்திர போஸிற்கு நேதாஜி என்ற பட்டமானது வழங்கப் பட்டது.




## குளிர்கால மலையேற்றம்

- சமீபத்தில் இந்திய மலையேற்றக் கூட்டமைப்பானது திரிசூல் சிகரத்திற்கு குளிர்கால மலையேற்றப் பயணத்தை மேற்கொள்வதற்காக அர்ஜுன் வாஜ்பாய் என்பவரின் தலைமையிலான 3 நபர்களைக் கொண்ட ஒரு குழுவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தியாவில் மலையேற்றப் பயணங்கள் என்பது பொதுவாக பருவ காலத்திற்கு முன்பு மற்றும் பருவ காலத்திற்குப் பின்பு என்ற இரு காலங்களில் மட்டுமே மேற்கொள்ளப் படும்.
- 2010 ஆம் ஆண்டில் தனது 16வது வயதில் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறிய இளம் வயது இந்தியர் அர்ஜுன் வாஜ்பாய் என்பவர் ஆவார்.
- திரிசூல் சிகரமானது உத்தரகாண்ட்டின் மேற்கு குமாவூன் என்ற மலைத் தொடரில் அமைந்துள்ளது.

## தேசியப் பேரிடர் மீட்புப் படை (NDRF – National Disaster Responsive Force)

- NDRF ஆனது ஜனவரி 18 அன்று தனது 16வது உருவாக்கத் தினத்தை அனுசரித்தது.
- இது நாட்டின் சிறப்பு வாய்ந்த பல்திறன் கொண்ட ஒரு மனித நேயப் படையாகும்.
- இது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இது 2006 ஆம் ஆண்டு ஜனவரி 16 அன்று செயல்பாட்டிற்கு வந்தது.

- இது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA) கீழ் உள்ளது.
- NDMA அமைப்பின் தலைவர் பிரதமர் ஆவார்.
- இந்தியாவில் பேரிடர்களை மேலாண்மை செய்வது மாநில அரசின் பொறுப்பாகும்.
- இயற்கைப் பேரிடர் மேலாண்மைக்கான மத்திய அரசின் "தலைமை அமைச்சகம்" மத்திய உள்துறை அமைச்சகமாகும்.

## இந்தியாவின் முதலாவது வாடகை விமானம்

- ஹரியானா மாநில முதல்வரான மனோகர் லால் கட்டார் அவர்கள் நாட்டின் முதலாவது சிறிய வாடகை விமானச் சேவையைத் தொடங்கி வைத்தார்.
- இந்த சேவையானது தனது முதலாவது நிலையில் சண்டிகரிலிருந்து ஹிசார் வரை செயல்பட உள்ளது.
- இது மத்திய அரசின் உடான் திட்டத்தின் கீழ் செயல்பட உள்ளது.



## ஓட்டுநர் இல்லாத மெட்ரோ

- பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனமானது மும்பை பெருநகரப் பகுதி மேம்பாட்டு ஆணையத்திற்காக "ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயிலை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பாதுகாப்பு பொதுத் துறைப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும்.



## குச்சி காளான்

- உலகில் மிகவும் அதிக விலை கொண்ட காளான்களில் ஒன்றான குச்சிக் காளானிற்கு புவிசார் குறியீடானது கோரப் பட்டுள்ளது.
- இது ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் விளைகின்றது.



## இந்திய புத்தாக்கக் குறியீடு 2020

- இது நிதி ஆயோக்கினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டின் முதலாவது பதிப்பானது 2019 ஆம் ஆண்டு அக்டோபரில் வெளியிடப் பட்டது.
- இது உலகப் புத்தாக்கக் குறியீட்டின் வரிசையில் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டின் கீழ், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைத் திறனுள்ள வகையில் ஒப்பிடுவதற்காக அவை 17 பெரிய மாநிலங்களாகவும் 10 வடகிழக்கு மற்றும் மலைப் பிரதேச மாநிலங்களாகவும் 9 நகர்ப்புற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களாகவும் பிரிக்கப் பட்டுள்ளன.
- நாட்டில் மிகவும் புத்தாக்கம் பெற்ற ஒரு பெரிய மாநிலமாக கர்நாடக மாநிலம் தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

**Best performers**

Four of the five highest scoring major States in the India Innovation Index are from the south

| Rank | Major States | Score |
|---|---|---|
| 1 | Karnataka | 42.5 |
| 2 | Maharashtra | 38.03 |
| 3 | Tamil Nadu | 37.91 |
| 4 | Telangana | 33.23 |
| 5 | Kerala | 30.58 |
| 6 | Haryana | 25.81 |
| 7 | Andhra Pradesh | 24.19 |
| 8 | Gujarat | 23.63 |
| 9 | Uttar Pradesh | 22.85 |
| 10 | Punjab | 22.54 |

- இதற்கு அடுத்து மகாராஷ்டிரா 2வது இடத்திலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தக் குறியீட்டில் பீகார் கடைசி இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- வடகிழக்கு/மலைப் பிரதேச மாநிலங்களிடையே இமாச்சலப் பிரதேச மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஒன்றியப் பிரதேச/நகர மாநிலங்களிடையே தில்லி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

## கேள்வி நேரம்

- இது 2020 ஆம் ஆண்டில் மழைக்காலக் கூட்டத் தொடரின் போது அரசினால் நிறுத்தி வைக்கப் பட்டது.
- ஜனவரி 29 ஆம் தேதியன்று பட்ஜெட் கூட்டத் தொடருக்காகப் பாராளுமன்றம் கூடும் போது இது மீண்டும் செயல்பாட்டிற்கு வரும்.
- ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்வின் முதல் 1 மணி நேரம் கேள்வி நேரம் என்று வரையறுக்கப் படுகின்றது.
- இது அவையின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இரு அவைகளின் முன்னிலைத் தலைவர்களும் மாநிலங்களவை மற்றும் மக்களவை ஆகிய அவைகளில் கேள்வி நேரத்தை நடத்துவதற்கு இறுதி அதிகாரத்தைப் பெற்று உள்ளவர்களாவர்.
- இரண்டு அவைகளிலும் கேள்வி நேரமானது அந்தத் தொடரின் அனைத்து நாட்களிலும் நடைபெறும்.
- ஆனால் பின்வரும் 2 நாட்களுக்கு மட்டும் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
  - மத்திய வளாகத்தில் இரு அவைகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே குடியரசுத் தலைவர் உரையாற்றும் போது கேள்வி நேரமானது இருக்காது.
  - நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் தினத்தன்றும் கேள்வி நேரமானது இருக்காது.

## STARStreak வான் பாதுகாப்பு அமைப்பு

- பிரெஞ்சு பன்னாட்டு நிறுவனமான தாலேஸ் ஆனது பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.
- இது STARStreak என்ற வான் பாதுகாப்பு அமைப்பின் உற்பத்தியில் கூட்டாக பணி புரிய உள்ளது.
- STARStreak என்பது ஒரு குறுகிய தூர வரம்பினைக் கொண்ட நிலத்திலிருந்து இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை ஆகும்.
- இதன் குறைந்தபட்ச வரம்பு 0.3 கி.மீ மற்றும் அதிகபட்ச வரம்பு 7 கி.மீ. ஆகும்.
- இது மாக் 3 வேகத்தில் பயணிக்கிறது.
- மாக் என்பது ஒலியின் வேகமாகும்.



## 15வது இந்தியா டிஜிட்டல் உச்சி மாநாடு

- இது இந்திய இணையம் மற்றும் கைபேசி கழகத்தின் ஒரு முதன்மை நிகழ்வாகும்.
- இந்த ஆண்டு உச்சிமாநாட்டின் கருத்துரு 'ஆத்ம நிர்பர் பாரத் - புதிய தசாப்தத்தின் ஆரம்பம்' என்பதாகும்.
- இது அரசாங்கத்தின் 'உலகத்திற்காக உருவாக்கு' (Make for the World) என்ற முன்னெடுப்பிற்கு ஏற்ப இருக்கும்.




## IFFI திரைப்பட விழா

- கோவாவில் நடைபெற்ற இந்தியாவின் சர்வதேசத் திரைப்பட விழாவின் (IFFI - International Film Festival of India) 51வது பதிப்பில் இத்தாலிய ஒளிப்பதிவாளர் விட்டோரியோ ஸ்டோராரோவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- 51வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவானது வங்கதேசத்தின் மீது கவனம் செலுத்துகிறது.
- IFFI ஆனது ஆசியாவின் பழமையான மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய திரைப்பட விழாவாகும்.



## குடிமக்களை மையப்படுத்திய சீர்திருத்தங்கள்

- ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை முறையைச் செயல்படுத்துதல், வணிகம் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு/பயன்பாட்டுச் சீர்திருத்தங்கள் மற்றும் மின்துறை சீர்திருத்தங்கள் ஆகியவை குடிமக்களை மையமாகக் கொண்ட நான்கு சீர்திருத்தங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்தச் சீர்திருத்தங்கள் நிதி அமைச்சகத்தின் செலவினங்கள் துறையால் (Department of Expenditure) நிர்ணயிக்கப் பட்டுள்ளன.
- மத்திய அரசானது மாநிலங்களின் கடன் வாங்கும் வரம்பை அவர்களின் மொத்த மாநில உற்பத்தியில் 2% என்ற அளவிற்கு உயர்த்தியுள்ளது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் தொகுப்பின் ஒரு பகுதியாக இருந்தது.
- கோவிட்-19 தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்களைக் கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டு மே 17 அன்று இது அறிவிக்கப்பட்டது.
- மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் மட்டுமே ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை முறை, வணிகம் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு/பயன்பாட்டுச் சீர்திருத்தங்கள் என்ற மூன்று சீர்திருத்தங்களை நிறைவு செய்துள்ளன.
- 'நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சீர்திருத்தங்களை' வெற்றிகரமாக மேற்கொண்ட நான்காவது மாநிலமாக மணிப்பூர் திகழ்கிறது.
- முன்னதாக, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியன நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளன.
- வணிகம் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக மேற்கொண்ட நாட்டின் 8வது மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- ஆந்திரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய ஏழு மாநிலங்கள் இந்த சீர்திருத்தங்களை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளன.
- ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை முறையை அமல்படுத்திய 11வது மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசம், கோவா, குஜராத், ஹரியானா, கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, திரிபுரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை பிற மாநிலங்களாகும்.
- உத்தரப் பிரதேசம் இதில் அதிகப் பயனடைகிறது, அதனையடுத்து கர்நாடகா மற்றும் குஜராத்தை ஆகிய மாநிலங்கள் இதில் உள்ளன.

## ஆதார் சீராய்வு மனுக்கள்

- இந்திய உச்ச நீதிமன்றமானது தனது அமர்வில் ஒரு பெரும்பான்மை அடிப்படையில், அதன் 2018 ஆம் ஆண்டின் தீர்ப்பை சீராய்வு செய்யக் கோரும் தொடர் மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டுத் தீர்ப்பானது நாடாளுமன்றத்தில் ஆதார் சட்டத்தை பண மசோதாவாக நிறைவேற்ற வேண்டி அதற்கு சான்றளித்த மக்களவை சபாநாயகரின் முடிவையும் அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதையும் உறுதி செய்தது.
- இது மாநிலங்களவையில் பெரும்பான்மை ஒப்புதல் பெறாமலேயே பண மசோதாவாக நிறைவேற்ற வழிவகை செய்கின்றது.

- ஆதார் சட்டத்தின் 7வது பிரிவானது நலத் திட்டங்களின் கீழ் மானியங்கள், சேவைகள் அல்லது பயன்களுக்கான செலவினமானது இந்தியத் தொகுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப் படும் என்று கூறுகின்றது.
- இதன் காரணமாக இந்த மசோதாவானது பண மசோதாவாக நிறைவேற்றத் தகுதி பெற்றுள்ளது.

## கவச் பயிற்சி

- இந்திய இராணுவமானது அந்தமான் கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் மிகப்பெரிய அளவிலான கூட்டு இராணுவப் பயிற்சியான "கவச்" என்ற பயிற்சியை நடத்தவுள்ளது.
- இந்தப் பயிற்சியானது அந்தமான் மற்றும் நிக்கோபர் படைக் கட்டுப்பாட்டகத்தின் கீழ் நடத்தப்படவுள்ளது.
- இது இந்தியக் கடற்படை, இந்தியத் தரைப்படை, இந்திய விமானப் படை மற்றும் இந்தியக் கடலோரக் காவற் படை ஆகியவற்றை உள்ளடக்கவுள்ளது.
- இது இந்தியாவின் அனைத்து 3 படைகளின் கூட்டுப் போர்த் திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## 7வது MASCRADE

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் "MASCRADE - 2021" என்பதின் 7வது பதிப்பைத் தொடங்கி வைத்துள்ளார்.



- MASCRADE என்பது கடத்தல் மற்றும் போலியான வர்த்தகத்திற்கு எதிரான இயக்கத்தை (Movement against Smuggled and Counterfeit Trade) குறிக்கின்றது.
- இது FICCI அமைப்பினால் நடத்தப்பட்டது.

## ஷரம் சக்தி தளம்

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது ஷரம் சக்தி எனப்படும் ஒரு தேசிய புலம்பெயர் உதவித் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது புலம்பெயர் தொழிலாளர்களுக்காக வேண்டி மாநில மற்றும் தேசிய அளவிலான திட்டங்களின் சுமூகமான அமலாக்கத்திற்கு திறனுள்ள வகையில் உதவ இருக்கின்றது.
- பழங்குடியின புலம்பெயர்ந்தோர் குறித்த மாநில அளவிலான தரவை மைய அளவில் இணைக்கும் வகையில் மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகம் செயல்படுவது இதுவே முதன்முறையாகும்.
- இது அவர்களின் எண்ணிக்கைக்காக மட்டும் அல்லாமல் அவர்களை அந்தத் திட்டங்களுடன் இணைப்பதற்காகவும் அறியப்படுகின்றது.
- கோவா ஆனது தனது புதிய புலம்பெயர்வுப் பிரிவின் மூலம் தரவுச் சேகரிப்பு குறித்த துறைச் சோதனையில் முன்னணியில் உள்ளது.

## சார்டு ஹாவா நடவடிக்கை

- இது எல்லைப் பாதுகாப்பு படையால் இராஜஸ்தானின் மேற்கு எல்லையில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையின் நோக்கம் இந்தப் பகுதியில் அடர் மூடுபனியின் காரணமாக நிகழும் ஊடுருவல் நிகழ்வுகளைக் கண்காணிப்பதாகும்.

## வாசுகி இரயில்

- சத்தீஸ்கரில் உள்ள தென்கிழக்கு மத்திய இரயில்வே மண்டலமானது மிகவும் நீளமான சரக்கு இரயிலை வெற்றிகரமாக இயக்கியுள்ளது.
- இதில் ஐந்து ரேக் சரக்கு இரயில்களை 3.5 கி.மீ தூரத்திற்கு ஒரே இரயிலாக இணைத்ததன் மூலம் இது செய்யப்பட்டது.
- இதற்கு 'வாசுகி' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது பிலாய் மற்றும் கோர்பா இரயில் நிலையங்களுக்கு இடையில் 224 கி.மீ தூரத்தை நிறைவு செய்தது.
- தென்கிழக்கு மத்திய இரயில்வே சமீபத்தில் இரண்டு சரக்கு இரயில்களை இயக்கி உள்ளது.
- அவை அவற்றின் நீளம் காரணமாக பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.
- அந்த இரண்டு சரக்கு இரயில்களின் பெயர்கள் 'சேஷ் நாக்' மற்றும் 'சூப்பர் அனகோண்டா' ஆகும்.

## அம்பெக்ஸ் (AMPHEX) – 21

- இது ஒரு நீரிலும் நிலப்பகுதியிலும் நடத்தப் படும் முப்படைகளின் ஒரு மிகப்பெரிய கூட்டுப் படைப் பயிற்சியாகும்.
- இது அந்தமான் நிக்கோபர் தீவில் நடத்தப் பட்டது.

- இதில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள், இந்திய இராணுவத் துருப்புகள் மற்றும் இந்திய விமானப் படையைச் சேர்ந்த பல்வேறு வகையான விமானங்கள் பங்கு பெற்று உள்ளன.



## ஜீவன் ரக்சா பதக் தொடர் விருதுகள்

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் 40 நபர்களுக்கு இந்த விருதினை வழங்குவதற்கு வேண்டி தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- இந்த விருதுகளில் உத்தம் ஜீவன் ரக்சா பதக்கம் (8), சர்வோட்டம் ஜீவன் ரக்சா பதக்கம் (1) மற்றும் ஜீவன் ரக்சா பதக்கம் (31) ஆகியவை உள்ளடங்கும்.
- சர்வோட்டம் ஜீவன் ரக்சா பதக்கம் என்பதில் ஒரு விருதானது கேரளாவைச் சேர்ந்த மறைந்த முகம்மது முதின் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஜீவன் ரக்சா பதக்கம் என்ற விருதுகள் மற்றொரு நபரைக் காப்பாற்றுவதன் மூலம் மனிதர்களின் நடவடிக்கையை வெளிப்படுத்திய நபர்களைக் கௌரவிப்பதற்காக வேண்டி வழங்கப் படுகின்றது.



## e-EPIC

- இந்தியத் தேர்தல் ஆணையமானது வாக்காளர் அடையாள அட்டையின் திருத்த முடியாத டிஜிட்டல் பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது மின்னணு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (e-EPIC) எனப்படுகின்றது.
- இந்த e-EPIC ஆனது பிடிஎப் வடிவில் அச்சிடப்பட முடியும்.




- ❖ இது டிஜி லாக்கர் போன்றவற்றில் ஆன்லைனில் (நிகழ் நேரத்தில்) சேமிக்க முடியும்.
- ❖ இது ஆவணத்தை விரைவாக வழங்குதல் மற்றும் எளிதாக அணுகுதல் ஆகியவற்றிற்கு வழி வகை செய்கின்றது.
- ❖ வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையானது 1993 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- ❖ அப்பொழுது இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையராக டிஎன் சேஷன் அவர்கள் பதவியில் இருந்தார்.
- ❖ இவர் இந்தியாவின் 10வது தலைமைத் தேர்தல் ஆணையராக (1990-1996) நியமிக்கப் பட்டார்.

## சிறைச்சாலை சுற்றுலா

- ❖ மகாராஷ்டிரா மாநில அரசானது புனேவில் உள்ள எரவாடா சிறையிலிருந்து "சிறைச்சாலை சுற்றுலாவை" தொடங்க முடிவு செய்துள்ளது.
- ❖ மகாத்மா காந்தி, மோதிலால் நேரு, லோக்மானிய திலகர், பண்டித ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு, சர்தார் வல்லபாய் படேல் மற்றும் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் எரவாடா சிறையில் சிறை வைக்கப்பட்ட சில முக்கியமான சுதந்திரப் போராட்ட வீரர்களாவர்.



**PLAN FOR JANUARY 26**

File photo

- Deputy chief minister Ajit Pawar will inaugurate jail tourism at Yerawada prison on January 26 at 11am
- Chief minister Uddhav Thackeray and home minister Anil Deshmukh are expected to mark their attendance at the inaugural function virtually

**UNDERSTAND THE PROCESS**

- Institutes such as schools, colleges, and others, will have to seek permission from the Yerawada jail superintendent to visit the facility, submit a list of students and furnish their identity proof
- Visitors will have to pay an entrance fee of ₹1, ₹10 and ₹15, per person. They will have to surrender their phone and baggage at the entrance gate
- Visitors will not be allowed to click photographs or shoot videos. Instead, jail authorities will click photos and shoot videos of visitors. The digital images will be shared with educational institutes free of cost

## வீரதீர விருதுகள் 2021




- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் ஆயுதப் படை வீரர்களுக்கு வீரதீர விருதுகளை வழங்கினார்.
- இது இந்தியாவின் 72வது குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது அறிவிக்கப் பட்டு உள்ளது.
- இது 01 மகாவீர் சக்ரா, 05 கீர்த்தி சக்ரா, 05 வீர் சக்ரா, 07 சௌரியா சக்ரா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- மகாவீர் சக்ரா விருதானது 16வது பீகார் படைப் பிரிவின் படைத் தளபதியான மறைந்த சந்தோஷ் பாபு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பத்மா விருதுகள் 2021

- இந்தியாவில் 72வது குடியரசு தின விழாவினை முன்னிட்டு, 119 ஆளுமைகள் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.
- இந்த விருதுகள் ராஷ்டிரபதி பவனில் நடைபெற இருக்கும் ஒரு விருது வழங்கும் விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட இருக்கின்றது.
- இந்தப் பட்டியலில் 7 பத்ம விபூஷன், 10 பத்ம பூஷன் மற்றும் 102 பத்ம ஸ்ரீ விருதுகள் ஆகியன அடங்கியுள்ளன.
- இதில் விருது பெறும் பெண்களின் எண்ணிக்கை 29 ஆகும்.
- இது வெளிநாட்டைச் சேர்ந்த 10 நபர்கள், 16 மறைந்த விருதாளர்கள் மற்றும் 1 திருநர் விருதாளர் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

| **Padma Vibhushan (7)** | | | |
|---|---|---|---|
| S.N | Name | Field | State/Country |
| 1. | Shri Shinzo Abe | Public Affairs | Japan |
| 2. | Shri S P Balasubramaniam (Posthumous) | Art | Tamil Nadu |
| 3. | Dr. Belle Monappa Hegde | Medicine | Karnataka |
| 4. | Shri Narinder Singh Kapany (Posthumous) | Science and Engineering | USA |
| 5. | Maulana Wahiduddin Khan | Others- Spiritualism | Delhi |
| 6. | Shri B. B. Lal | Others- Archaeology | Delhi |
| 7. | Shri Sudarshan Sahoo | Art | Odisha |

### *பத்மா விருதுகள் பற்றி*

- இது நாட்டின் உயரிய குடிமக்கள் விருதுகளில் ஒன்றாகும்.
- இந்த விருதானது பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ ஆகிய 3 பிரிவுகளில் வழங்கப் படுகின்றது.

| Padma Bhushan (10) | | | |
|---|---|---|---|
| 8. | Ms. Krishnan Nair Shantakumari Chithra | Art | Kerala |
| 9. | Shri Tarun Gogoi (Posthumous) | Public Affairs | Assam |
| 10. | Shri Chandrashekhar Kambara | Literature and Education | Karnataka |
| 11. | Ms. Sumitra Mahajan | Public Affairs | Madhya Pradesh |
| 12. | Shri Nripendra Misra | Civil Service | Uttar Pradesh |
| 13. | Shri Ram Vilas Paswan (Posthumous) | Public Affairs | Bihar |
| 14. | Shri Keshubhai Patel (Posthumous) | Public Affairs | Gujarat |
| 15. | Shri Kalbe Sadiq (Posthumous) | Others-Spiritualism | Uttar Pradesh |
| 16. | Shri Rajnikant Devidas Shroff | Trade and Industry | Maharashtra |
| 17. | Shri Tarlochan Singh | Public Affairs | Haryana |

### பாரத் பர்வ் 2021

- இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 26 முதல் ஜனவரி 31 ஆம் தேதி வரை நடத்தப்படுகின்றது.
- இது இந்தியாவின் எழுச்சிமிகு உறுதிப்பாட்டைக் கொண்டாடுகின்றது.
- இது ஒவ்வொரு ஆண்டும் மத்திய சுற்றுலாத் துறையினால் நடத்தப்படுகின்றது.
- இது தற்சார்பு இந்தியா மற்றும் ஒரே பாரதம் உன்னத பாரதம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் கருத்துருவுடன் அனுசரிக்கப் படுகின்றது.



# சர்வதேசச் செய்திகள்

## அண்டார்டிகாவில் கோவிட்-19


- கோவிட்-19 தொற்று பரவிய கடைசியான கண்டம் அண்டார்டிகா ஆகும்.
- இந்தக் கொள்ளை நோயானது தற்போது பூமியில் உள்ள அனைத்துக் கண்டங்களிலும் பரவி உள்ளது.
- சிலி நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் அண்டார்டிகாவில் உள்ள 2 இராணுவத் தளங்களில் கோவிட் நோய்த் தொற்றை உறுதி செய்துள்ளனர்.

## மிஷன் சாகர் III

- இது தற்போதையக் கொள்ளை நோய் காலத்தின் போது நட்பு நாடுகளுக்கு இந்தியாவால் மேற்கொள்ளப் படும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண உதவிகளின் ஒரு பகுதியாகும்.
- பிரதமர் நரேந்திர மோடியின் சாகர் (பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) பற்றிய பார்வைக்கு ஏற்ப இந்தப் பணி மேற்கொள்ளப் படுகிறது.
- இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக இந்திய கடற்படைக் கப்பலான கில்தான் என்ற ஒரு கப்பலானது கம்போடியாவில் உள்ள சிஹானுக்வில் என்ற துறைமுகத்திற்கு (Sihanoukville Port) வந்துள்ளது.
- முன்னதாக, மிஷன் சாகர் II என்ற திட்டத்தின் கீழ், ஐ.என்.எஸ். ஐராவத் எனும் கப்பலானது டிஜிபூட்டி, சூடான், தெற்கு சூடான் மற்றும் எரித்ரியா ஆகிய நாடுகளுக்கு உணவு உதவிகளை வழங்கியது.


## ஐந்து கண்கள் வலைப்பின்னல் அமைப்பு

- ஜப்பான் தற்போது ஐந்து கண்கள் வலைப்பின்னல் என்ற அமைப்பில் ஆறாவது கண்ணாகச் சேர உள்ளது.
- இது ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகிய ஐந்து நாடுகளை உள்ளடக்கியது ஆகும்.
- இவை சீனா மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளால் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக பதிலளிக்க ஒன்றிணைக்கப் பட்டுள்ளது.
- ஐந்து கண்கள் வலைப்பின்னல் என்ற கூட்டமைப்பின் தோற்றத்தை 1941 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்ட அட்லாண்டிக் சாசனத்தில் காணலாம்.
- 2020 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில், இந்த ஐந்து நாடுகள் சீனாவைத் தனிமைப் படுத்த வேண்டி ஒரு பொருளாதார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ஐந்து கண்கள் வலைப்பின்னல் அமைப்பில் இந்தியா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று ஜனநாயக நாடுகளைச் சேர்க்க அமெரிக்கா முயன்று வருகிறது.




## நிரந்தரமற்ற UNSC உறுப்பினர்

- ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் (UNSC - UN Security Council) நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா தனது இரண்டு ஆண்டு பதவிக் காலத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1, அன்று தொடங்கியது.
- ஐக்கிய நாடுகள் சபையின் சக்தி வாய்ந்த ஓர் இடத்தை இந்தியா பெறுவது இது எட்டாவது முறையாகும்.
- அதன் மற்ற நான்கு நாடுகள் அயர்லாந்து, கென்யா, மெக்சிகோ மற்றும் நார்வே ஆகியனவாகும்.
- இந்தியா 2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலும் மீண்டும் 2022 ஆம் ஆண்டின் ஒரு மாதத்திலும் UNSC அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்.
- இந்தச் சபையின் தலைமைப் பதவியானது ஒவ்வோர் உறுப்பினர்களிடமும் ஒரு மாதத்திற்கு அகர வரிசைப்படி சுழற்சி முறையில் வழங்கப் படுகிறது.



## GAVI வாரியம்


- தடுப்பூசிகள் மற்றும் நோய்த் தடுப்புக்கான உலகளாவிய கூட்டணியால் (GAVI - Global Alliance for Vaccines and Immunisation) மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் GAVI வாரியத்தில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு வேண்டி பரிந்துரைக்கப் பட்டு உள்ளார்.
- அவர் GAVI வாரியத்தில் தென்கிழக்குப் பகுதி பிராந்திய அலுவலகம் (SEARO - South East Area Regional Office) / மேற்கு பசிபிக் பிராந்திய அலுவலகம் (WPRO - Western Pacific Regional Office) ஆகிய பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவுள்ளார்.
- இவர் மியனாமரின் மின்ட்ஹிட்வி என்பவருக்குப் பின்னர் இப்பதவியில் அமர்வார்.
- இவர் இந்தப் பதவியை 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வகிப்பார்.
- டாக்டர் ஹர்ஷ் வர்தன் உலக சுகாதார அமைப்பின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- GAVI என்பது 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது பொது மற்றும் தனியார் துறைகளை ஒன்றிணைக்கும் ஒரு உலகளாவிய தடுப்பூசிக் கூட்டணி ஆகும்.
- "அனைவருக்குமான நோய்த் தடுப்பு" என்ற நோக்கத்தை அடைய இது செயல்படுகிறது.




## எல்லைகலைக் கடந்த நிருபர்கள்

- கடந்த ஆண்டு மட்டும் உலகளவில் குறைந்தது 50 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டில் 53 ஆக இருந்த இந்தக் கொலைகளின் எண்ணிக்கையானது ஒட்டு மொத்த அளவில் தற்பொழுது குறைந்துள்ளது.
- மெக்ஸிகோ நாடானது 2020 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களுக்கு மிக மோசமான நாடாக இருக்கின்றது.
- இதில் ஆப்கானிஸ்தானைத் தொடர்ந்து ஈராக் நாடானது இரண்டாவது இடத்தில் உள்ளது.
- எல்லைகளைக் கடந்த நிருபர்கள் அறிக்கையின் கூற்றுப் படி இந்தத் தரவானது வெளியிடப் பட்டுள்ளது.

- ❖ இது பிரான்சின் பாரிசைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஒரு சர்வதேச இலாப நோக்கற்ற மற்றும் ஒரு அரசு சாரா நிறுவனமாகும்.




## ஐஎன்எஸ் சிந்துவீர்

- ❖ இது அதிகாரப் பூர்வமாக மியான்மர் கடற்படையில் சேர்க்கப் பட்டுள்ளது.
- ❖ மியான்மர் கடற்படையின் முதல் மற்றும் ஒரே நீர்மூழ்கிக் கப்பல் இதுவாகும்.
- ❖ இதற்கு மியாமர் மொழியில் யுஎம்எஸ் மின்யே தீன்காத்து என்ற பெயரானது கொடுக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியா மற்றொரு நாட்டிற்கு வழங்கிய முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் இதுவாகும்.



## கோவிட் தடுப்பு மருந்து அவசரக் காலப் பயன்பாடு

- ❖ அஸ்ட்ராஜெனெகா மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தடுப்பூசிகளை அவசர காலத்தில் வழங்க இங்கிலாந்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்தியாவின் சீரம் நிறுவனமானது இங்கிலாந்தில் தடுப்பூசிகளை வழங்க அஸ்ட்ரா ஜெனெகாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- ❖ இந்தப் புதிய தடுப்பூசி ஒரு வைரஸ் பரவல் தடுப்பூசியாகும்.
- ❖ ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட எம்ஆர்என்ஏ தடுப்பூசிகளை விட இது வேறு வழியில் செயல்படுகின்றது.
- ❖ ஒரு வைரஸ் பரவல் தடுப்பூசி ஆனது டிஎன்ஏ வடிவத்தில், SARS-CoV-2 மரபணுக்களை வழங்க மற்றொரு பிரதிபலிப்பற்ற ஒரு வைரஸைப் பயன்படுத்துகின்றது.

## ஐக்கிய ராஜ்ஜியத்தின் புத்தாண்டு கௌரவப் பட்டியல்

- ஏழு முறை ஃபார்முலா ஒன் சாம்பியன் பட்டம் வென்ற லெவிஸ் ஹாமில்டனுக்கு ஐக்கிய ராஜ்ஜியத்தின் புத்தாண்டு கௌரவப் பட்டியலில் வீரத்திருமகன் அல்லது நைட்ஹூட் என்ற பட்டமானது வழங்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் துருக்கி கிராண்ட் பிரிக்ஸில் ஹாமில்டன் தனது ஏழாவது உலக சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- இந்த வெற்றியின் மூலம், அவர் மைக்கேல் ஷூமேக்கரின் உலகச் சாதனையை சமன் செய்தார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மைக்கேல் ஷூமேக்கரின் ஒட்டு மொத்த சாதனையான 91 வெற்றிகளை சமன் செய்து அவரது சாதனையை முறியடித்துள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம், அவரது மொத்த வெற்றியின் எண்ணிக்கை 95 ஆக உள்ளது.
- இங்கிலாந்தின் நைட்ஹூட் மற்றும் டேம்ஹூட் கௌரவம் ஆனது இடைக் காலக் கட்டத்திற்கு முந்தையதாகும்.
- இது ஆண்களுக்கு 'சர்' என்ற பட்டத்தையும் மற்றும் பெண்களுக்கு 'டேம்' என்ற பட்டத்தையும் கொண்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் ஹைதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் ரகு ராம் பில்லாரிசெட்டியும் இடம் பெற்றுள்ளார்.



## சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையம்

- இது சர்வதேசப் பத்திரங்கள் ஆணையத்தின் ஒரு இணை உறுப்பினராகி உள்ளது.
- இந்தியாவின் முதல் சர்வதேச நிதிச் சேவை மையமானது குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரத்தில் அமைக்கப் பட்டுள்ளது.


## அணுசக்தி தகவல் பரிமாற்றம்

- பாகிஸ்தானும் இந்தியாவும் தங்கள் அணுசக்தி நிறுவல்களின் பட்டியலைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு வருடாந்திர நடைமுறையை மேற்கொண்டன.
- இது 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31, அன்று கையெழுத்தானது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1 ஆம் தேதியன்று இரு நாடுகளும் தங்களது அணுசக்தி நிறுவல்கள் மற்றும் வசதிகளை ஒருவருக்கொருவர் தெரிவிக்க வேண்டும் என்ற விதி இந்த ஒப்பந்தத்தில் உள்ளது.
- இது 1992 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.




## கோவிட் செயலி

- சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது (WHO) “WHO கோவிட்-19 செயலி” எனப்படும் கோவிட்-19 கைபேசிச் செயலியைத் தொடங்கியுள்ளது.
- இந்தச் செயலியானது ஆங்கிலம், அரபி, போர்ச்சுக்கல், பிரெஞ்சு, சீனம், ஸ்பானியம், ரஷ்யா ஆகிய 7 வெவ்வேறு மொழிகளில் கிடைக்கின்றது.




## 4 ஆசியத் தேயிலை அறுவடைத் தளங்கள்

- ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது (FAO) மூன்று நாடுகளில் 4 ஆசியத் தேயிலை அறுவடைத் தளங்களை உலக அளவில் முக்கியமான வேளாண் தளங்களாக (Globally Important Agricultural Sites - GIAHS) அறிவித்துள்ளது.
- அவை பின்வருமாறு:
    - சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள பியூர் பாரம்பரிய தேயிலை வேளாண் அமைப்பு
    - பாரம்பரிய மரத் தாவர அமைப்பு – ஜப்பான்
    - புசோவ்ஹ் மல்லிகைத் தேயிலைத் தளம் – சீனா
    - பாரம்பரிய ஹடோங்க் தேயிலை வேளாண் அமைப்பு – தென் கொரியா

- சீனாவில் உள்ள யுனான் மாகாணமானது உலகின் தேயிலைக்கான பிறப்பிடமாகக் கருதப் படுகின்றது.
- உலகின் மிகப்பெரிய தேயிலை உற்பத்தியாளர் நாடு சீனா ஆகும், அதே சமயம் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் தேயிலைப் பயிரிடலானது 19 ஆம் நூற்றாண்டில் தான் ஆங்கிலேயரால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- தேயிலை ஆனது இந்தியாவில் அஸ்ஸாம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

## கடல்சார் ஒத்துழைப்பு

- இந்தியக் கடலோரக் காவற்படையானது கடல்சார் ஆராய்ச்சி மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக 7 ஆசிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- அவை ஜப்பான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மியான்மர், இலங்கை, இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் அடங்கும்.

## டாம்பன் வரி

- பிரிட்டன் அரசானது "டாம்பன் வரி" எனப்படும் மகளிர் சுகாதாரப் பொருட்கள் மீதான வரியை ஒழித்துள்ளது.
- இது மாதவிடாய் சுழற்சி சம்பந்தப்பட்ட வறுமைப் பிரச்சினையை ஒழிக்கும் ஒரு நடவடிக்கையாகும்.
- இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் ஏற்கெனவே இந்த வரியை ஒழித்துள்ளன.
- மாதவிடாய் காலப் பொருட்களை (சுகாதாரப் பொருட்கள்) இலவசமாக வழங்கிய உலகின் முதலாவது நாடு ஸ்காட்லாந்து ஆகும்.

## மலாலா யூசுப்சாய் சட்டம்

- பாகிஸ்தான் பெண்களுக்காக அமெரிக்காவானது இந்தச் சட்டத்தை சமீபத்தில் நிறைவேற்றியது.
- 2020 மற்றும் 2022 ஆண்டுகளுக்கு இடையில் பாகிஸ்தான் பெண்களுக்கு குறைந்தது 50% அளவிற்கு கல்விக்கான உதவித் தொகையை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம் வழங்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கோருகிறது.
- மலாலா என்பவர் பாகிஸ்தானிய பெண் கல்விக்கான ஒரு ஆர்வலர் ஆவார்.
- இவர் 2014 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த வயதில் நோபல் பரிசைப் பெற்றவர் ஆவார்.

## மைத்ரி சேது பாலம்

- இது ஃபெனி ஆற்றின் மேல் அமைக்கப்பட்ட ஒரு பாலமாகும்.
- இது தெற்கு திரிபுராவை வங்கதேசத்தின் ராம்கருடன் இணைக்கிறது.
- இது வங்கதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்திற்கு அணுகும் வசதியினை வழங்க இருக்கிறது.
- தற்போது, வடகிழக்கு மாநிலங்களுக்கு கடலை அணுகுவதற்கான ஒரே வர்த்தக இடம் மேற்கு வங்கத்தின் ஹால்தியா துறைமுகமாகும்.

## ஆசியாவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் கூட்டாண்மை

- இந்தியாவானது 2023 ஆம் ஆண்டு வரை அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஐயூசிஎன் (IUCN) அமைப்பால் ஆதரவளிக்கப்படுகின்ற ஆசியாவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் கூட்டாண்மையின் (Asia Protected Areas Partnership - APAP) இணை-தலைமைத்துவ நாடாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- தென் கொரியாவிற்கு மாற்றாக இந்தியா அந்தப் பதவியை ஏற்க உள்ளது.
- APAP ஆனது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் ஆசியக் கிளையினால் தலைமை தாங்கப் படுகின்றது.

## திடீர் வெள்ளத்திற்கான வழிகாட்டுச் சேவைகள்

- இந்தியாவானது தெற்கு ஆசியாவிற்காக இந்தச் சேவையைத் தொடங்கியுள்ளது.
- இந்தியா, வங்க தேசம், பூடான், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய தெற்கு ஆசிய நாடுகளுக்காகத் தொடங்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது சேவை இதுவாகும்.
- இது இந்திய வானிலை அமைப்பினால் வடிவமைக்கப்பட்ட ஒரு வலுவான அமைப்பு ஆகும்.




## கடல் இறக்கையுடன் கூடிய ஆளில்லா விமானம்

- சீனாவானது கடல் இறக்கையுடன் கூடிய (ஹையி) கிளைடர் எனப்படும் நீருக்கடியில் இயங்கும் ஆளில்லா விமானங்களை இந்தியப் பெருங்கடலில் நிறுத்தியுள்ளது.
- இவை பல மாத கால அளவில் இயங்கக் கூடியவையாகும், மேலும் இவை கடற்படையின் உளவுத்துறை நோக்கங்களுக்காக பயன்படும்.
- இவை ஒரு வகை 'நீருக்கடியில் இயங்கும் ஆளில்லா வாகனம்' (Un-crewed Underwater Vehicle) ஆகும்.

## அமெரிக்கப் பாராளுமன்றத்தில் கலவரம்

- அதிபர் டொனால்ட் டிரம்பின் ஆதரவாளர்கள் வாஷிங்டன் டி.சி.யில் உள்ள அமெரிக்கப் பாராளுமன்ற (Capitol Building) கட்டிடத்திற்குள் அத்து மீறி நுழைந்தனர்.
- 1800 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கட்டிடம், அமெரிக்க காங்கிரஸ் அவை கூடும் இடமாகும்.
- அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடனின் தேர்தல் வெற்றியை அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்க அமெரிக்க காங்கிரஸ் கூட்டப் பட்டது.
- ஏற்கனவே நடக்கும் வன்முறை ஆர்ப்பாட்டங்களுக்கு மேலும் தூண்டுதல்களைத் தடுக்கும் விதமாக அதிபர் ட்ரம்பின் ட்விட்டர் கணக்கு 12 மணி நேரம் முடக்கப்பட்டது.
- 25வது சட்டத் திருத்தத்தைச் செயல்படுத்தவும், டிரம்பைப் பதவியில் இருந்து நீக்கவும் துணை அதிபரான மைக் பென்ஸை பலர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.
- 25வது சட்டத் திருத்தமானது ஓர் அமெரிக்க அதிபர் அல்லது துணை அதிபர் எவ்வாறு வெற்றி பெறலாம் அல்லது எவ்வாறு பதவி மாற்றம் நிகழும் என்பதற்கான நடைமுறைகளை வகுக்கிறது.
- இந்தச் சட்டத் திருத்தத்தின் படி, பதவியில் இருக்கும் போது அதிபர் இறந்து விட்டால் அல்லது ராஜினாமா செய்து விட்டால் அல்லது பதவியில் இருந்து நீக்கப் பட்டால் துணை அதிபர், அதிபர் பொறுப்பை ஏற்கலாம்.
- அமெரிக்காவின் 35வது அதிபர் ஜான் கே கென்னடி படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1965 ஆம் ஆண்டு ஜூலை 6, அன்று காங்கிரஸால் இந்த 25வது திருத்தம் முன்மொழியப்பட்டது.




## அடுத்த அமெரிக்க அதிபர்

- அமெரிக்காவின் அடுத்த அதிபராக ஜோ பிடனின் வெற்றியை அமெரிக்க காங்கிரஸ் உறுதிப்படுத்தியுள்ளது.
- பிடன் 270 வாக்குகளைத் தாண்டி பெரும்பான்மையை வென்றுள்ளார்.
- 306 வாக்குகள் ஜோ பிடனுக்கு ஆதரவாகவும், 232 வாக்குகள் தற்போதைய அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு ஆதரவாகவும் அமைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதி அமெரிக்காவின் அடுத்த அதிபராக ஜோ பிடன் பதவியேற்பார்.



## உணவு விலைக் குறியீடு

- சமீபத்தில் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது இந்தக் குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- இது தொடர்ந்து 7வது மாதமாக 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் உயர்ந்துள்ளது.
- இது தானியங்கள், பால் பொருட்கள், என்ணெய் வித்துக்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் சர்வதேச விலைகளில் ஏற்படும் மாதாந்திர மாற்றங்களை அளவிடுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில், உணவு விலைக் குறியீடானது 97.9 புள்ளியாக உள்ளது.
- இது மூன்று ஆண்டு காலத்தில் மிகவும் அதிகமாகும், இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப் படும் போது 3.1% ஆக அதிகரித்துள்ளது.
- உணவு விலைக் குறியீட்டின் மிக அதிகபட்ச உயர்வானது 2011 ஆம் ஆண்டில் நிகழ்ந்து உள்ளது.




## ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு

- இது உலகின் 500 செல்வந்தர்களைத் தரவரிசைப்படுத்துகின்றது.
- இதில் அமேசான் நிறுவனரான ஜெப் பெசோஸ் என்பவரைப் பின்னுக்குத் தள்ளி எலான் மஸ்க் என்பவர் உலகின் செல்வந்த நபராக உருவெடுத்துள்ளார்.
- எலான் மஸ்க் என்பவர் ஸ்பேஸ்-எக்ஸ் மற்றும் டெஸ்லா ஆகியவற்றின் தலைமைச் செயல் அதிகாரியாக உள்ளார்.




## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (UNSC) தீவிரவாத எதிர்ப்புக் குழு

- இந்தியாவானது UNSC மன்றத்தின் 3 முக்கிய அமைப்புகளுக்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.
- இந்தியாவானது இந்தத் தீவிரவாத எதிர்ப்புக் குழுவிற்கு 2022 ஆம் ஆண்டில் தலைமை தாங்க உள்ளது.
- இந்தக் குழுவானது அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மீதான 9/11 தாக்குதலைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அமைக்கப் பட்டது.
- இந்தியாவானது இந்தக் குழுவிற்குக் கடைசியாக 2011-12 ஆம் ஆண்டில் தலைமை தாங்கியது.
- மேலும் இந்தியாவானது தாலிபான் தடைக் குழு மற்றும் லிபியா தடைக் குழு ஆகியவற்றிற்கும் சேர்த்து தலைமை தாங்க உள்ளது.


## VOC-202012/01

- ஐக்கிய ராஜ்ஜியத்தின் மாறுபட்ட கோவிட் - 19 நோய்க் கிருமியானது 41க்கும் மேற்பட்ட நாடுகளில் கண்டறியப் பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இது முதலில் தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளது.
- புனேவின் தேசிய நுண்ணுயிரியல் நிறுவனம் இந்த வைரஸை வெற்றிகரமாக தனிமைப் படுத்தியுள்ளது.
- இந்தியா சமீபத்தில் INSACOG (Indian SARS-CoV-2 மரபணு கூட்டமைப்பு) ஆய்வகங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது NIBMG கொல்கத்தா, ILS புவனேஸ்வர், NIV புனே, CCS புனே, CCMB ஹைதராபாத், CDFD ஹைதராபாத், InSTEM பெங்களூரு, நிம்ஹான்ஸ் பெங்களூரு, IGIB டெல்லி, NCDC டெல்லி ஆகிய பத்து ஆய்வகங்களின் கூட்டமைப்பாகும்.

## தெற்காசிய எரிசக்தி குழு

- ❖ இது வெளியுறவுத் துறை விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் நிறுவப் பட்டு உள்ளது.
- ❖ இதற்கு முன்னாள் மத்திய மின்துறை செயலாளர் ராம் வினய் ஷாஹி தலைமை தாங்குவார்.
- ❖ இதன் நோக்கம் தெற்காசியாவை மையமாகக் கொண்ட ஒரு எரிசக்தி பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்குவதாகும்.

## 2020 ஆம் ஆண்டில் உலகின் பெரும் பணக்காரர்




- ❖ ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, அமெரிக்காவின் எலான் மஸ்க் அமெரிக்காவின் ஜெஃப் பெசோஸை விஞ்சி உலகின் பெரும் பணக்காரர் ஆனார்.
- ❖ 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகளவில் அதிக எண்ணிக்கையிலான பெரும் பணக்காரர்களின் தாயகமாக அமெரிக்கா உள்ளது.
- ❖ ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் அறிக்கைப் படி, சீனா (389), ஜெர்மனி (107), இந்தியா (102) ஆகியவை அமெரிக்காவைத் தொடர்ந்து அடுத்த 3 இடங்களில் உள்ளன.

## தெற்காசியா பலதரப்பு சந்திப்பு

- ❖ தெற்காசியாவைச் சேர்ந்த நாடுகளுடன் சீனா தனது மூன்றாவது பலதரப்பு பேச்சு வார்த்தையை நடத்தியுள்ளது.
- ❖ இது இந்தியா, பூடான் மற்றும் மாலத்தீவைத் தவிர இந்தப் பிராந்தியத்தின் ஒவ்வொரு நாட்டையும் ஒன்றிணைத்துள்ளது.
- ❖ மூன்று பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தான் மற்றும் நேபாளம் கலந்து கொண்டு உள்ளன.

## எச்-1பி நுழைவு இசைவு விதிகள்

- அமெரிக்க நிர்வாகமானது மீண்டும் ஒரு முறை எச்-1பி நுழைவு இசைவு விதிகளைத் திருத்தியுள்ளது.
- தற்பொழுது இந்த நுழைவு இசைவு விதிகள் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக உயர் ஊதியம் மற்றும் திறன்களுக்கு முன்னுரிமை அளிக்க உள்ளது.
- பணி நுழைவு இசைவுத் தேர்வின் பழைய குலுக்கல் முறை தற்பொழுது பின்பற்றப் பட மாட்டாது.
- அமெரிக்காவின் எச்-1பி நுழைவு இசைவு என்பது அமெரிக்க நிறுவனங்கள் அதன் தனித்துவப் பணிகளில் பட்டதாரி நிலையிலான பணியாளர்களைப் பணியமர்த்த அனுமதிக்கும் ஒரு புலம்பெயர்வுத் தன்மையற்ற நுழைவு இசைவு ஆகும்.

## 'கொள்ளை நோய்க்குப் பிந்தைய உலகில் இந்திய நகரங்கள்' அறிக்கை

- இந்த அறிக்கை உலகப் பொருளாதார மன்றத்தால் வெளியிடப் பட்டது.
- இது நகரங்களின் மிக முக்கியமான சவால்களை எடுத்துக் காட்டுகிறது.
- ஒவ்வொரு நிமிடமும் சராசரியாக 25-30 பேர் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு குடிபெயர்கின்றனர் என்று இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- மேலும் அனைத்து நகர்ப்புறக் குடும்பங்களிலும் சுமார் 35% பேரால் சந்தை விலையில் வீடுகளை வாங்க முடியாது என்று இந்த ஆய்வு கூறியுள்ளது.

## எபோலா தடுப்பூசியின் இருப்பு

- இது சமீபத்தில் நான்கு சர்வதேச சுகாதார மற்றும் மனிதாபிமான அமைப்புகளால் நிறுவப் பட்டது.
- அவை உலக சுகாதார அமைப்பு, மெடிசின்ஸ் சான்ஸ் ஃபிராண்டியர்ஸ், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் யுனிசெப் ஆகியனவாகும்.
- எதிர்காலத்தில் எபோலா நோய் வெடிப்பைக் கட்டுப்படுத்த வேண்டி சுவிட்சர்லாந்தில் இது நிறுவப் பட்டது.
- உலக சுகாதார நிறுவனம் எபோலா தடுப்பூசிகளின் ஒரு உலகளாவியக் கையிருப்பை நிறுவ அழுத்தம் கொடுக்கிறது.
- திடீர் நோய் வெடிப்பின் போது உதவ GAVI தடுப்பூசிக் கூட்டணியானது தடுப்பூசிக் கையிருப்புக்கு வேண்டிய நிதி உதவியை வழங்கும்.

## கடல் கண்காணிப்பு – 21 (SPR Vigil)

- இந்தியக் கடற்படையானது கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியின் 2வது பதிப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பயிற்சியானது கடற்கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்புப் பிரிவில் இந்தியாவின் தயார் நிலையை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தியக் கடற்படையினால் நடத்தப்படும் இந்தப் பயிற்சியானது இந்தியாவின் கடற் பகுதியான 7516 கிலோ மீட்டர் முழுவதிலும் மற்றும் இந்தியாவின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலும் நடத்தப்பட உள்ளது.

- இது 13 கடற்கரையோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்க உள்ளது.
- இந்தப் பயிற்சியின் தொடக்கப் பதிப்பானது 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் நிகழ்ந்தது.
- கடல் கண்காணிப்பு என்பது "ட்ரோபேக்ஸ்" எனப்படும் கட்டுப்பாட்டு அளவிலான முக்கியப் பயிற்சியை நோக்கிய ஒரு நடவடிக்கையாகும்.
- இந்தியக் கடற்படையானது ட்ரோபேக்ஸ் பயிற்சியை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துகின்றது.
- ட்ரோபேக்ஸ் என்பது வெப்ப மண்டல பிராந்திய அளவிலான தயார் நிலை மற்றும் செயல்பாட்டுப் பயிற்சி என்பதைக் குறிக்கின்றது.
- இது இந்திய விமானப் படை, இந்திய இராணுவம் மற்றும் இந்தியக் கடற்படை ஆகிய படைகள் பங்கேற்கும் வகையிலான ஒரு படைகளுக்கு இடையிலான இராணுவப் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியானது இந்தியக் கடற்படை, இந்திய விமானப் படை, இந்திய காலாட் படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படை ஆகியவற்றின் போர்க்காலத் தயார் நிலையைச் சோதிப்பதற்காக நடத்தப்படுகின்றது.
- முதலாவது ட்ரோபேக்ஸ் பயிற்சியானது 2005 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.




## ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடு

- இது சர்வதேச வான்வெளிப் போக்குவரத்து மன்றத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்தக் குறியீடானது கடவுச் சீட்டு வைத்துள்ளவர்கள் நுழைவு இசைவு இல்லாமல் சென்று வந்துள்ள இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வெளியிடப் பட்டு உள்ளது.
- நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை "கடவுச் சீட்டு வைத்துக் கொள்வதற்கு உகந்த வகையில் அல்லாத மிக மோசமான கடவுச் சீட்டு" என்ற பிரிவில் தொடர்ந்து நீடிக்கின்றன.
- இதில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது.
- ஜப்பான் நாட்டுக் குடிமக்கள் 191 நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள முடியும்.
- இதில் சிங்கப்பூர் 2வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 85வது இடத்தில் உள்ளது.





## நாட்டினால் ஆதரிக்கப்படும் தீவிரவாதம்

- அமெரிக்க அரசானது கியூபாவை அரசால் ஆதரவளிக்கப் படும் ஒரு தீவிரவாத நாடாக அறிவித்துள்ளது.
- ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையாது ஒபாமா நிர்வாகத்தின் முந்தைய முடிவை மாற்றியமைத்துள்ளது.
- சமீபத்தில் சூடான் நாடானது இஸ்ரேல் – சூடான் இருதரப்பு உறவு இயல்பாக்கல் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இதிலிருந்து நீக்கப் பட்டது.
- தற்பொழுது ஈரான், சிரியா மற்றும் வட கொரியா ஆகியவை தீவிரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளின் பட்டியலில் உள்ளன.
- இந்தப் பட்டியலானது முதன்முதலில் ஈராக், லிபியா, சிரியா மற்றும் தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுடன் 1979 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.



## டிஜிட்டல் மதிப்பீட்டுத் தரவரிசையின் 3வது பதிப்பு – 2020




- ❖ இது மாஸ்டர்கார்டு நிறுவனத்துடன் இணைந்து டப்ட்ஸ் பல்கலைக் கழகத்தின் (Tufts University) பிளெட்சர் பள்ளியினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த 3வது பதிப்பில் வளரும் பொருளாதாரங்களிடையே இந்தியாவானது 4வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ இதில் சீனா முதலிடத்தில் உள்ளது.
- ❖ "வளரும் பொருளாதாரங்கள்" என்பது மிகவும் வேகமாக டிஜிட்டல் மயமான மற்றும் இன்னும் வளரும் வேண்டிய நாடுகளைக் குறிக்கின்றது.
- ❖ இந்தியா கடந்த 4 ஆண்டுகளில் தனது இணையத் தொடர்பை இரண்டு மடங்காக்கி உள்ளது.
- ❖ இந்தியாவானது 2023 ஆம் ஆண்டில் 350 மில்லியன் திறன்பேசிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது.


## டிரம்ப் மீதான பதவி நீக்கச் செயல்முறை

- ❖ டொனால்ட் டிரம்ப் இரண்டு முறை பதவி நீக்கச் செயல்முறை நிறைவேற்றப்பட்ட முதல் அமெரிக்க அதிபராவார்.
- ❖ அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையால் 232 - 197 வாக்குகள் என்ற விகிதத்தில் அவர் மீது பதவி நீக்கச் செயல்முறை நிறைவேற்றப்பட்டது .
- ❖ அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் போதுமான வாக்குகளைப் பெற்ற பிறகு, இந்தத் தீர்மானமானது அடுத்து அமெரிக்க செனட்டிற்குச் செல்லும்.
- ❖ அமெரிக்காவின் மேல் சபையான செனட் ஒரு விசாரணையை அமைக்கும்.
- ❖ இருப்பினும், ஜனவரி 20 ஆம் தேதிக்கு முன்பு அதை அந்த சபை நடத்த வாய்ப்பில்லை.
- ❖ ஜனவரி 20 ஆம் தேதி, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடன் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்கிறார்.
- ❖ இதன் பொருள் டொனால்ட் டிரம்ப் பதவியில் இருந்து நீக்கப்படும் அபாயத்திலிருந்து தப்பிப்பார்.

- ❖ மூன்று அமெரிக்க அதிபர்கள் மீது காங்கிரஸால் பதவி நீக்கச் செயல்முறை நிறைவேற்றப் பட்டுள்ளது – அவர்கள் டொனால்ட் டிரம்ப், ஆண்ட்ரூ ஜான்சன் மற்றும் பில் கிளிண்டன்.
- ❖ அவர்களில், டிரம்ப் மட்டுமே ஒரே பதவிக் காலத்தில் இரண்டு முறை குற்றஞ்சாட்டப் பட்டுள்ளார்.
- ❖ இருப்பினும், எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் இதன் மூலம் பதவியில் இருந்து நீக்கப் படவில்லை.

### *பதவி நீக்கம் செயல்படுத்தப்படும் முறை*

- ❖ முதலாவதாக, அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு வாக்களிக்க வேண்டும்.
- ❖ சாதாரண பெரும்பான்மையுடன் வாக்குகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், அந்நாட்டின் அதிபர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
- ❖ இருப்பினும், அதிபர் பதவியில் இருந்து அவர்கள் நீக்கப்படுவதில்லை.
- ❖ அடுத்த கட்டத்தில், மேல் சபை, அதாவது அமெரிக்க செனட் ஆனது நீதிமன்றம் போல கூட்டப் படுகிறது.
- ❖ செனட்டில் மூன்றில் இரண்டு பங்கு நபர்கள் வாக்களித்தால் தான் அதிபர் பதவியில் இருந்து நீக்கப் படுவார்.




.


## பாலஸ்தீன தேசத்தின் தேர்தல்கள்

- ❖ 14 ஆண்டுகளுக்குப் பிறகு பாலஸ்தீனம் 2021 ஆம் ஆண்டில் அதன் முதல் தேசிய தேர்தலை நடத்த உள்ளது.
- ❖ பாராளுமன்றம், அதிபர் மற்றும் தேசிய மன்றத் தேர்தல்கள் ஆகிய மூன்று தேர்தல்களும் பாலஸ்தீனத்தில் 2021 ஆம் ஆண்டில் நடத்தப்படும்.
- ❖ 2007 ஆம் ஆண்டில் ஹமாஸ் ஆனது காசா பகுதியை கைப்பற்றியதிலிருந்து ஹமாஸ் மற்றும் ஃபத்தா ஆகிய இரண்டு பாலஸ்தீனியக் குழுக்களும் ஒருவருக்கொருவர் எதிராக இருந்து வருகின்றன.
- ❖ இருப்பினும், 2020 ஆம் ஆண்டின் செப்டம்பரில், இரு குழுக்களும் துருக்கியில் சந்தித்து பாராளுமன்றம் மற்றும் அதிபர் ஆகியவற்றுக்கான தேர்தல்களை நடத்த ஒப்புக் கொண்டன.

- அதிபர் மஹ்மூத் அப்பாஸ் அடுத்த தேர்தல் வரை பாலஸ்தீன அதிபராக இருக்க ஒப்புக்கொண்டார்.
- ஆனால் அவர் மேற்குக் கரைப் பகுதியில் மட்டுமே அதிபராக அங்கீகரிக்கப் படுகிறார், ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காசா பகுதியால் அல்ல.
- பாலஸ்தீனத்தின் முதல் பாராளுமன்ற மற்றும் அதிபர் தேர்தல்கள் 1996 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டன.
- பாலஸ்தீனிய தேசிய ஆணையமானது ஃபத்தா என்ற கட்சி ஆதிக்கம் செலுத்தும் விதத்தில் ஒரு பல கட்சி முறையைக் கொண்டுள்ளது.

## 2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச இடம்பெயர்வு சிறப்பம்சங்கள்

- ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் "2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச இடம்பெயர்வு சிறப்பம்சங்கள்" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- அந்த அறிக்கையின்படி, இந்திய புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை உலகிலேயே மிகப் பெரியதாகும்.
- 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் இருந்து 18 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்தியாவுக்கு வெளியே வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர்.
- இவர்கள் ஐக்கிய அரபு அமீரகம் (3.5 மில்லியன்), சவுதி அரேபியா (2.5 மில்லியன்) மற்றும் அமெரிக்கா (2.7 மில்லியன்) போன்ற பல முக்கிய நாடுகளில் பரவியுள்ளனர்.
- இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோரைக் கொண்ட மற்ற நாடுகள் ஓமன், ஆஸ்திரேலியா, குவைத், கனடா, கத்தார், பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகும்.
- மெக்ஸிகோ, சீனா, ரஷ்யா மற்றும் சிரியா ஆகியவை அதிகளவில் புலம்பெயர்ந்தோர் மக்களைக் கொண்ட மற்ற இதர நாடுகளாகும்.
- சர்வதேச புலம்பெயர்ந்தோரின் மையமாக அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நாடு அமெரிக்கா ஆகும்.
- அதைத் தொடர்ந்து ஜெர்மனி, சவுதி அரேபியா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகியவை உள்ளன.



## உலக சுகாதார அமைப்பின் (WHO) நிர்வாக வாரியத்தின் 148வது அமர்வு

- இந்தியாவின் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் இந்த அமர்விற்குத் தலைமை தாங்கினார்.
- இவர் 2020 ஆம் ஆண்டை அறிவியலின் ஆண்டு என்றும் 2021 ஆம் ஆண்டை உலக ஒற்றுமை மற்றும் உயிர் பிழைத்தலிற்கான ஆண்டு என்றும் கூறியுள்ளார்.




## உலகளாவிய பிரிட்டன், உலகளாவிய தரகர்

- சமீபத்தில் சத்தம் ஹவுஸ் நிறுவனமானது பிரெக்ஸிட்டிற்குப் பிறகு ஐக்கிய இராஜ்ஜியத்தின் வெளியுறவுக் கொள்கைக்கான ஒரு செயல்திட்டத்தைப் பரிந்துரைக்கும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவை சீனா, சவுதி அரேபியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுடன் சேர்ந்து "கடினமான நான்கு" நாடுகளில் ஒன்றாக வகைப்படுத்தியுள்ளது.
- இந்த அறிக்கையானது "உலகளாவிய பிரிட்டன், உலகளாவியத் தரகர்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- மேலும் சத்தம் ஹவுஸ் நிறுவனமானது "ராயல் சர்வதேச விவகாரங்கள் மையம்" என்றும் அழைக்கப் படுகின்றது.

## பாலைவனப் போர் வீரன் – 21 பயிற்சி

- இது இந்திய விமானப் படை மற்றும் பிரெஞ்சு வான்வெளிப் படை ஆகியவற்றிற்கு இடையே நடத்தப்படும் ஒரு இரு தரப்புப் பயிற்சியாகும்.
- இந்த ஆண்டில் இது ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூரில் நடத்தப்பட உள்ளது.
- பிரெஞ்சு வான்வெளிப் படை மற்றும் இந்திய விமானப் படை ஆகியவை "கருடா" எனப்படும் விமானப் படைப் பயிற்சியின் 6 பதிப்புகளில் பங்கேற்றுள்ளன.
- கருடா என்ற தொடர் பயிற்சியுடன் சேர்த்துக் கூடுதலாக பாலைவனப் போர் வீரன் பயிற்சி 21 என்ற பயிற்சியானது நடத்தப்படுகின்றது.

## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் (UNGA) வாக்களிக்கும் உரிமை

- ஈரான் நாட்டுடன் சேர்த்து லிபியா, நைஜர், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ பிரேசவில்லி, ஜிம்பாப்வே மற்றும் தெற்கு சூடான் ஆகிய 6 நாடுகள் UNGA அமைப்பில் தங்களது வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளன.
- இந்த நாடுகள் தங்களது நிலுவைத் தொகையினைச் செலுத்தத் தவறி விட்டன.

## தடையற்ற வான்வெளி ஒப்பந்தம் (OST)


- ரஷ்யாவானது OSTவிலிருந்து (Open Skies Treaty) விலகுவதாக அறிவித்துள்ளது.
- இது 30 நாடுகளுக்கு இடையிலான ஒரு ஒப்பந்தமாகும்.
- இது ஆயுதமற்ற உளவுத் துறை விமானங்களை இதில் உறுப்பினராக உள்ள இதர மற்ற நாடுகளின் வான்வெளிப் பகுதியில் பறக்க அதன் உறுப்பினர் நாட்டை அனுமதிக்கச் செய்கின்றது.
- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவானது OSTவிலிருந்து விலகுவதாக அறிவித்தது.
- OST ஆனது சோவியத் யூனியன் பிரிக்கப் பட்டதற்குப் பின்பு 1992 ஆம் ஆண்டில் கையெழுத்திடப் பட்டது.




## D10 நாடுகள்

- ஐக்கிய இராஜ்ஜியமானது இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளை "விருந்தினர் நாடுகளாக" G7 மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்து உள்ளது.
- ஒரு நாடு G7 அமைப்பில் உறுப்பு நாடாக வேண்டுமெனில், அந்த நாடு அதிக நிகர தேசிய வளம் மற்றும் உயர் மனித மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்தில் ஜுன் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- D10 குழுவானது G7 அமைப்பில் உள்ள அனைத்து நாடுகளையும் சேர்த்து கூடுதலாக இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளையும் கொண்டு இருக்கும்.
- D10 என்பது உலகில் உள்ள 10 மிகப்பெரிய ஜனநாயக நாடுகள் என்பதைக் குறிக்கின்றது.
- G7 ஆனது 1975 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான், இத்தாலி, ஐக்கிய இராஜ்ஜியம் ஆகியவை இதில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

- ரஷ்யாவானது 1998 ஆம் ஆண்டில் இந்தக் குழுவில் உறுப்பு நாடாக அதிகாரப் பூர்வமாக இணைத்துக் கொள்ளப் பட்டது.
- இதன் மூலம் G7 ஆனது G8 ஆக மாறியது.
- எனினும் 2014 ஆம் ஆண்டில் ரஷ்யாவானது தனது துருப்புகளை கிழக்கு உக்ரைனுக்கு அனுப்பி கிரிமியாவைக் கைப்பற்றியதால் இதர G8 நாடுகள் ரஷ்யாவைக் கடுமையாக விமர்சித்தன.
- இதன் மூலம் 2014 ஆம் ஆண்டில் G8 ஆனது மீண்டும் G7 ஆக மாறியது.




## டிரன்ஹேட்டா

- டிரன்ஹேட்டா என்ற ஒரு கும்பலானது தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குள் அதிக அளவு கோக்கெயின் பொருளைக் கடத்துவதற்கு காரணமாக இருப்பதாக இத்தாலி நாட்டு அரசு நம்புகின்றது.
- இது இத்தாலியின் காலப்ரியா பகுதியில் இருக்கும் புகழ்பெற்ற இத்தாலியக் கும்பல் ஆகும்.
- சட்ட அமலாக்க ஒத்துழைப்பிற்கான ஐரோப்பிய ஒன்றிய மன்றத்தின் படி, டிரன்ஹேட்டா கும்பலானது உலகில் மிகவும் வலிமையாக கட்டமைக்கப்பட்ட ஒரு குற்றக் குழுவாக உள்ளது.


## தாரி சூ நதி

- சீனாவானது அருணாச்சலப் பிரதேசத்தில் ஒரு புதிய கிராமத்தைக் கட்டமைத்து உள்ளதாக செயற்கைக் கோள் படங்கள் காட்டுகின்றன.



- இந்தக் குடியிருப்புகள் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள தாரி சூ நதிக் கரையில் அமைந்துள்ளன.
- இந்தக் கிராமமானது மக்மோகன் கோட்டிற்குத் தெற்கில் அமைந்துள்ளது.

## மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ அடிப்படையிலான கோவிட்-19 சோதனை




- அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கோவிட் – 19 நோயாளிகளின் இரத்த மாதிரியில் மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏவை அளவிடுவதற்காக ஒரு புதிய விரைவு கோவிட் – 19 சோதனையை உருவாக்கியுள்ளனர்.
- மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ என்பது பொதுவாக செல்களின் ஆற்றல் உற்பத்தியகங்களுக்குள் இருக்கும் ஒரு தனித்துவ மரபணு வகைப் பொருளாகும்.
- இந்தச் சோதனையானது அதிக வைரஸ் அபாயத்தைக் கொண்டுள்ள மக்களைக் கண்டறிவதற்கு மிகவும் உதவிகரமானதாக இருக்கும்.
- மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ ஆனது உடல் செல்களின் உயிரணு ஆற்றல் நுண்ணுறுப்புகளில் அமைந்துள்ளது.
- மைட்டோகாண்டிரியா ஆனது உணவில் உள்ள ரசாயன ஆற்றலை அடினோசைன் டிரைபாஸ்பேட்டாக (ATP) மாற்றுகின்றது.
- ATP ஆனது தசைச் சுருக்கம் மற்றும் நரம்புத் தூண்டல் பரவல் ஆகியவற்றிற்கான ஆற்றலை வழங்குகின்றது.
- மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ ஆனது தாயிடமிருந்து பெறப் படுகின்றது.
- மனிதர்களைத் தவிர்த்து, மைட்டோகாண்டிரியல் டிஎன்ஏ ஆனது பாசிகள் மற்றும் பூஞ்சைகளிலும் காணப் படுகின்றது.
- மைட்டோகாண்டிரியல் செல்லின் ஆற்றல் மையம் என்றும் அழைக்கப்படுகின்றது.

## டாவோஸ் கொள்கை உச்சி மாநாடு

- டாவோஸ் கொள்கை உச்சி மாநாடானது உலகப் பொருளாதார மன்றத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இது இந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற உள்ளது.
- உலகப் பொருளாதார மன்றத்தின் "Great Reset Initiative" (பெரும் சீரமைப்புத் திட்டம்) என்ற ஒரு முன்னெடுப்பானது டாவோஸ் கொள்கை உச்சி மாநாட்டின் போது தொடங்கப்பட உள்ளது.
- இந்த உச்சி மாநாட்டின் மீதான கருத்துரு "ஒருங்கிணைந்த மற்றும் நிலையான உலகத்திற்கான பங்குதாரர்கள்" என்பதாகும்.

- 2021 ஆம் ஆண்டில், உலகப் பொருளாதார மன்றம் தனது டாவோஸ் கூட்டத்தில் ஒரு புதிய இரட்டை உச்சி மாநாட்டு வடிவத்தைக் கொண்டு வந்துள்ளது.
- ஒன்று வழக்கமான டாவோஸ் கொள்கை உச்சி மாநாடு, மற்றொன்று புதிய மிகப்பெரிய பெரும் சீரமைப்புத் திட்ட முன்னெடுப்பு (Great Reset Initiative ) என்பதாகும்.
- அடிப்படையில், கோவிட்-19 நெருக்கடியிலிருந்து உலகளாவியப் பொருளாதாரத்தை மீட்க இந்தப் புதிய முயற்சி தொடங்கப்படுகிறது.


## பயங்கரவாதத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்

- வெகு எளிதில் தீவிரமாக பாதிக்கப்படக் கூடிய இலக்குகளுக்கு எதிரான பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இது ஓர் உலகளாவிய திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது ஐ.நா. நாகரிகங்களின் கூட்டணி மற்றும் ஐ.நா. பிராந்தியத்திற்கிடையிலான குற்ற மற்றும் நீதி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுகிறது.
- இது பன்னாட்டுக் காவலகம் மற்றும் ஐ.நா. பயங்கரவாதக் குழுவின் நிர்வாக இயக்குநரகத்துடன் இணைந்து கலந்தாலோசிக்கப் பட்டு வருகிறது.

UNITED NATIONS
OFFICE OF COUNTER-TERRORISM
UN Counter-Terrorism Centre (UNCCT)

## உலகளாவிய தாக்குதல் திறன் குறியீடு


- இது சாத்தியமான இராணுவ வலிமையின் அடிப்படையில் உலக அளவில் நாடுகளை வரிசைப்படுத்துகிறது.
- இக்குறியீடு ஆனது 138 நாடுகளைத் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- நீண்டகால தாக்குதல் மற்றும் தற்காப்பு இராணுவப் பிரச்சாரங்களின் அடிப்படையில் நாடுகள் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளன.



- இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யா உள்ளது.
- சீனா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இக்குறியீட்டில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- பாகிஸ்தான் இராணுவமானது இஸ்ரேல், கனடாவை விஞ்சி உலகின் 10வது மிக சக்தி வாய்ந்த நாடாக அதன் இடத்தைப் பிடித்துள்ளது.

## வீட்டிலிருந்து பணி செய்தல் – திரைமறைவிலிருந்து நாகரீகமான பணிக்கு


- இது சர்வதேச தொழிலாளர் அமைப்பு வெளியிட்ட ஓர் அறிக்கையாகும்.
- கோவிட்-19 தொற்றுநோய் பரவியதால், உலகில் பெருமளவு தொழிலாளர்கள் வீட்டிலிருந்த படியே பணி செய்ய துவங்கி விட்டனர்.
- இந்த அறிக்கை வீட்டிலிருந்துப் பணி செய்தல் பற்றிய புரிதலை மேம்படுத்துவதோடு பழைய மற்றும் புதிதாக வீட்டிலிருந்துப் பணிபுரிவோரின் முறையான பணி நிலைமைக்கு வழிவகுக்கும் கொள்கை வழிகாட்டுதலையும் வழங்க முற்படுகிறது.




## அமெரிக்காவின் புதிய அதிபர் - ஜோ பைடன்

- ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் அவர்கள் 2021 ஜனவரி 20 அன்று அமெரிக்காவின் 46வது அதிபராக பதவியேற்றார்.
- அமெரிக்கப் பாராளுமன்றக் கட்டிடத்தின் மேற்கு முகப்பில் நிகழ்த்தப்பட்ட 59வது அதிபர் பதவியேற்பு விழாவில் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் மற்றும் துணை அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட கமலா ஹாரிஸ் ஆகியோர் பதவியேற்றனர்.
- 78 வயதில் பதவியேற்கும் இவர் மிகவும் வயதான அமெரிக்க அதிபராவார்.
- 2020 ஆம் ஆண்டின் அமெரிக்க அதிபர் தேர்தலானது பைடன் அமெரிக்க அதிபர் பதவிக்குப் போட்டியிடும் மூன்றாவது முறையாகும்.
- அவரது முதல் முயற்சி 1988 ஆம் ஆண்டிலும் மற்றும் இரண்டாவது முயற்சி 2008 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது.
- இவர் 2008 முதல் 2016 வரை இரண்டு பதவிக் காலத்திற்கு முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவின் துணை அதிபராக பணியாற்றினார்.
- அடுத்துப் பதவியேற்ற கமலா ஹாரிஸ் அவர்கள் அமெரிக்காவின் முதல் பெண், ஆப்பிரிக்க மற்றும் ஆசிய-அமெரிக்க இனத்தைச் சேர்ந்த துணை அதிபராவார்.

- 2016 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் செனட்டில் பணி புரிந்த முதல் தெற்காசிய அமெரிக்க மற்றும் இரண்டாவது ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றார்.
- டிரம்பின் 45வது அமெரிக்க அதிபர் பதவியானது ஜனவரி 20 மதியம் முடிவுக்கு வந்தது.
- இந்தப் பதவியேற்பு விழாவில் முன்னாள் அதிபர்களான பாரக் ஒபாமா, பில் கிளிண்டன் மற்றும் ஜார்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோர் ஒன்றுபட்ட பங்களிப்பை வழங்கினர்.
- டொனால்ட் டிரம்ப் இந்த விழாவை முழுவதுமாக தவிர்த்தார்.



## 15 நிர்வாக ஆணைகள் – அமெரிக்கா

- ஜோ பைடன் தனது நிர்வாகத்தின் முதல் நாளில் 15 நிர்வாக ஆணைகளில் கையெழுத்திட்டுள்ளார்.
- இவர் கடந்த 4 ஆண்டுகளில் இவருக்கு முன்பு அதிபராக இருந்த டொனால்டு ட்ரம்பின் முக்கியக் கொள்கைகளைச் செயல்பாட்டிலிருந்து நீக்கியுள்ளார்.
- அதிபர் ஜோ பைடனால் கையெழுத்திடப்பட்ட முதல் நிர்வாக ஆணை கொரோனா வைரஸ் பிரச்சினைக்கு வேண்டி மைய அரசின் எதிர்வினையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கோவிட்-19 குறித்ததாகும்.
- இந்த ஆணையானது பொது இடங்களில் பொது மக்கள் சமூக இடைவெளியைக் கடைபிடிப்பது மற்றும் முகக் கவசம் அணிவது ஆகியவற்றைக் கட்டாயமாக்கி உள்ளது.
- ட்ரம்பின் ஒரு திட்டமான மெக்சிகோவுடனான எல்லைச் சுவர் கட்டுமானத்தை நிறுத்தி வைத்தல், பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் மீண்டும் இணைதல், முஸ்லீம் பயணத் தடையை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகியவை அவரின் இதர சில முக்கிய ஆணைகளாகும்.
- மேலும் இவர் உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதையும் நிறுத்தி வைத்துள்ளார்.
- மேலும் இவர் முக்கியமான எக்ஸ்எல் என்ற குழாய்த் தொடர் திட்டத்திற்கு வழங்கப் பட்ட அதிபரது ஒப்புதலையும் ரத்து செய்துள்ளார்.
- XL முக்கிய குழாய்த் தொடர் அமைப்பு என்பது அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் ஒரு எண்ணெய் குழாய்த் தொடர் அமைப்பாகும்.

- மேலும் இவர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து அமெரிக்கக் குடியுரிமை அல்லாதவர்களை விலக்கும் ட்ரம்ப் நிர்வாகத்தின் திட்டத்தை நீக்குதல் தொடர்பான ஒரு ஆணையிலும் கையெழுத்திட்டுள்ளார்.

## உலகின் மிகப் பழமையான குகை ஓவியம்

- உலகின் மிகப் பழமையானதாக அறியப்பட்ட குகை ஓவியமானது இந்தோனேசிய நாட்டில் உள்ள லியாங் டெடோங்ஜ்ஜின் என்ற ஒரு சுண்ணாம்புக் கல் குகையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- சிவப்புக் காவி நிறத்தைப் பயன்படுத்தி வரையப்பட்ட இந்த ஓவியமானது இந்தோனேஷியாவின் சுலாவேசி தீவில் மட்டுமே காணப்படும் ஒரு காட்டுப் பன்றியைக் காட்டுகின்றது.
- சுலாவேசி பன்றியின் ஓவியமானது உலகின் மிகப் பழமையான ஒரு விலங்கின் மீதான தற்பொழுது இருக்கும் ஒரு உருவப் படமாகும்.



## சல்வாடோர் முண்டி ஓவியம்

- சமீபத்தில் இத்தாலி 16வது நூற்றாண்டைச் சேர்ந்த "சல்வாடோர் முண்டி" என்ற ஓவியத்தை மீட்டெடுத்துள்ளது.
- இது லியோனர்டோ டா வின்சியின் உலகின் மிகவும் விலை மதிப்பு மிக்க ஓவியமாகும்.
- இந்த ஓவியமானது இயேசு தனது வலது கையைக் குறுக்காக வைத்து புத்தெழுச்சியுடன் துணி நெய்து கொண்டிருக்கும் ஒரு சைகையைக் குறிக்கின்றது.
- லியோனர்டோ டா வின்சி இத்தாலியைச் சேர்ந்த ஒரு பல்துறை வல்லுநர் ஆவார்.
- பல்துறை வல்லுநர் என்பது பல்வேறு துறைகளின் மீது அறிவைக் கொண்ட தனி நபரைக் குறிக்கின்றது.




## உலக அபாயங்கள் அறிக்கை 2021

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF) தனது 16வது பதிப்பான உலக அபாயங்கள் அறிக்கை, 2021 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் உள்ள அம்சங்கள் யாவும் WEF மன்றத்தின் பரந்த தலைமைத்துவச் சமூகங்களின் 650 உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட உலக அபாயக் கருத்தாக்க ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.
- காலநிலைச் செயல்பாட்டுத் தோல்விகள், தொற்று நோய்கள் மற்றும் பேரழிவிற்கான ஆயுதங்கள் ஆகியவை தாக்கங்களினால் ஏற்படும் முதல் 3 இடங்களிலுள்ள அபாயங்களாகும்.
- அடுத்த 10 ஆண்டுகளில் ஏற்பட இருக்கும் அபாயங்களில் முதல் 3 இடங்களில் உள்ள அபாயங்கள் காலநிலைச் செயல்பாட்டுத் தோல்விகள், கடுமையான வானிலை மற்றும் மனிதர்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவையாகும்.





## உணவுப் பாதுகாப்பு அறிக்கை

- இது "உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியக் கண்ணோட்டம் 2020 : ஊட்டச்சத்தை மேம்படுத்துவதில் தாய் மற்றும் குழந்தையின் உணவு முறைகள்" என்பதாகும்.
- இது கோவிட்-19 தொற்று நோய் வெடிப்பிற்கு முன்னரே இந்தப் பகுதியில் 1.9 பில்லியன் மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெற முடியாமல் இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பு, ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம், உலக உணவுத் திட்டம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப்பட்டுள்ளது.
- ஆசிய மற்றும் பசிபிக் பகுதியில் ஊட்டச்சத்து குறித்த உலக சுகாதார மன்றத்தின் இலக்குகள் 2030 மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG 2 - பட்டினியின்மை) ஆகியவற்றை நோக்கியச் செயல்பாடுகள் குறித்து ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் இணைந்து வெளியிடப்பட்ட மூன்றாவது வருடாந்திர அறிக்கை இதுவாகும்.




## அணு ஆயுதங்களின் தடை மீதான ஒப்பந்தம்

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 22 அன்று "அணு ஆயுதங்களின் தடை மீதான ஒப்பந்தம்" எனப்படும் அணு ஆயுதங்கள் மீதான தடைக்கான முதலாவது ஒப்பந்தமானது நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தமானது அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிக்கும் நோக்கம் கொண்ட, சட்டப்பூர்வமாக அனைவரையும் கட்டுப்படுத்தும் முதலாவது ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- இது ஐக்கிய நாடுகளின் 120 உறுப்பு நாடுகளினால் ஆதரிக்கப்பட்டது.
- எனினும், அணு ஆயுதங்களை வைத்திருக்கும் ஐக்கிய நாடுகளின் 9 உறுப்பு நாடுகளும் இதற்கு ஆதரவளிக்கவில்லை.
- அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, பிரான்சு, பாகிஸ்தான், இந்தியா, இஸ்ரேல் மற்றும் வட கொரியா ஆகியவை இந்த 9 நாடுகளாகும்.
- இந்தியாவானது அணு ஆயுதங்களின் தடை மீதான ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்க வில்லை.
- இந்தியாவானது அணு ஆயுத நாடுகளுக்கு எதிராக "முதலில் பயன்படுத்துவதில்லை" என்ற கொள்கையையும் அணு ஆயுதமற்ற நாடுகளுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற கொள்கையையும் கடைபிடிக்க உறுதி பூண்டுள்ளது.
- இந்தியாவானது அணுப் பிளவுப் பொருட்கள் நிறுத்த ஒப்பந்தம் குறித்த சமாதானப் பேச்சிலும் ஈடுபட உறுதி பூண்டுள்ளது.
- FMCT (Fissile Material Cut Off Treaty) என்பது முன்மொழியப்பட்டுள்ள ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஆகும்.
- இந்த ஒப்பந்தமானது செறிவூட்டப்பட்ட யுரேனியம் மற்றும் புளூட்டோனியத்தின் உற்பத்தியைத் தடை செய்கின்றது.
- மேலும் இந்தியாவானது அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் மற்றும் விரிவான அணு ஆயுதசோதனைத் தடை ஒப்பந்தம் ஆகியவற்றில் கையெழுத்திடவில்லை.




## ஆசிய ஒத்துழைப்புக் கருத்தரங்கு

- இது "புதிய, வழக்கமான மற்றும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமானச் சுற்றுலா" என்பதின் கீழ் நடத்தப்பட்டது.
- மேலும் ஆசிய ஒத்துழைப்புக் கருத்தரங்கு நாடுகள், இந்தச் சந்திப்பின் முடிவில் "அங்காரா பிரகடனத்தையும்" ஏற்றுக் கொண்டனர்.

## அமைதி மற்றும் சகிப்புத் தன்மை கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான தீர்மானம்

- ஐக்கிய நாடுகள் சபையானது அமைதி மற்றும் சகிப்புத்தன்மை கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான ஒரு தீர்மானத்தை சமீபத்தில் நிறைவேற்றியது.
- இந்தத் தீர்மானம் உலகம் முழுவதும் பரவியிருக்கும் மதத் தளங்களைப் பாதுகாத்திட செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தீர்மானம் "மதத் தளங்களைப் பாதுகாக்க அமைதி மற்றும் சகிப்புத் தன்மை கலாச்சாரத்தை ஊக்குவித்தல்" என்ற தலைப்பில் இருந்தது.
- இந்தத் தீர்மானமானது மதத் தளங்கள் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் குற்றங்களைக் கண்டிக்கிறது.
- வலுக்கட்டாயமாக மதம் மாற்றுவதையும் இந்தத் தீர்மானம் கண்டிக்கிறது.
- இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து இருக்கின்றது.



### புதிய START ஒப்பந்தம்

- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் சமீபத்தில் புதிய START (Strategic Arms Reduction Treaty) ஒப்பந்தத்தை ஐந்து ஆண்டுகள் நீட்டிக்க முன்மொழிந்துள்ளார்.
- புதிய START ஒப்பந்தமானது அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் 2010 ஆம் ஆண்டில் ப்ராக் (செக் குடியரசின் தலைநகரம்) நகரத்தில் கையெழுத்தானது.
- இது 2011 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் அணு ஆயுத உற்பத்தி மற்றும் பயன்பாட்டைக் குறைக்க இது கையெழுத்தானது.

## பொருளாதாரச் செய்திகள்

### எளிதில் தொழில் தொடங்குதல் மீதான சீர்திருத்தங்கள்

- எளிதில் தொழில் தொடங்குதல் மீதான சீர்திருத்தங்களை நிறைவு செய்த 6வது மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.
- எளிதில் தொழில் தொடங்குதல் மீதான சீர்திருத்தங்களை நிறைவு செய்துள்ள மற்ற 5 மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய 5 மாநிலங்களாகும்.
- இந்தத் திட்டமானது எளிதில் தொழில் தொடங்குதல் மீதான சீர்திருத்தங்களை மேற்கொண்ட மாநிலங்களுக்குக் கூடுதல் கடன் பெறுவதற்கான அனுமதியை இணைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின்படி, மத்திய அரசானது மாநிலங்களின் கடன் வரம்பை அதன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 2% என்ற அளவிற்கு மேம்படுத்தியுள்ளது.
- ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டைத் திட்டம், எளிதில் தொழில் தொடங்குவதற்கான சீர்திருத்தங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது பயன்பாடு மற்றும் மின்துறைச் சீர்திருத்தங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களாகும்.

**TABLE 1: EASE OF DOING BUSINESS RANKS, TOP 10 IN 2019**

| State | 2015 | 2016 | 2017 | 2019 |
|---|---|---|---|---|
| Andhra Pradesh | 2 | 1 | 1 | 1 |
| Uttar Pradesh | 10 | 14 | 12 | 2 |
| Telangana | 13 | 1 | 2 | 3 |
| Madhya Pradesh | 5 | 5 | 7 | 4 |
| Jharkhand | 3 | 7 | 4 | 5 |
| Chhattisgarh | 4 | 4 | 6 | 6 |
| Himachal | 17 | 17 | 16 | 7 |
| Rajasthan | 6 | 8 | 9 | 8 |
| West Bengal | 11 | 15 | 10 | 9 |
| Gujarat | 1 | 3 | 5 | 10 |

*Source: DPIIT*

**TABLE 2: REFORMS, APPLICABLE/IMPLEMENTED**

| State | Applicable | Implemented |
|---|---|---|
| Andhra | 187 | 187 |
| UP | 186 | 184 |
| Telangana | 186 | 184 |
| MP | 187 | 187 |
| Jharkhand | 187 | 186 |
| Chhattisgarh | 187 | 186 |
| Himachal | 185 | 175 |
| Rajasthan | 186 | 183 |
| W Bengal | 187 | 187 |
| Gujarat | 187 | 187 |

*Source: DPIIT*


**TABLE 3: SHARE (%) IN NEW INVESTMENTS ANNOUNCED**

| State | 2017-18 | 2018-19 |
|---|---|---|
| Andhra | 6.56 | 16.29 |
| Haryana | 3.37 | 15.74 |
| Tamil Nadu | 4.01 | 9.32 |
| Gujarat | 6.76 | 7.74 |
| Maharashtra | 18.09 | 6.32 |
| Karnataka | 3.32 | 6.08 |
| Rajasthan | 2.01 | 3.04 |
| MP | 2.87 | 2.73 |
| Odisha | 8.25 | 2.43 |
| NCT Delhi | 1.38 | 1.76 |

*Source: CMIE*


## இந்தியாவின் முதல் சமூகத் தாக்கப் பத்திரங்கள்

- புனேவில் உள்ள பிம்ப்ரி சின்ச்வாட் மாநகராட்சி மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டமானது இந்தியாவின் முதல் சமூகத் தாக்கப் பத்திரத்தை உருவாக்குவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பத்திரத்துடன் தொடர்புடைய ஒரு பொது நலத் திட்டத்தின் செலவை மாநகராட்சி நிர்வாகமானது ஏற்கும்.
- ஒரு சமூகத் தாக்கப் பத்திரமானது அடிப்படையில் சிறந்த சமூக விளைவுகளுக்குப் பணம் செலுத்துகிற வகையில் அமைந்த பொதுத் துறை அதிகாரத்துடன் போடப் பட்டுள்ள ஒரு ஒப்பந்தமாகும்.




## ரிசர்வ் வங்கியின் போக்கு மற்றும் செயல்பாட்டு அறிக்கை, 2020

- இது வங்கித் துறையின் செயல்திறன் பற்றிய தகவல்களை வழங்குகின்றது.
- இதில் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை அடங்கும்.
- இந்த அறிக்கையானது வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949 என்ற சட்டத்தின் வரிசையில் அமைந்த ஒரு சட்டரீதியான ஆவணமாகும்.
- வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன் விகிதமானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 9.1 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 7.5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- பட்டியிலிடப் பட்ட வணிக வங்கிகளின் அபாய அளவுள்ள சொத்து விகிதத்திற்கான மூலதனமானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 14.3 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு செப்டம்பரில் 15.8 சதவீதமாக அதிகரித்து உள்ளது.
- இது பொதுத்துறை வங்கிகளை மறு மூலதனமாக்க உதவியுள்ளது.




*Note: GNPA ratio is calculated using annual accounts of banks and off-site returns (global operations)*

## BFSI மூவர்ஸ் மற்றும் ஷேக்கர்ஸ் 2020


- இது விஸிகி என்ற நிறுவனம் (Wizikey Firm) வெளியிட்ட ஒரு அறிக்கையாகும்.
- அந்த அறிக்கையின்படி, HDFC, ICICI மற்றும் SBI ஆகியவை 2020 ஆம் ஆண்டின் முதல் மூன்று இடத்தைப் பிடித்த வங்கிகளாகும்.
- கூகுள் பே மற்றும் ஃபோன் பே ஆகியவை நாட்டின் சிறந்த ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு வசதிகளாகும்.
- இதில் கூகுள் பே முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ஃபோன் பே உள்ளது.
- நவீன வங்கிகள் (Neo Banks) பிரிவில் யோனோ முதலிடத்திலும் அதைத் தொடர்ந்து நியோ மற்றும் கோடக் 811 ஆகிய வங்கிகளும் உள்ளன.

## ஆகாஷ் ஏவுகணை ஏற்றுமதி

- பாதுகாப்பு உபகரணங்களில் 5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு ஏற்றுமதியை இலக்காகக் கொள்ளும் நோக்கில் ஆகாஷ் ஏவுகணையை ஏற்றுமதி செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆகாஷ் ஏவுகணை என்பது நிலப்பரப்பில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் அழிக்கும் வகையில் 25 கி.மீ வரம்பினைக் கொண்ட குறுகிய தூரம் பாயும் ஒரு உள்நாட்டு ஏவுகணை ஆகும்.
- இது ஒருங்கிணைந்த வழிகாட்டப் பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் (1984) கீழ் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உருவாக்கப் பட்டது.
- இது 2014 ஆம் ஆண்டில் விமானப் படையிலும், 2015 ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்திலும் சேர்க்கப் பட்டது.



## டிஜிட்டல் பணவழங்கீட்டுக் குறியீடு




- இந்திய ரிசர்வ் வங்கி இந்தக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- RBI ஆனது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து அரையாண்டு அடிப்படையில் டிஜிட்டல் பணவழங்கீட்டுக் குறியீட்டை வெளியிட உள்ளது.
- இது இந்தியாவில் நேரடிப் பணமற்ற பரிமாற்றங்களின் வளர்ச்சியை அளவிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதற்கான அடிப்படை ஆண்டு 2018 ஆம் ஆண்டின் மார்ச் மாதமாகும்.
- இந்தக் குறியீடானது கட்டண செலுத்துநர்கள், கட்டண (பணவழங்கீட்டு) செயல்பாடு, பணவழங்கீட்டுக் கட்டமைப்பு, தேவைசார் கூறுகள் மற்றும் விநியோகக் கூறுகள் & நுகர்வோரை மையமாகக் கொள்தல் என 5 மிகப்பெரிய கூறுகளைக் கொண்டுள்ளது.

## நிலையான பயணக் காப்பீட்டுக் கொள்கை

- இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது சமீபத்தில் "நிலையான பயணக் காப்பீட்டுக் கொள்கையை" முன்மொழிந்துள்ளது.
- உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயணங்களின் போது காப்பீட்டுத் தொகையை உறுதி செய்வதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.

## வியட்நாமுக்கான இந்தியாவின் அரிசி ஏற்றுமதி


- வியட்நாம் நாடானது இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தொடங்கி உள்ளது.
- எனினும் உலகில் அரிசி ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தில் வியட்நாம் உள்ளது.
- குறைந்த உள்நாட்டு விநியோகத்தின் காரணமாக வியட்நாமில் உள்ளூர் விலைகள் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மிகவும் அதிகமாக உயர்ந்துள்ளன.
- மேலும், இந்திய அரிசியின் விலைகள் மிகவும் வரவேற்கக் கூடியதாக உள்ளன.

## TRIFOOD பூங்காக்கள்

- பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் டிரைஃபெட் (பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு) மத்தியப் பிரதேசத்தில் TRIFOOD பூங்காக்களை அமைப்பதற்காக அகில் பாரதிய வனவாசி கல்யாண் ஆசிரமத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- TRIFOOD என்பது பழங்குடியினர் விவகார அமைச்சகம், உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் மற்றும் டிரைஃபெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வன் தன் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.

## சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) வசூல்

- டிசம்பர் மாதத்தில் GST வசூலானது எப்பொழுதும் இல்லாத வகையில் அதிக அளவாக ரூ.1.5 இலட்சம் கோடி ரூபாய் மொத்த வருவாயாக வசூலாகியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாத GST வசூலானது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் வசூலானதை விட 12% அதிகமாகும்.
- நவம்பர் மாதத்திற்கான GST ஆனது டிசம்பர் மாதத்தில் வசூலிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.





## கொடுப்பனவுகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

- இந்த நிதியை இந்திய ரிசர்வ் வங்கி செயல்படுத்துகிறது.
- இது மூன்றாம் அடுக்கிலிருந்து ஆறாம் அடுக்கு வரை ஒவ்வொரு வருடமும் 30 லட்சம் வங்கிச் சேவை புள்ளிகளைச் சேர்ப்பதன் மூலம் பணம் ஏற்பு உள்கட்டமைப்பை அதிகரிப்பதாகும்.
- இது வடகிழக்கு மாநிலங்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தும்.
- ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் பிபி கானுங்கோ தலைமையில் ஓர் ஆலோசனைக் குழுவானது இதன் நிர்வாகத்திற்காக அமைக்கப் பட்டுள்ளது.


## சட்டப்பூர்வ நிறுவன அடையாளங் காட்டிகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ரூ.50 கோடி அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து நிதிப் பரிமாற்றங்களுக்கும் வேண்டி சட்டப்பூர்வ நிறுவன அடையாளங் காட்டிகளை (Entity Identifiers) கட்டாயமாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.
- உலகம் முழுவதும் நிதியியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்காளர்களையும் தனித்துவ முறையில் அடையாளம் காண்பதற்கு இந்த 20 இலக்க எண் பயன்படுத்தப்பட உள்ளது.
- இது மிகப்பெரிய அளவிலான பணப் பரிமாற்றங்களை மிகவும் நெருங்கிய முறையில் கண்காணிக்க வங்கிகள் மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களுக்கு உதவ உள்ளது.





## 2020-21 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

- மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகமானது 2020-21 நிதியாண்டிற்கான முதலாவது மேம்படுத்தப் பட்ட கணிப்பை (First Advance Estimates - FAE) வெளியிட்டுள்ளது.
- தேசிய வருமானத்தின் மேம்படுத்தப்பட்ட கணிப்பானது இந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் புள்ளியியல் அலுவலகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- GDP என்பது ஒரு நிதியாண்டில் ஒரு நாட்டிற்குள் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதிநிலை சரக்கு மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பாகும்.
- இதன்படி, 2020-21 ஆம் ஆண்டில் இந்தியாவின் GDP ஆனது 7.7% ஆகக் குறைய இருக்கின்றது.
- இந்தக் குறைதலானது வேளாண் துறையைத் தவிர மற்ற அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டு இருக்கின்றது.
- 2021-21 நிதியாண்டில் இந்திய உற்பத்தித் துறையானது 9.4% என்ற அளவிற்குக் குறைய இருக்கின்றது, அதே நேரத்தில் வேளாண் துறையானது 3.4% என்ற அளவில் வளர்ச்சியடையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2019-20 நிதியாண்டில் 4.2% வளர்ச்சியானது பதிவு செய்யப் பட்டது.




## ஒற்றைச் சாளர அடிப்படையில் அனுமதி வழங்கும் முறை

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு "ஒற்றைச் சாளர அடிப்படையில் அனுமதி வழங்கும் முறையை" தொடங்கி வைத்தார்.
- இது நிலக்கரிச் சுரங்கங்களின் சுமூகமான செயல்பாடுகளுக்கு அனுமதியைப் பெறுவதற்கான ஒரு நிகழ்நேரத் தளமாகும்.
- 2020 ஆம் ஆண்டின் ஜுன் மாதத்தில், பிரதமர் அவர்கள் ஆத்மநிர்பர் பாரத் அபியானின் கீழ் கூறப்பட்டுள்ளவற்றின் ஒரு பகுதியாக வணிக ரீதியான சுரங்கங்களுக்காக 41 நிலக்கரிச் சுரங்கங்களின் ஏலத்தை தொங்கி வைத்தார்.
- இந்தியாவானது உலகின் 4வது மிகப்பெரிய நிலக்கரி உற்பத்தியாளர் நாடாக இருந்த போதிலும் உலகில் 2வது மிகப்பெரிய நிலக்கரி இறக்குமதியாளர் நாடாக விளங்குகின்றது.
- 1973 ஆம் ஆண்டில் நிலக்கரித் துறையானது தேசியமயமாக்கப் பட்டது.
- இது உள்நாட்டு நிலக்கரியானது பொதுத் துறை நிறுவனங்களால் மட்டுமே தோண்டி எடுக்க முடியும் என்பதை குறிக்கின்றது.



## இந்தியாவின் 7வது வர்த்தக் கொள்கை மறு ஆய்வு

- இந்தியாவின் 7வது வர்த்தகக் கொள்கை மறு ஆய்வின் இரண்டாவது அமர்வானது உலக வர்த்தக அமைப்பில் (WTO) நிறைவுற்றது.
- 7வது வர்த்தகக் கொள்கை மறு ஆய்வின் இறுதி அமர்வு இதுவாகும்.
- வர்த்ததகக் கொள்கை மறு ஆய்வு என்பது WTO அமைப்பின் கண்காணிப்புச் செயல்முறையின் கீழ் உள்ள ஒரு முக்கியமான செயல்முறையாகும்.
- இதற்கு முன்பு, இந்தியாவின் இறுதியான வர்த்தகக் கொள்கை மறு ஆய்வானது 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது.

## நிதியியல் நிலைப்புத் தன்மை குறித்த அறிக்கை (FSR)

- இது இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) வெளியிடப்பட்டுள்ளது.
- இது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் ஒரு அறிக்கையாகும்.
- இது 22வது பதிப்பாகும்.
- இந்த அறிக்கையின் படி, வங்கிகளின் நிகர வாராக் கடனானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 13.5% ஆக அதிகரிக்க உள்ளது.
- இது அடிப்படை அளவீட்டின் கீழ் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 7.5% ஆக இருந்தது.
- RBI நிதியியல் நிலைப்புத் தன்மை குறித்த அறிக்கையானது நிதியியல் நிலைப்புத் தன்மை மற்றும் மேம்பாட்டு மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- நிதியியல் நிலைப்புத் தன்மை மற்றும் மேம்பாட்டு மன்றத்தின் தலைவர் மத்திய நிதித் துறை அமைச்சராவார்.
- இந்த மன்றத்தின் கருத்தாக்கமானது 2008 ஆம் ஆண்டில் ரகுராம் குழுவினால் முன் மொழியப் பட்டது.

## புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவுத் தளம்

- நிதி ஆயோக் மற்றும் ஃபிளிப்கார்ட் ஆகியவை இணைந்து ஒரு புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவுத் தளத்தைத் தொடங்கியுள்ளன.
- இது நாட்டில் பெண்களால் நடத்தப்படும் வணிகத்தை முன்னெடுப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



- இதன் கருத்துரு, "பெண்கள் முதலில், அனைவருக்குமான வாய்ப்புகள்" என்பதாகும்.
- இந்த தளத்திற்கான கருத்தாக்கமானது முதன்முதலில் நிதி ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரியான அமிதாப் காந்த் அவர்களால் முன்மொழியப்பட்டது.
- இது 2017 ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் நடத்தப்பட்ட 8வது உலகத் தொழில் முனைவோர் மாநாட்டில் அமைக்கப்பட்டது.

## பெருநிறுவன சமூகப் பொறுப்பு

- பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது கோவிட் - 19 தடுப்பூசி இடுதல் தொடர்பான விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் பொது மேம்பாட்டுப் பிரச்சாரங்கள் ஆகியவற்றுக்காக வேண்டி செலவழித்த நிதியை பெருநிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கை என வகைப்படுத்த அனுமதித்துள்ளது.
- நிறுவனங்கள் சட்டம், 2013 என்ற சட்டத்தின் ஏழாவது பட்டியலின்படி இவை அனுமதிக்கப்பட்ட சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளின் கீழ் வரும்.

## இரும்புத் தாதுக் கொள்கை

- சமீபத்தில் இந்திய இரயில்வேயானது ஒரு புதிய இரும்புத் தாதுக் கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தக் கொள்கையானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 அன்று நடைமுறைக்கு வர உள்ளது.
- இரும்புத் தாதுக் கொள்கையானது தாது அடுக்குகளின் ஒதுக்கீடு மற்றும் இரும்புத் தாதுவைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றை நிர்வகிக்கின்றது.
- இந்தக் கொள்கையானது உள்நாட்டு உற்பத்திச் செயல்பாடுகளுக்காக வேண்டி இரும்புத் தாதுவின் இயக்கத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்க இருக்கின்றது.
- இரும்புத் தாதுவானது இந்திய இரயில்வேயின் 2வது மிக முக்கிய இயக்கப் பொருளாக உள்ளது.
- இரும்புத் தாது மற்றும் எஃகு ஆகியவை இணைந்து இந்திய இரயில்வேயின் மொத்த சரக்கு இயக்கத்தில் 17% அளவினைக் கொண்டுள்ளது.
- சத்தீஸ்கர், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, கோவா, கேரளா, தமிழ்நாடு, இராஜஸ்தான் ஆகியவை இரும்புத் தாதுவை உற்பத்தி செய்யும் மிக முக்கிய மாநிலங்களாகும்.

## நொடித்தல் மற்றும் திவால் குறியீட்டின் பிரிவு 32A

- சமீபத்தில் இந்திய உச்ச நீதிமன்றமானது நொடித்தல் மற்றும் திவால் குறியீட்டின் பிரிவு 32A என்ற பிரிவின் செல்லுபடித் தன்மையை உறுதி செய்துள்ளது.
- இந்தத் தீர்ப்பின் கீழ், இந்திய உச்ச நீதிமன்றமானது பெருநிறுவனக் கடனாளிகளுக்கான வெற்றிகரமான ஏலதாரர்கள் விசாரணை ஆணையத்தினால் (அமலாக்கத் துறை அல்லது செபி போன்ற இதர சட்டப்பூர்வ அமைப்புகள்) மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைகளிலிருந்தும் பாதுகாப்பு பெறுவர் என்று அறிவித்துள்ளது.
- பிரிவு 32A ஆனது பெருநிறுவனக் கடனாளிகள் மற்றும் அவர்களின் சொத்திற்குப் பாதுகாப்பு அளிக்கின்றது.

## தேசிய முகமில்லா அபராதத் திட்டம்

- அபராத வழக்குகள் ஆனது தேசிய முகமில்லாத் தண்டனை மையத்திற்கு ஒதுக்கப் படுவதாகவும், முகமில்லா அபராதத் திட்டத்தின் கீழ் அவை 2021 ஆம் ஆண்டின் தேசிய முகமில்லா மதிப்பீட்டு மையத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய நேர்முக வரிகள் வாரியம் அறிவித்துள்ளது.
- அனைத்து அபராத வழக்குகளும் வருமான வரிச் சட்டம், 1961 என்ற சட்டத்தின் கீழ் விசாரிக்கத் தொடங்கப்பட்டன.
- வரி செலுத்தத் தவறுவோருக்கு அபராதம் விதிப்பதற்காக வேண்டி ஒருசார்பற்ற மற்றும் வெளிப்படையான இணையவழி முகமில்லா முறையை இது கொண்டிருக்கும்.

## வங்கியியல் அல்லாத நிதியியல் நிறுவனங்களின் (NBFC) மீதான ஒழுங்குமுறை


- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) வங்கி அல்லாத நிதியியல் நிறுவனங்களின் (NBFC) வலுவான ஒழுங்குமுறைக்காக 4 நிலை கொண்ட ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளது.
- இந்த 4 நிலை கொண்ட அமைப்பானது கீழ் அடுக்கு, மைய அடுக்கு, மேல் அடுக்கு மற்றும் சாத்தியமுள்ள மேல் அடுக்கு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- RBI ஆனது NBFC நிறுவனங்களில் உள்ள கீழடுக்கில் தாமதமாக செலுத்தப்படும் காலத்தைப் பொறுத்து வாராக் கடனின் வகைப்பாட்டை 180 நாட்களிலிருந்து 90 நாட்களாகக் குறைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- NBFC மீதான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைப் பொறுப்பானது இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934 என்ற சட்டத்தின் கீழ் RBI வசம் உள்ளது.

### *NBFC பற்றி*

- NBFC என்பது நிறுவனங்கள் சட்டம், 1956 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.
- NBFC கோரிக்கை வைப்பு நிதியை ஏற்றுக் கொள்ளாது.
- மேலும் இவை பணவழங்கீடு மற்றும் தீர்வு முறையின் ஒரு பகுதி அல்ல.


## மத்திய நிதிநிலை அறிக்கை கைபேசிச் செயலி

- மத்திய நிதியமைச்சர் அவர்கள் மத்திய நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக "மத்திய நிதிநிலை அறிக்கை கைபேசிச் செயலியை" தொடங்கி உள்ளார்.
- இந்தக் கைபேசிச் செயலியானது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களால் நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆவணங்களை எவ்வித தங்கு தடையுமின்றி அணுகுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- நிதிநிலை அறிக்கையானது தற்பொழுது முதன்முறையாக முழுவதுமாக காகிதப் பயன்பாடு அல்லாத வகையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.



## 2020 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடு (FDI)

- 2020 ஆம் ஆண்டில் சீனாவானது அந்நிய நேரடி முதலீட்டில் உலகின் முதல் இடத்தில் உள்ள நாடாக அமெரிக்காவை முந்தியுள்ளது.
- இது வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த ஐக்கிய நாடுகள் கருத்தரங்கின் ஒரு தரவாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டிஜிட்டல் பெருங்கடல்

- பெருங்கடல் மேலாண்மைத் தரவு குறித்த டிஜிட்டல் தளங்களில் இதுவே முதலாவது ஆகும்.
- இது பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்தியத் தேசிய மையம் (INCOIS - Indian National Centre for Oceanic Information Services) என்ற அமைப்பால் உருவாக்கப் பட்டது.
- INCOIS என்பது புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

## ருத்தினீயம் 106 வில்லை

- மும்பையின் பாபா அணு ஆராய்ச்சி மையமானது முதலாவது உள்நாட்டு ருத்தேனியம் 106 வில்லையை உருவாக்கியுள்ளது.
- கண் புற்றுநோய் சிகிச்சையின் மீதான சிகிச்சைக்காக இது உருவாக்கப்படும்.



## சஹாயக்-என்.ஜி

❖ இது ஒரு வான்குடை மிதவை (பாராசூட்) அமைப்பைக் கொண்டு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, காற்றில் இறங்கக் கூடிய முதலாவது கலன் ஆகும்.

❖ விமானத்திலிருந்துப் பாதுகாப்பாகப் பிரிக்கப்பட்ட பிறகு, பாராசூட்டானது சஹாயக்-என்.ஜி தண்ணீரில் பாதுகாப்பாக இறங்குவதைக் கட்டுப்படுத்தும்.

❖ இதைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு மற்றும் அவென்டெல் என்ற ஒரு தனியார் நிறுவனம் ஆகியவற்றால் வடிவமைக்கப் பட்டன.





## சார்ஸ் Cov-2ன் ஐக்கியப் பேரரசு திரிபு

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது (Indian Council of Medical Research - ICMR) ஐக்கியப் பேரரசில் கண்டுபிடிக்கப்பட்ட கொரானா வைரஸ் திரளின் மற்றொரு திரிபை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்து ஆய்வு செய்துள்ளது.

❖ மேலும் ICMR ஆனது எந்தவொரு நாடும் இதுவரை புதிய கொரானா வைரஸ் திரளை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்து ஆய்வு செய்யவில்லை என்று கூறியுள்ளது.

❖ இது முதன்முதலில் ஐக்கியப் பேரரசில் உருவாகியுள்ளது.



## பாட்னா வானிலை ஆய்வகம்

- இது ஆஸ்திரியாவின் ஜெனீவாவில் உள்ள உலக வானிலை அமைப்பிடமிருந்து நூற்றாண்டு நினைவு அனுசரிப்பு நிலையம் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது.
- பாட்னா வானிலை ஆய்வகம் ஆனது 1867 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்திய வானிலை அமைப்பானது முறையாக 1875 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

## மரத்தாலான செயற்கைக்கோள்கள்


- ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் 2023 ஆம் ஆண்டில் விண்ணிற்கு மரத்தாலான செயற்கைக் கோள்களைச் செலுத்த உள்ளனர்.
- இது விண்வெளி சிதைவுகளின் மீதான சிக்கலைத் தீர்க்கும்.
- பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையும் அனைத்து செயற்கைக் கோள்களும் எரிந்து சிறிய அலுமினா துகள்களை உருவாக்குகின்றன.
- இந்தச் சிதைவுகள் பல ஆண்டுகளாக மேல் வளிமண்டலத்தில் மிதக்கின்றன.
- ஆனால் இந்தப் புதிய செயற்கைக் கோள்கள் மரத்தால் ஆனவை ஆகும்.
- இவை பூமிக்குத் திரும்பும் போது தீங்கு விளைவிக்கும் பொருட்களை வளிமண்டலத்தில் வெளியிடாமல் எரிக்கும்.
- இந்தச் செயற்கைக் கோள்கள் தமது சேவையை முடித்த பின்பும் அல்லது அவை செயலிழந்து போனாலும் எந்தக் கழிவுகளையும் விண்வெளியில் விடாது.



## மாறுபக்க கொழுப்பு அளவுகள்

- சமீபத்தில் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது அனைத்து உண்ணத் தகுந்த சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள், காய்கறி கொழுப்புகள், வனஸ்பதி, செயற்கை வெண்ணெய், துரித உணவுப் பொருட்கள் மற்றும் கலப்பு கொழுப்புகள் ஆகியவை 3% அல்லது அதற்கும் குறைவான அளவில் மட்டுமே மாறுபக்கக் கொழுப்புகளையே கொண்டு இருக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.
- மேலும் இது மாறுபக்கக் கொழுப்பை 2022 ஆம் ஆண்டில் 2% ஆகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் இந்தியா முதன்முதலாக மாறுபக்க கொழுப்பு அளவை 10% அளவில் கொண்டு இருக்க வேண்டும் என்ற வரம்பிற்கு ஒரு ஆணையைப் பிறப்பித்து இருந்தது.

- மேலும் இது 2015 ஆம் ஆண்டில் 5% ஆகக் குறைக்கப் பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது 2023 ஆம் ஆண்டில் மாறுபக்கக் கொழுப்பின் உலகளாவிய அளவிலான ஒழிப்பிற்கு வேண்டி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.
- மாறுபக்க கொழுப்புகள் காய்கறி எண்ணெய்களின் ஹைட்ரஜனேற்ற முறைச் செயல்பாடுகளின் போது செயற்கையாக உருவாக்கப்படுகின்றன.
- இவை பகுதியளவில் ஹைட்ரஜனேற்றம் செய்யப்பட்ட காய்கறி எண்ணெய்களிலிருந்து உற்பத்தி செய்யப் படுகின்றன.
- இந்தப் பகுதியளவு ஹைட்ரஜனேற்றம் செய்யப்பட்ட எண்ணெய்யானது மாறுபக்க கொழுப்பிற்கு மிக முக்கிய ஒரு ஆதாரமாக விளங்குகின்றது.
- மாறுபக்க கொழுப்பின் நுகர்வானது இருதய நோய்களுக்கு வழிவகுக்கின்றது.
- உலகில் மாறுபக்க கொழுப்பு குறித்த அதிக சுமை காரணமாக மிக அதிக இருதய நோய் பாதிப்புகளை இந்தியா கொண்டுள்ளது.




## வளியடுக்கு வெப்பமயமாதல்

- திடீர் வளியடுக்கு வெப்பமயமாதல் நிகழ்வுவானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 5 அன்று நடந்தது.
- உலகின் அதிக பகுதிகளில் நிலவும் மிகவும் குளிரான வானிலைக்கு இதுவே காரணமாக இருக்கும்.
- இரண்டு சிறிய 'குழந்தை' சுழல்களாகப் பிரிந்துள்ள இந்த வகை துருவ சுழல் மிகவும் ஆபத்தான ஒரு வகையாகும்.
- துருவ சுழல் என்பது பூமியின் இரு துருவங்களையும் சுற்றியுள்ள குறைந்த அழுத்தம் மற்றும் குளிர்ந்த காற்று நிலவுகின்ற ஒரு பெரிய பகுதியாகும்.




## IN வரம்பு எல்லை

- ❖ இந்தியத் தேசிய இணையப் பரிவர்த்தனை நிறுவனமானது விருப்பமுள்ள 22 உத்தியோகப்பூர்வ இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் இலவச சர்வதேச மயப் படுத்தப்பட்ட வரம்பு எல்லையின் பெயரை (Internationalized Domain Name) வழங்குவதாக அறிவித்துள்ளது.
- ❖ முன்பதிவு செய்த ஒவ்வொருவரின் IN வரம்பு எல்லைக்கும் இது கிடைக்கும்.
- ❖ சர்வதேச மயப்படுத்தப் பட்ட வரம்பு எல்லையின் பெயரை ஏற்றுக் கொள்ளச் செய்வதையும் உள்ளூர் மொழி உள்ளடக்கத்தின் பெருக்கத்தையும் தூண்டுவதற்காக இந்தச் சலுகை உருவாக்கப் பட்டது.
- ❖ இந்தியாவின் தேசிய இணையப் பரிமாற்ற நிறுவனம் என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.
- ❖ இது 2003 ஆம் ஆண்டு முதல் இந்தியக் குடிமக்களுக்கு இணையத் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்காக வேண்டி செயல்படுகிறது.

**What is Domain Name:**

- A domain name is a **Web address**, such as **google.com**, that is linked to an IP address (which represents a physical point on the Internet). When someone types a domain name google.com into a Web browser, the requested Web page displays.
- **Domain Name** is an identification string controlling the realm on internet
- Ex:- .com , .net , .edu , .org etc.

## சகுனா நெல் (அரிசி) தொழில்நுட்ப முறை (SRT)

- ❖ இது பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் தாளடி எரிப்பை ஒழிக்க உதவும்.
- ❖ இந்த சுழிய உழுதல் முறை என்பது அறுவடை முறையில் ஒரு தனித்துவப் பாதுகாப்பு வேளாண் வகையாகும்.
- ❖ இந்த முறையானது நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்ட நிலங்களில் உழுதல், சேற்றுழவு, நாற்றுகளை மாற்றி நடுதல் ஆகியவை இல்லாமல் நெல் மற்றும் அது தொடர்புடைய சுழற்சிப் பயிர்களைப் பயிரிட உதவ இருக்கின்றது.
- ❖ SRT iron forma tool ஆனது முன்பே கணிக்கப்பட்ட இடைவெளிகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்க வேண்டிய பயிர்களின் எண்ணிக்கை என்ற அளவில் துல்லியமாக பயிர்களை நட உதவ இருக்கின்றது.

## காதி பிராக்ரித்திக் சாயம்




- ❖ மத்திய அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் "காதி பிராக்ரித்திக் சாயத்தை" வெளியிட்டு உள்ளார்.
- ❖ இது பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் பூஞ்சை எதிர்ப்புப் பண்புகளுடன் நச்சற்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு சாயமாகும்.
- ❖ இது மாட்டுச் சாணத்தை முக்கியப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இது ஒரு மணமற்ற மற்றும் விலை குறைந்த சாயமாகும்.
- ❖ இதே பிரிவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது பொருள் இதுவாகும்.
- ❖ காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையம் இந்த காதி பிராக்கிரித்திக் சாயத்தை உருவாக்கியுள்ளது.
- ❖ இது நெகிழி குழம்புச் சாயம் மற்றும் கலங்கிய சாயம் என 2 வடிவங்களில் கிடைக்கின்றது.
- ❖ இந்தச் சாயமானது பாதரசம், ஈயம், ஆர்செனிக், குரோமியம் மற்றும் கேட்மியம் போன்ற கடின உலோகங்கள் இல்லாமல் உள்ளது.

## சாகர் அன்வேஷிகா



- மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் அவர்கள் கடற்கரை ஆராய்ச்சி வாகனமான "சாகர் அன்வேஷிகாவை" சென்னைத் துறைமுகத்தில் தொடங்கி வைத்தார்.
- இந்த வாகனமானது சுற்றுச்சூழல் குறியீட்டை மேற்கொள்ளவும் கடற்கரையோரப் பகுதி மற்றும் கடல் பகுதியில் ஆழ அளவியலை மேற்கொள்வதற்காகவும் வேண்டி (நீருக்கடியில் உள்ளவற்றை ஆய்வு செய்ய) பயன்படுத்தப்பட உள்ளது.
- இது சென்னையில் அமைந்துள்ள தேசியக் கடல் தொழில்நுட்ப மையத்தினால் ஆராய்ச்சிப் பயன்பாடுகளுக்கு வேண்டிப் பயன்படுத்தப்பட உள்ளது.
- இது மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் உள்ள டைட்டாகார்க் வாகன் என்ற ஒரு நிறுவனத்தால் கட்டமைக்கப் பட்டுள்ளது.

## ஹீலியோ இயற்பியல் திட்டங்கள்

- நாசானது பூமிக்கு அருகில் விண்வெளிக் காலநிலையை இயக்கக் கூடிய சூரியன் மற்றும் சூரியக் குடும்பத்தை ஆய்வு செய்வதற்காக வேண்டி 2 ஹீலியோ இயற்பியல் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இவை ஒன்றிணைந்து, பின்வருவனவற்றிற்கு நாசாவின் பங்களிப்பானது சூரியன் மற்றும் பூமி ஆகியவை ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்ட அமைப்பு என்பதைப் புரிந்து கொள்ள உதவ இருக்கின்றது.
  - வலுவான புற ஊதா உயர் உற்பத்தி ஒளிக்கதிர் ஆய்வுத் தொலைநோக்கி எப்சிலோன் திட்டம் (Extreme Ultraviolet High - Throughput Spectroscopic Telescope Epsilon Mission - EUVSAT)
  - செறிவு மின்னோட்ட சீமன் உருவப் பட ஆய்வு (Electrojet Zeeman Imaging Explorer - EZIE)

***EUVST***

- ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனமானது இதரப் பங்காளர்களுடன் இணைந்து EUVST எப்சிலோன் திட்டத்தை (சூரிய ஒளி சி - EUVST திட்டம்) முன்னெடுக்கின்றது.
- இது 2026 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இது ஒரு சூரிய ஒளித் தொலைநோக்கியாகும்.

***EZIE***

- இது 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட உள்ளது.

- இது அரோராவை பூமியின் காந்த மண்டலத்துடன் இணைக்கும் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள மின்னோட்டங்களைப் பற்றி ஆய்வு செய்யவுள்ளது.
- காந்த மண்டலமானது சூரிய ஒளிச் செயல்பாடுகள் மற்றும் இதரக் கூறுகளுக்கு எதிர்வினையாற்றுகின்றது.

## எச் 3 ராக்கெட்

- ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (ஜாக்ஸா) 2021 ஆம் ஆண்டில் எச் 3 எனும் ராக்கெட்டை விண்ணில் செலுத்த உள்ளது.
- இது அடுத்த தலைமுறைப் போக்குவரத்துத் தொழில்நுட்பங்களுக்கு வழி வகுக்க உதவும்.

## அஸ்மி

- இந்தியாவின் முதல் உள்நாட்டு 9 மிமீ இயந்திர கைத் துப்பாக்கியை (பிஸ்டல்) இந்திய இராணுவம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன.
- இதற்கு 'அஸ்மி' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இதன் பொருள் சுய மரியாதை, கடின உழைப்பு மற்றும் பெருமை என்பதாகும்.
- புனேவில் உள்ள DRDO நிறுவனத்தின் ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மோவ் நகரில் உள்ள இராணுவக் காலாட்படை பயிற்சிப் பள்ளி ஆகியவை இணைந்து இந்தத் துப்பாக்கியை உருவாக்கி வடிவமைத்துள்ளன.



## ரக்சிதா அவசர ஊர்தி


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படை ஆகியவை இணைந்து சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட இருசக்கர வாகன அவசர ஊர்தியைத் (ரக்சிதா) தொடங்கி வைத்துள்ளன.



- இந்த இரு சக்கர வாகன அவசர ஊர்தியானது மருத்துவ அவசர நிலை நிகழ்வின் போதும் நக்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காயமடைந்த இராணுவப் படை வீரர்கள் மீதான அவசர கால மீட்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் வேண்டி தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த அவசர ஊர்திகள் ராயல் என்பீல்டு இரு சக்கர வாகனத்தில் பொருத்தப் பட்டு உள்ளன.
- சிவப்புப் பெருவழிப் பாதை என்பது நக்சலைட் மற்றும் மாவோயிஸ்ட் நடவடிக்கைகள் அதிகமாக உள்ள இந்தியாவின் கிழக்கு, மத்திய மற்றும் தெற்கில் உள்ள மாநிலங்களின் சில பகுதிகளாகும்.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரத்த ஓட்ட மடைமாற்றுக் குழாய்

- திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சி.எஸ்.ஐ.ஆரின் தேசிய விண்வெளி ஆய்வகங்கள் ஆகியவை இணைந்து இரத்த ஓட்டத்தின் திசையை மடைமாற்றும் ஒரு குழாயை உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளன.
- இது இந்தியாவில் தயாரிக்கப்படும் முதல் தயாரிப்பாகும்.



- இது இறக்குமதி செய்யப்படும் குழாய்களை விடவும் விலை குறைவானது ஆகும்.
- மூளையில் உள்ள தமனிகளின் அடைப்பிலிருந்து இரத்த ஓட்டத்தைத் திசை திருப்ப இது பயன்படுகிறது.
- இது இதயத்தில் உள்ள துளை வெகு சிறப்பாக குணமடைய உதவும் ஒரு சாதனமாகும்.

## அபெல் 370 விண்மீன் திரள்கள்


- நாசா சமீபத்தில் அபெல் 370 எனப்படும் ஒரு பெரிய விண்மீன் திரளின் படத்தைப் பகிர்ந்துள்ளது.
- இது பூமியிலிருந்து நான்கு பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஒரு விண்மீன் கூட்டமாகும்.
- இந்த விண்மீன் திரளானது செட்டஸ் எனப்படும் விண்மீன் தொகுப்பில் அமைந்து உள்ளது.
- இது நாசா விஞ்ஞானிகளால் தி டிராகன் என்று பெயரிடப்பட்டுள்ளது.

## குவாண்டம் கணினியியல் பயன்பாடுகள் ஆய்வகம்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது அமேசான் இணையச் சேவைகள் நிறுவனத்துடன் இணைந்து குவாண்டம் கணினியியல் பயன்பாடுகள் ஆய்வகத்தை உருவாக்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது அமேசானின் பிராக்கட் என்ற மேகக் கணினி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட குவாண்டம் கணினியியல் சேவையைத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் அணுக வழிவகை செய்கின்றது.

## வேர் மண்டல ஈரப்பதம்

- சமீபத்தில் நாசாவானது மண்ணின் முதல் 39 அங்குலங்கள் போன்ற வேர் மண்டலத்தில் மண் ஈரப்பதத்தின் கணிப்பை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, கொன்யா சமவெளியானது மிகக் குறைந்த வேர் மண்டல ஈரப்பதத்தைக் கொண்டுள்ளது.




- கொன்யா சமவெளிகள் துருக்கியில் அமைந்துள்ளன.
- இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப் படும் போது 2020 ஆம் ஆண்டில் 38% என்ற அளவிற்குக் குறைந்த மழைப் பொழிவைப் பெற்றுள்ளது.
- உலகில் மிகக் குறைந்த வேர் மண்டல ஈரப்பதத்தை இந்தப் பகுதி பெறுவதற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.
- இந்தக் கணிப்பானது GRACE-FO என்ற செயற்கைக் கோள் தரவின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## லாங்ஆப்ஸ் திட்டம்

- இது இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் இடையிலான ஒரு கூட்டுமுயற்சியாகும்.
- இந்த நடவடிக்கையின் கீழ், ஜப்பான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புகுஷிமா போன்ற பழைய அணுசக்தி நிலையங்களை அகற்ற புதிய மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பங்களை உருவாக்குவார்கள்.
- இது சுனாமி மற்றும் பூகம்பங்களால் கடுமையாக சேதமடைந்துள்ளது.
- இந்தத் திட்டம் நீண்ட ரோபோ கரங்களைப் பயன்படுத்துவதால் "லாங்ஆப்ஸ் திட்டம்" என்று அழைக்கப் படுகிறது.

## திடீர் இடையடுக்கு மண்டல வெப்பமாதல்

- தென்னிந்தியாவானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் ஜனவரி 17 வரை ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில் மிக அதிகப்படியான மழைப் பொழிவை (வழக்கத்தை விட 10 மடங்கு அதிகமாக) பெற்றுள்ளது.
- விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்தக் குளிர்கால மழைப் பொழிவானது ஆர்க்டிக் பகுதியில் ஏற்பட்ட திடீர் இடையடுக்கு மண்டல வெப்பமாதல் காரணமாக ஏற்பட்டு உள்ளது.
- திடீர் இடையடுக்கு மண்டல வெப்பமாதல் என்பது துருவ இடையடுக்கு வெப்ப நிலையானது 50 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கும் ஒரு நிகழ்வாகும்.
- இது வட அரைக் கோளத்தில் மேற்குக் காற்றுகளின் ஜெட் துருவக் காற்றோட்டமானது இயற்கையாக ஏற்படும் வானிலை அமைப்புகளினால் பாதிக்கப்படுவதற்கு முன்பாக ஏற்படுகின்றது.
- இது பொதுவாக துருவ சுழல் காற்று என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது துருவப் பகுதிகளில் ஏற்படும் குறைந்த காற்றழுத்தத்தின் ஒரு சுழற்சிக் கூம்பு ஆகும்.
- இது குளிர்காலத்தில் வலுவானதாக இருக்கும்.
- இது துருவ மற்றும் நடுப்பகுதி அட்சரேகைப் பகுதிகளுக்கிடையே நிலவும் வெப்ப நிலையில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக நிகழ்கின்றது.
- இது இடையடுக்கு மண்டலத்தில் சுழல்கின்றது.
- அடுக்கு மண்டலம் என்பது புவியின் மேற்பரப்பில் 10 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டர் உயரம் வரை பரவியுள்ள வளிமண்டல அடுக்காகும்.




## திறன்மிகு வான்வெளி எதிர்ப்பு ஆயுதம் (SAAW)

- சமீபத்தில் இந்துஸ்தான் விமான நிறுவனமானது ஹாக் விமானத்திலிருந்து SAAW என்ற ஆயுதத்தை (Smart Anti Airfield Weapon) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- SAAW ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப் பட்டு உள்ளது.
- SAAW ஆனது இந்திய ஹாக் என்ற ஒரு கப்பலிலிருந்து ஏவப்பட்ட முதலாவது திறன்மிகு ஆயுதமாகும்.
- இது நீண்ட வரம்பு கொண்ட துல்லிய வழிகாட்டலுடன் கூடிய ஒரு வான்வெளி எதிர்ப்பு ஆயுதமாகும்.
- பொதுவாக SAAW என்பது ஒரு குண்டாகும் (bomb).
- இந்திய அரசானது இந்தியக் கடற்படை மற்றும் இந்திய விமானப் படை ஆகிய படைகளுக்காக SAAW திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.




## NGC 2808

- இந்திய வானியற்பியல் நிறுவனமானது (Indian Institute of Astrophysics - IIA) நமது பால்வெளி மண்டலத்தின் மிகப்பெரிய உருண்டை வடிவத் தொகுப்பில் ஒரு அரிய வெப்பமான புற ஊதா நிற பிரகாசமிகு நட்சத்திரங்களைக் கண்டறிந்துள்ளது.
- இது UVIT என்ற தொலைநோக்கியின் உதவியுடன் கண்டறியப்பட்டுள்ளது.

- UVIT என்பது புறஊதா படத் தொலைநோக்கி (Ultra Violet Imaging Telescope) என்பதைக் குறிக்கின்றது.
- இது ஆஸ்ட்ரோசாட் என்ற செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டுள்ளது.
- ஆஸ்ட்ரோசாட் என்பது இந்தியாவின் முதலாவது பல்வேறு அலை நீளம் கொண்ட ஒரு வான்வெளி செயற்கை கோளாகும்.
- புற ஊதா படத் தொலைநோக்கி என்பது மூன்றில் ஒன்றாக உள்ள படத் தொழில் நுட்பமாகும்.
- இது புறஊதாவிற்கு அருகிலுள்ள, புலப்படக் கூடிய மற்றும் புற ஊதாவிற்கு அப்பால் உள்ள அலைநீளங்களை ஆய்வு செய்யும்.
- NGC 2808 ஆனது குறைந்தது 5 தலைமுறை நட்சத்திரங்களைக் கொண்டிருக்கும் என்று நம்பப் படுகின்றது.
- IIA என்பது இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

## பார்க்கர் சூரிய ஒளி ஆய்வுத் திட்டம்

- பார்க்கர் சூரிய ஆய்வு செயற்கைக் கோளானது 7வது முறையாக வெற்றிகரமாக சூரியனைச் சுழன்று வந்துள்ளது.
- இது சூரியனின் மேற்பரப்பிலிருந்து 8.4 மில்லியன் மைல்களை (13.5 மில்லியன் கிலோ மீட்டர்கள்) கடந்துள்ளது.
- நாசாவின் பார்க்கர் சூரிய ஆய்வுத் திட்டமானது சூரியனின் நமது புரிதல் குறித்து தனது தரவுகளை அளிக்கின்றது.
- இதற்கு முன்பு எந்தவொரு செயற்கைக் கோளும் சென்றிராத வகையில் சூரியனின் வளிமண்டலத்தின் உள்ளே சூரியனின் மேற்பரப்பிற்கு மிக நெருக்கமாக இது பயணிக்க உள்ளது.





## பிரபஞ்சத்தின் ஓசை

- சமீபத்தில் இது ஈர்ப்பு அலைகளுக்கான வட அமெரிக்க நானோ ஹெட்ஸ் எனும் ஒரு ஆய்வகத்தினால் கண்டறியப் பட்டது.
- விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, ஹம் எனும் ஓசை ஆனது ஈர்ப்பு அலைகளினால் உருவாக்கப் பட்டுள்ளது.

- இது ”பல்சர்” எனப்படும் செயல்பாடற்ற நட்சத்திரத்தின் ஒரு வகையிலிருந்து வெளி வருகின்றது.
- இந்த நட்சத்திரங்கள் பொதுவாக ஒரு வகை நியூட்ரான் நட்சத்திரங்களாகும்.
- முதன்முறையாக இந்த வகை ஓசையானது ஒரு பல்சர் மோதலினால் கேட்கப் படுகின்றது.
- இதற்கு முன்பு விஞ்ஞானிகள் இது போன்ற ஒரு ஓசையைக் கண்டுபிடித்துள்ளனர்.
- எனினும், அவை ஒரு கருந்துளை இணைப்பினால் ஏற்பட்டவையாகும்.
- கருந்துளை இணைப்பினால் ஏற்பட்ட இந்த வகை ஓசையானது லிகோ என்ற ஆய்வகத்தினால் கண்டறியப்பட்டது.

## டைட்டனில் கிராகன் மரே

- டைட்டனில் (சனிக் கோளின் சந்திரன்) உள்ள மிகப்பெரியக் கடலானது அதன் மையத்தில் ஆயிரம் அடி ஆழத்தில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- கிராகன் மரே என்பது டைட்டனின் வட துருவத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய திரவப் பகுதியாகும்.
- இது ஈத்தேன் மற்றும் மீத்தேன் ஆகியவற்றால் ஆனது.
- இது காசினி என்ற விண்கலத்தின் விண்வெளி ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.
- நாசா, இத்தாலிய விண்வெளி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்பின் கீழ் காசினி உருவாக்கப்பட்டது.
- டைட்டனைச் சுற்றி வந்த முதல் விண்கலம் காசினி ஆகும்.
- கிராகன் மரேவில் உள்ள ஒரு தீவுக்கு “மெய்டா இன்சுலா” என்று பெயரிடப் பட்டுள்ளது.
- பூமியைத் தவிர வேறு ஒரு கிரகத்தில் அல்லது சந்திரனில் பெயரிடப்பட்ட முதல் தீவு இதுவாகும்.



## மீர்கட் ரேடியோ அலை தொலைநோக்கி

- மீர்கட் என்ற ரேடியோ அலை தொலைநோக்கியானது தென்னாப்பிரிக்காவின் வடக்கு முனையில் அமைந்துள்ளது.
- இது சமீபத்தில் இரண்டு மாபெரும் ரேடியோ அலை விண்மீன் திரள்களைக் கண்டுபிடித்துள்ளது.
- MIGHTEE (MeerKAT International GHz Tiered Extragalactic Exploration) என்ற கணக்கெடுப்பின் கீழ் விண்மீன் திரள்கள் (Galaxy) கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- கண்டுபிடிக்கப்பட்ட இந்த விண்மீன் திரள்கள் இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட மற்றவற்றை விட 93 சதவீதம் பெரியவை.
- இறுதியான சதுர கிலோமீட்டர் பரப்பு (Square Kilometre Array - SKA) தொலைநோக்கியின் நான்கு முன்னோடிகளில் மீர்கட் தொலைநோக்கியும் ஒன்றாகும்.
- SKA என்பது தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் கட்டப்பட்ட, அரசுகளுக்கு இடையேயான ஒரு ரேடியோ அலை தொலைநோக்கித் திட்டமாகும்.
- SKA என்பது உலகின் ஒரு மிகப்பெரிய ரேடியோ அலை தொலைநோக்கியை உருவாக்குவதற்கான ஒரு சர்வதேச முயற்சியாகும்.

## நீலநிற தாரைக் கீற்று மின்னல்

- சர்வதேச விண்வெளி நிலையத்திலுள்ள விஞ்ஞானிகள் இடி மேகங்களிலிருந்து மேல் நோக்கி எழும்பி வரும் ஒரு பிரகாசமான நீலநிற மின்னல் அலையைக் கண்டறிந்து உள்ளனர்.
- இடியின் மேற்பகுதியிலிருந்து வரும் மின் உமிழ்வுகளின் காரணமாக இது போன்ற நீலநிறத் தாரைக் கீற்று மின்னல்களை நிலத்திலிருந்துக் கண்காணிப்பது மிகவும் கடினமாகும்.
- ஆனால், விண்வெளியிலிருந்து ஒருவர் இதை மிக எளிதாகக் காணலாம்.
- நீலநிறத் தாரைக் கீற்று மின்னல்கள் வழக்கமான மின்னல் உமிழ்வுகளாகத் தொடங்குகின்றன.
- இது ஒரு இடியில் மேற்புற நேர் முனைப் பகுதி மற்றும் அயனிப் பகுதிக்கு மேலே உள்ள எதிர்மறை மறைப்பு அடுக்கு ஆகியவற்றிற்கிடையே உருவாகின்றது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் மாநில அளவிலான நோய்ப் பிரச்சினை முன்னெடுப்பு

- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், இந்திய பொது சுகாதார அமைப்பு மற்றும் சுகாதார அளவுகள் & மதிப்பீடுகளுக்கான மையம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சி ஆகும்.
- இந்த அறிக்கையின் படி, 2019 ஆம் ஆண்டில் காற்று மாசுபாடானது 1.7 மில்லியன் என்ற எண்ணிக்கையில் இந்தியர்களைக் கொன்றுள்ளது.
- இது நாட்டில் நிகழும் மொத்த இறப்புகளில் 18% இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- கடந்த 20 ஆண்டுகளில் (1990-2019) வீட்டிற்குள்ளே ஏற்படும் காற்று மாசுபாடானது 64% அளவிற்கு குறைவான இறப்புகளுக்கு வழி வகுத்துள்ளது.
- ஆனால் திறந்தவெளிக் காற்று மாசுபாட்டின் மூலம் ஏற்படும் இறப்பானது இந்தக் காலக்கட்டத்தில் 115% என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- இதில் காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நுரையீரல் நோய்ப் பாதிப்பானது அதிகப் பங்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவானது காற்று மாசுபாட்டினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் முதிரா இறப்புகளின் காரணமாக 1.4% அளவிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ரூ.2,60,000 கோடி) இழந்துள்ளது.
- காற்று மாசுபாட்டின் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பானது ஒரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தின் அடிப்படையில் மத்திய இந்திய மாநிலங்கள் மற்றும் வட இந்திய மாநிலங்களில் அதிகமாக உள்ளது.
- இவை உத்தரப் பிரதேசம் (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 2.2%) மற்றும் பீகார் (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 2%) ஆகிய மாநிலங்களில் அதிகமாக உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் தில்லியானது காற்று மாசுபாட்டின் காரணமாக அதிகமான தலா தனிநபர் பொருளாதார இழப்பைப் பதிவு செய்துள்ளது, இதற்கு அடுத்த இடத்தில் ஹரியானா மாநிலம் உள்ளது.

## சர்வதேச நீலக் கொடிகள்

- கடற்கரைகளுக்கான நீலக் கொடி திட்டமானது சர்வதேச அளவில் அரசு சாரா மற்றும் இலாப நோக்கற்ற அமைப்பான சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை (Foundation for Environmental Education - FEE) என்ற அமைப்பால் இயக்கப்படுகிறது.
- இது இந்தியாவில் கப்பட் (கேரளா), சிவராஜ்பூர் (குஜராத்), கோக்லா (டையு), காசர்கோட் மற்றும் பாதுபித்ரி (கர்நாடகா), ருஷிகொண்டா (ஆந்திரப் பிரதேசம்), கோல்டன் (ஒடிசா) மற்றும் ராதாநகர் (அந்தமான் & நிக்கோபார் தீவுகள்) ஆகிய இடங்களில் ஏற்றப் பட்டது.
- இந்த 8 கடற்கரைகளுக்காக வேண்டி சர்வதேச நீலக் கொடிச் சான்றிதழை இந்தியா பெற்றுள்ளது.
- FEE என்ற அமைப்பு பிரான்சில் 1985 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது போன்று 560க்கும் மேற்பட்ட கடற்கரைகளைக் கொண்ட பட்டியலில் ஸ்பெயின் முதலிடத்தில் உள்ளது.




## பனிப் பேரூழிக் கால காண்டாமிருகம்

- ரஷ்யாவில் சைபீரியாவின் யாகுட்டியாவில் விஞ்ஞானிகளால் முழுமையாக சிதைவுறாத ஒரு காண்டாமிருகத்தின் உடல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது 20,000 முதல் 50,000 ஆண்டுகள் வரை பழமையானது என்று கூறப் படுகிறது.
- ரஷ்யாவில் பெர்மாஃப்ரோஸ்ட் (Permafrost) என்ற நிரந்தரப் பனி உருகுவதால் இது தெரிய வந்தது.
- ரஷ்யாவின் சுமார் 65% பகுதி நிரந்தரப் பனி அமைப்பால் சூழப்பட்டுள்ளது.
- பெர்மாஃப்ரோஸ்ட் என்பது குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்கு முற்றிலும் உறைந்து கிடைக்கும் ஒரு வகை நிலமாகும்.
- பெர்மாஃப்ரோஸ்ட் ஆனது வெப்பநிலை மற்றும் காலத்தின் அடிப்படையில் வரையறுக்கப் படுகிறது.
- பெர்மாஃப்ரோஸ்ட் ஆனது ரஷ்யா, கனடா மற்றும் அமெரிக்காவில் (அலாஸ்கா) காணப் படுகிறது.



## மதிகெட்டான் சோலை தேசியப் பூங்கா

- மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவைச் சுற்றியுள்ள 1 கிலோ மீட்டர் பகுதியானது சுற்றுச்சூழல் தாங்கு மண்டலமாக (Eco-Sensitive Zones - ESZ) அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிவிக்கையானது 1986 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் என்பதின் கீழ் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

- மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவானது கேரளாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதிகளில் அமைந்துள்ளது.
- இது ஏலக்காய் மலைப் பகுதியின் அசல் காடுகளின் எஞ்சியுள்ள கடைசிப் பகுதியாக விளங்குகின்றது.
- இது கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய 2 மாநிலங்களுடன் தனது எல்லை வரம்பைப் பகிர்ந்துள்ளது.
- நியூட்ரினோ ஆய்வு மையத்தின் கட்டமைப்பிற்காக குறிக்கப் பட்ட இந்த பகுதியானது தேனியில் உள்ளது.
- இது மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- இந்தப் பகுதியானது ESZ ஆக அறிவிக்கப் படவில்லை.
- ESZ அல்லது சுற்றுச்சூழலியல் ரீதியாக எளிதில் பாதிப்புக்குள்ளாக கூடிய பகுதிகள் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள், மற்றும் வனவிலங்குச் சரணாலயங்களைச் சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் வரம்பிற்குள் உள்ள பகுதிகளாகும்.
- ESZகளாக அறிவிக்கப் படுவதன் நோக்கம் இது போன்ற பகுதிகளைச் சுற்றிலும் ஏற்படும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அவற்றை மேலாண்மை செய்தல் ஆகியவற்றின் மூலம் அந்த பாதுகாக்கப்பட்ட பகுதிகளை "அதிர்ச்சியைத் தாங்கக் கூடிய பகுதிகளாக" உருவாக்கப் படுதல் என்பதாகும்.
- மேலும் இவை உயரிய பாதுகாப்புப் பகுதிகளிலிருந்து குறைந்த பாதுகாப்புப் பகுதிகளைப் பிரிக்கும் வகையில் ஒரு மாறுநிலை மண்டலமாக செயல்படுகின்றன.

## கோலார் இலை-மூக்கு வௌவால்

- இந்த வௌவால்களை அழிவிலிருந்து காப்பாற்ற கர்நாடக வனத்துறை முயற்சிகளை மேற்கொள்கிறது.
- இது இந்தியாவில் அதுவும் கர்நாடகாவின் ஒரே ஒரு குகையில் மட்டுமே காணப் படுகிறது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பிற்கான ஒன்றியமானது இந்த இனத்தின் நிலையை 'மிகவும் அருகி வரும் ஒரு உயிரினமாக' வரையறுத்துள்ளது.



## 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை

- இந்திய வானிலை ஆய்வு மையமானது (Indian Meteorological Department - IMD) 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை குறித்த தனது அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

- IMD ஆனது முக்கியமாக வட இந்தியப் பெருங்கடல் பகுதிகளுக்கு வானிலை முன்னறிவிப்புகளை வழங்குதல் மற்றும் புயல்களின் உருவாக்கம் குறித்தத் தகவல்களை அளிக்கின்றது.
- வட இந்தியப் பெருங்கடல் பகுதியானது மலாக்கா நீர்ச் சந்தி, அரபிக் கடல், வங்காள விரிகுடா மற்றும் பாரசீக வளைகுடா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- IMDயின் தகவல்படி, 2020 ஆம் ஆண்டானது 1901 ஆம் ஆண்டு முதல் மிகவும் வெப்பமான 8வது ஆண்டாகும்.
- கடந்த பத்தாண்டு காலத்தில், 2019-20 ஆண்டானது மிகுந்த வெப்பமான ஆண்டாகப் பதிவாகியது.
- உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை கடுமையான வானிலையின் காரணமாக மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட மாநிலங்களாகும்.
- 2020 ஆம் ஆண்டில் இடி மற்றும் மின்னல் காரணமாக 215 இறப்புகள் நிகழ்ந்துள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் வருடாந்திர சராசரி புவிமேற்பரப்பு வெப்ப நிலையானது வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.
- உலக வானிலை அமைப்பின்படி, உலக சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது +1.2ºC என்ற அளவில் அதிகமாகப் பதிவாகியது.
- தென்மேற்குப் பருவக் காற்றின் போது பெய்த மொத்த மழைப் பொழிவானது வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.
- 1961 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கிடையே கணக்கிடப்பட்ட நீண்ட கால சராசரி அளவு 109% ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் 5 புயல்கள் வட இந்தியப் பெருங்கடலில் உருவாகின.
- ஆம்பன், புரெவி, நிசர்கா, நிவர் மற்றும் கதி ஆகியவை அந்த 5 புயல்களாகும்.
- இந்தப் புயல்களில் நிசர்கா மற்றும் கதி ஆகியவை அரபிக் கடலிலும் மற்றவை வங்காள விரிகுடாவிலும் உருவாகின.

## மனித வனவிலங்கு மோதலைச் சமாளிப்பதற்கான ஆலோசனைக் குழு


- மனித-வனவிலங்கு மோதலை நிர்வகிப்பதற்கான ஆலோசனைக்கு வேண்டித் தேசிய வனவிலங்கு வாரியம் சமீபத்தில் தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழ் மனித-வனவிலங்கு மோதலைச் சமாளிக்க கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்க இது திட்டம் தீட்டியுள்ளது.
- தேசிய வனவிலங்கு வாரியத்தின் ஆலோசனையானது காட்டுப் பூனையை (Caracal) அருகி வரும் உயிரினங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.

## அண்டார்டிக் ஓசோன் துளை

- ஓசோன் அடுக்கில் மிக ஆழமான மற்றும் மிகப்பெரிய இடைவெளி கொண்டிருந்த ஒரு அண்டார்டிக் ஓசோன் துளையானது மூடப்பட்டுள்ளது.
- அண்டார்டிக்கின் மீது ஆண்டுதோறும் நிகழும் ஓசோன் துளையானது 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் நடுவில் இருந்து வேகமாக வளர்ந்து அக்டோபர் மாதத்தின் தொடக்கத்தில் பெரியதானது.
- இந்தத் துளையின் விரிவாக்கம் ஒரு வலுவான, நிலையான மற்றும் குளிர் துருவ சுழற்சி மற்றும் வளியடுக்கு மண்டலத்தில் மிகவும் குளிரான வெப்பநிலை

ஆகியவற்றால் இயக்கப் படுகிறது.


- இதே வானிலைக் காரணிகள் ஒரு சரித்திர நிகழ்வான 2020 ஆம் ஆண்டின் ஆர்க்டிக் ஓசோன் துளை அடைபடுதல் என்ற நிகழ்விற்கும் பங்களித்தன.
- ஒரு துருவ சுழற்சி என்பது துருவப் பிராந்தியங்களில், குறைந்த அழுத்தப் பகுதியான, மற்றும் குளிர்ந்த காற்றின் ஒரு பெரும் பரப்பாகும்.
- குளிர்காலத்தில், வட துருவத்தில் உள்ள துருவ சுழற்சி விரிவடைந்து, குளிர்ந்த காற்றை தெற்கு நோக்கி அனுப்புகிறது.
- ஓசோன் துளை என்பது ஓசோன் படலத்தை மெல்லியதாக மாற்றுவதாகும்.
- குளிர்ச்சியான வெப்பநிலையால் இது தனது அளவில் பலப்படுத்தப் படுகின்றது.
- இடை அடுக்கு மண்டலத்தில் வெப்பநிலை உயரத் தொடங்கும் போது, ஓசோன் விரிவடைதல் குறைந்து, துருவ சுழற்சியானது பலவீனமடைகிறது.
- மனிதனால் உருவாக்கப் பட்ட ரசாயனங்கள் இடை அடுக்கு மண்டலத்தில் உள்புகுந்து துருவ சுழற்சி உள்ளே குவிகின்றன.
- சூடான வெப்பநிலை ஆதிக்கம் செலுத்துவதால் இது தனது அளவில் சுருங்கத் தொடங்குகிறது.
- துருவ சுழலானது ஓசோன் அடுக்கின் வெப்பநிலையைக் குளிர்ச்சியாக வைத்து இருப்பதால் 2020 ஆண்டின் அண்டார்டிக் துளையானது வழக்கத்திற்கு மாறாக இருக்க வைக்கப் பட்டிருந்தது.




## இந்தியாவில் பறவைக் காய்ச்சல் திடீர்ப் பெருக்கம்

- இந்தியாவில் பறவைக் காய்ச்சலானது இமாச்சலப் பிரதேசத்தில் காட்டு வாத்துகள், கேரளாவில் வாத்துகள், ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசத்தில் காகங்கள் ஆகிய உயிரினங்களில் பதிவாகியுள்ளது.
- இது ஹரியானாவிலும் காணப்பட்டுள்ளது.
- பறவைக் காய்ச்சல் என்பது இன்ஃப்ளுயன்ஸா வகை ஏ வைரஸால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.
- இன்ஃப்ளுயன்ஸா வகை ஏ வைரஸில் பல வகைகள் உள்ளன.
- எச்5என்1 திரிபு ஆனது மனிதர்களுக்குத் தொற்றும் முதல் இன்ஃப்ளுயன்ஸா வைரஸ் ஆகும்.

- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, எச்5என்1 ஆனது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவதில்லை.
- இந்த வைரஸானது வெப்பத்தின் காரணமாக அதிக உணர்திறன் கொண்டுள்ளது மற்றும் சமையல் வெப்பநிலையில் இது இறக்கிறது.




## ஆசிய நீர்ப்பறவை கணக்கெடுப்பு

- இரண்டு நாள் நிகழ்வான ஆசிய நீர்ப்பறவை கணக்கெடுப்பு - 2020 ஆனது ஆந்திரப் பிரதேசத்தில் தொடங்கியது.
- இது 1987 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டு ஆண்டுதோறும் நடக்கும் ஒரு நிகழ்வாகும்.
- இதன் முக்கிய நோக்கம் நீர்ப்பறவைகள் மற்றும் சதுப்புநிலங்களின் நிலையைக் கண்காணிப்பதாகும்.
- இது ஆண்டுதோறும் பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் மற்றும் சர்வதேச சதுப்புநிலங்களுக்கான நிறுவனம் ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

## கராகல் (காட்டுப்பூனை)

- இது ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் காணப் படுகின்ற அளவில் ஓரளவு பெரியதாக இருக்கும் காட்டுப்பூனையாகும் (கராகல்).
- வனவிலங்குகளுக்கான தேசிய வாரியம் ஆனது இந்தியாவில் வனவிலங்கு தொடர்பான அனைத்து விவகாரங்களுக்குமான உச்ச அமைப்பாகும்.
- 2003 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இது பிரதமரின் தலைமையில் இயங்குகிறது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் என்ற துறையின் அமைச்சர் இவ்வாரியத்தின் துணைத் தலைவராக உள்ளார்.
- இது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப் பூர்வமான அமைப்பாகும்.
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளான தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் போன்றவற்றிற்கு (அரசாங்கத் திட்டங்கள் உட்பட) இது ஒப்புதல் அளிக்கிறது.



## "ஒரே கோள்" மாநாடு

- இந்த மாநாடானது இயற்கைப் பாதுகாப்பை முன்கூட்டியே மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "இயற்கைக்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுதல்" என்பதாகும்.
- இந்த மாநாட்டை ஐக்கிய நாடுகள், உலக வங்கி மற்றும் பிரான்சு ஆகியவை இணைந்து நடத்தின.
- 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புகழ்பெற்ற பாரிஸ் ஒப்பந்தத்திற்குப் பிறகு இதன் முதலாவது மாநாடானது 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.



## மேலாண்மை செயல்திறன் மதிப்பீடு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் அவர்கள் நாட்டில் உள்ள 146 தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் மீதான மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டை வெளியிட்டுள்ளார்.
- நாட்டில் மேற்கொள்ளப்படும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது அறிக்கை இது ஆகும்.

- தற்பொழுது இந்தியாவானது நாட்டின் மொத்தப் புவிப் பரப்பில் 5% பரப்பினை உள்ளடக்கக் கூடிய வகையில் 903 பாதுகாக்கப்பட்ட பகுதிகளைக் கொண்ட ஒரு வலையமைப்பினைக் கொண்டுள்ளது.
- மேற்கு வங்கத்தின் ஜல்தாபாரா தேசியப் பூங்கா மற்றும் ராய்கன்ஞ் வனவிலங்குச் சரணாலயம், இமாச்சலப் பிரதேசத்தின் பெரும் இமயமலை தேசியப் பூங்கா, தீர்த்தன் வனவிலங்குச் சரணாலயம் மற்றும் சாய்ஞ் வனவிலங்குச் சரணாலயம் ஆகியவை இந்தியாவில் உள்ள முதன்மையான 5 தேசியப் பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் ஆகும்.
- உத்தரப் பிரதேசத்தின் ஆமைகள் வனவிலங்குச் சரணாலயம் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் ஜெய் பிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம் ஆகியவை கடைசி இடங்களில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.

**Management Effectiveness Evaluation**

- Ministry for Environment, Forest and Climate Change released Management Effectiveness Evaluation (MEE) of 146 national parks and wildlife sanctuaries in the country.
- According to the survey, Tirthan Wildlife Sanctuary and Great Himalayan National Park in Himachal Pradesh have performed the best among the surveyed protected areas.
- The Turtle Wildlife Sanctuary in Uttar Pradesh was the worst performer.
- Under the Wildlife Protection Act, 1972 India had 903 formally designated Protected Areas with a total coverage of 1,65,012.6 square km.
- National Parks-101. Wildlife sanctuaries-553
- Conservation Reserves-86. Community reserves-163

## பூச்சிகளின் இறுதிநிலை அழிவுகள்

- சமீபத்தில் உலகம் முழுவதும் உள்ள பூச்சியியல் வல்லுநர்கள் தேசிய அறிவியல் கழகத்தின் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.
- பூச்சியியல் வல்லுநர்களின் படி, பூச்சிகளின் எண்ணிக்கையானது மிக வேகமாகக் குறைந்து வருகின்றது.
- பூமியானது ஒவ்வொரு ஆண்டும் தனது பூச்சி இனங்களில் 2% அளவினை இழந்து வருகின்றது.
- விஞ்ஞானிகள் இதனை "பூச்சிகளின் இறுதிநிலை அழிவுகள்" என்று பெயரிட்டுள்ளனர்.
- பூச்சிகளின் இறுதிநிலை அழிவுகளுக்கான முக்கியமான காரணங்கள் பின்வருமாறு
    - பூச்சிக் கொல்லிகள்
    - காலநிலை மாற்றம்
    - ஒலி மாசுபாடு
    - களைக் கொல்லி
    - ஊடுருவல் இனங்கள்
    - நிலப் பயன்பாட்டில் மாறுபாடுகள்
    - தீவிர வேளாண்மை

- பூச்சிகளின் எண்ணிக்கைக் குறைவானது வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளில் மிகவும் அதிகளவில் நிகழ்ந்து வருகின்றது.
- பூச்சிகளின் அழிவு விகிதமானது பறவைகள், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன ஆகியவற்றின் அழிவு விகிதத்தை விட 8 மடங்கு அதிகமானதாகும்.

## ஏற்றுக் கொள்ளல் இடைவெளி அறிக்கை 2020

- இது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது காலநிலை மாற்றத்திற்கான ஏற்றுக் கொள்ளலை முன்கூட்டியே மேற்கொள்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச முயற்சிகள் குறித்து அறிவிக்கின்றது.
- இந்த அறிக்கையானது வளரும் நாடுகளுக்கான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட வருடாந்திர மதிப்பானது 2050 ஆம் ஆண்டில் 4 மடங்காக இருக்கும் என்பதைக் கண்டறிந்துள்ளது.
- மாற்றியமைக்கப்பட்ட நிதியியல் இடைவெளி என்பது மாற்றியமைக்கப்பட்ட விலை மற்றும் மாற்றியமைக்கப்பட்ட நிதி ஆகியவற்றிற்கிடையேயான ஒரு வித்தியாசம் ஆகும்.

## மிகப்பெரிய பெரும் பசுமைச் சுவர் முன்னெடுப்பு

- சமீபத்தில் சஹேல் மற்றும் சகாராவிற்கான பெரும் பசுமைச் சுவர் முன்னெடுப்பானது பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான ஒரு கோள் மாநாட்டில் 14 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியைப் பெற்றுள்ளது.
- இது 8000 கிலோ மீட்டர் நீளம் மற்றும் 15 கிலோ மீட்டர் அகலம் கொண்ட அளவில் மரங்கள், தாவரத் திரள், புல்வெளிகள் மற்றும் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் 100 மில்லியன் ஆப்பிரிக்கர்களின் வாழ்க்கையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- இது ஆப்பிரிக்காவின் தலைமையிலான ஒரு முன்னெடுப்பாகும்.
- இது 17 ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் 15 இலக்குகளுக்குத் தனது பங்களிப்பைச் செலுத்த உள்ளது.
- இந்த திட்டமானது 2030 ஆம் ஆண்டில் 100 மில்லியன் ஹெக்டேர் அளவிலான சீரழிந்த நிலத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த முன்னெடுப்பிற்காக சாட், புர்கினோ பசோ, எரித்திரியா, எத்தியோப்பியா, மாலி, நைஜர், மௌரிட்டானியா, நைஜீரியா, சூடான், செனகல், டிஜிபௌட்டி ஆகிய நாடுகள் இடையீட்டு மண்டலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டில் நிலச் சமநிலையை அடைவதே பாலைவனமயமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

## மின்னணுக் கழிவு அறிக்கை

- இது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சமீபத்திய ஒரு அறிக்கையாகும்.
- 2018-19 ஆம் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப் பட்டதாக மதிப்பிடப்பட்ட மின்னணுக் கழிவுகளில் வெறும் 10 சதவீதத்தையும், 2017-18 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்டவற்றில் வெறும் 3.5 சதவீதத்தையும் இந்தியா சேகரித்துள்ளது.
- இந்தியா 2017-18 ஆம் ஆண்டில் 708,445 டன் மின்னணுக் கழிவுகளையும், 2018-19 ஆம் ஆண்டில் 771,215 டன் மின்னணுக் கழிவுகளையும் உற்பத்தி செய்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 32 சதவீதம் உயர்ந்து 1,014,961 டன்களாக உள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 என்ற விதிகளை வகுத்துள்ளது.
- இது விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் ஒரு பகுதியாக பழைய, பயன்படுத்த இயலாத மின்னணு தயாரிப்புகளைச் சேகரிப்பதற்கும் சேர்த்து உற்பத்தியாளர்களைப் பொறுப்பேற்க வைக்கிறது.


## மிகப்பெரிய 'மிதக்கும்' சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

- கொச்சின் சர்வதேச விமான நிலையமானது கேரள மாநிலத்தில் 452 கிலோவாட் திறன் கொண்ட, மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களில் ஒன்றை நிறுவி உள்ளது.
- இது செயற்கையான இரண்டு ஏரிகளுக்கு மேல் அமைக்கப் பட்டுள்ளது.
- இந்தச் செயற்கை ஏரிகளில் இருந்து வரும் நீரானது கோல்ஃப் மைதானத்தின் புல்வெளிகள் மீது நீர்ப்பாசனம் செய்ய பயன்படுத்தப் படுகிறது.
- கொச்சின் விமான நிலையமானது 2015 ஆம் ஆண்டில் சூரிய சக்தியில் இயங்கும் உலகின் முதல் விமான நிலையமாக உருவெடுத்தது.



## இந்தியாவில் முதல் தலைமுறை எத்தனால் உற்பத்தி

- உணவு மற்றும் பொது விநியோகத் துறையானது முந்தைய திட்டத்தை மாற்றி அமைத்து மாற்றியமைக்கப்பட்ட இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளது.
- மேலும் இது நிதி உதவியை விரிவுபடுத்துவதற்கும் சேர்த்துப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்திய உணவுக் கழகத்திலிருந்துப் பெறப்படும் மக்காச்சோளம் மற்றும் அரிசி அகியவற்றிலிருந்து எத்தனால் தயாரிக்க வேண்டிய வடிசாலைகளை அமைப்பதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.
- இது 2025 ஆம் ஆண்டில் 20% அளவிலான கலவையை அடைவதையும், நாட்டில் எத்தனால் உற்பத்தித் திறனின் தேவையைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எண்ணெய் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டி இறக்குமதியைச் சார்ந்து இருப்பதைக் குறைக்கும் நோக்கில் 2030 ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்குச் சுமார் 1,000 கோடி லிட்டர் எத்தனால் தேவைப்படும்.
- இந்தியா தற்போது 684 கோடி லிட்டர் அளவிற்கு எத்தனாலை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டு உள்ளது.
- முதலாம் தலைமுறை (1 ஜி) எத்தனால் ஆனது தானியங்கள் (அரிசி, கோதுமை, பார்லி, மக்காச் சோளம் மற்றும் சோளம்), கரும்பு மற்றும் சர்க்கரை வள்ளிக் கிழங்கு போன்றவற்றின் தீவனப் பொருட்களிலிருந்து தயாரிக்கப் படுகிறது.




- இந்த நடவடிக்கை சர்க்கரைத் துறை மற்றும் விவசாயிகளுக்குப் பயனுள்ளதாகக் கருதப் படுகிறது.
- 2016-17 ஆண்டைத் தவிர, 2010-11 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் சர்க்கரை அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது (அப்போது வறட்சி காரணமாக உற்பத்தி குறைந்தது).


## பங்கப்பூர் ஓநாய் சரணாலயம்

- கோப்பல் மாவட்டத்தில் பங்கப்பூரில் உள்ள வறண்ட நிலங்களில் முதல் முறையாக 'ஓநாய் சரணாலயம்' ஒன்றை அமைக்க கர்நாடக மாநில வனவிலங்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியச் சாம்பல் நிற ஓநாய் ஆனது மித வறட்சி மற்றும் வறட்சியான பகுதிகளில் வாழ்கின்ற சாம்பல் ஓநாய் என்ற ஒருவகை இனத்தைச் சேர்ந்ததாகும்.
- இது தக்காணப் பீடபூமியின் வறண்ட புல்வெளிப் பகுதிகளில் வாழ்கிறது.



## இயற்கைக்கான பன்னாட்டு நிதியத்தின் அறிக்கை

- இது காடுகள் அழிப்புத் தளங்களில் கடந்த 10 ஆண்டுகளில் 43 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் அழிக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் தென் கிழக்கு ஆசியா ஆகியவற்றில் உள்ள 29 தளங்கள் உலகக் காடுகள் இழப்பின் பாதியளவு இழப்பிற்கு காரணமாக உள்ளதைக் கண்டறிந்துள்ளது.
- பிரேசிலில் உள்ள அமேசான் மற்றும் செர்ராடோ , பொலிவியாவில் உள்ள அமேசான், பராகுவே, அர்ஜென்டினா, மடகாஸ்கர், இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா மற்றும் போர்னியோ மற்றும் மலேசியா ஆகியவை கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன.




## புதிய எறும்பு இனங்கள்

- அரிய வகையில் புதிய எறும்பு இனங்களானது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது அதே இனத்தின் மற்ற வகை இனங்களிலிருந்து உணர்விகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வேறுபடுகிறது.
- ஒசேரியா ஜோஷி (Ooceraea Joshii) என்ற வகையானது கேரளாவின் பெரியார் புலிகள் காப்பகத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- ஒசேரியா டெகாமேரா (Ooceraea decamera) என்ற வகையானது மதுரையில் உள்ள அழகர் கோவிலில் கண்டறியப்பட்டுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## புதிய அனுபவம் மண்டபம்


- பசவகல்யானில் 'புதிய அனுபவம் மண்டபத்திற்கு' கர்நாடக முதல்வர் பி.எஸ். எடியூரப்பா அடிக்கல் நாட்டினார்.
- இந்தக் கட்டிடமானது கல்யாணிச் சாளுக்கிய பாணியிலான கட்டிடக் கலைகளைப் பின்பற்றிக் கட்டப் பட்டுள்ளது.
- இது 12 ஆம் நூற்றாண்டின் கவிஞர் மற்றும் தத்துவஞானியான பசவண்ணா வாழ்ந்த ஒரு இடமாகும்.
- 12 ஆம் நூற்றாண்டில் கர்நாடகாவில் காலச்சூரி வம்சத்தின் மன்னர் முதலாம் பிஜ்ஜலாவின் காலத்தில் தத்துவஞானி பசவண்ணா வாழ்ந்துள்ளார்.
- வச்சனாஸ் என்று பிரபலமாக அறியப் படும் தனது கவிதைத் தொகுப்பு மூலம் சமூக விழிப்புணர்வைப் பரப்பியவர் பசவண்ணா ஆவார்.



## அருணாச்சலப் பிரதேசத்தில் வனேடியம்

- வனேடியம் என்ற உலோகமானது அருணாச்சலப் பிரதேசத்தின் டெபோ மற்றும் தமாங் பகுதியில் உள்ள பேலியோ - புரோடெரோசோயிக் கார்பனேசியன் பயலைட் என்ற வகை பாறைகளில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவில் வனேடியத்தின் மீதான ஒரு முதன்மை இருப்பின் முதலாவது பதிவு அறிக்கை இதுவாகும்.

- இந்த அகழாய்வானது இந்தியப் புவியியல் ஆய்வு அமைப்பினால் மேற்கொள்ளப் பட்டு உள்ளது.
- வனேடியம் என்பது எஃகு மற்றும் டைட்டானியத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் உயர்மதிப்பு கொண்ட ஒரு உலோகமாகும்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் காணப்படும் வனேடியத்தின் கனிமமயமாக்கல் என்பது புவியியல் ரீதியாக சீனாவின் வனேடியம் இருப்பான கார்பனேசிய ஷேல் வகை என்ற படிமத்தில் உள்ள"கல் நிலக்கரியை" போன்றதாகும்.
- இந்த உயர் வனேடியப் பொருளானது 16% வரை நிர்ணயிக்கப்பட்ட கரிமப் பொருளுடன் உள்ள கிராபைட்டுடன் தொடர்புடையதாகும்.
- வனேடியம் வகை எஃகு ஆனது பல்சக்கரங்கள் , மிதிவண்டிச் சட்டங்கள், அச்சுகள் மற்றும் இதர முக்கியப் பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- உலகில் உற்பத்தி செய்யப்படும் 85% வனேடியமானது எஃகு சேர்க்கைப் பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்தியாவானது வருடாந்திரமாக 3360 மெட்ரிக் டன்கள் என்ற அளவில் வனேடியத்தை நுகர்கின்றது.
- இது உலகினால் நுகரப்படும் வனேடியத்தின் அளவில் 4% அளவுடையதாகும்.
- சீனாவானது உலக வனேடியத்தில் 57% அளவை உற்பத்தி செய்து 44% வனேடியத்தை நுகர்கின்றது.
- சீனாவில் அதிக வனேடியம் இருப்புகள் உள்ளன, இதற்கு அடுத்து ரஷ்யா மற்றும் தென் ஆப்பிரிக்காவில் அதிக அளவில் வனேடியம் இருப்புகள் உள்ளன.




## கமலம் பழம்

- டிராகன் பழத்தை கமலம் என்று பெயர் மாற்ற குஜராத் மாநில அரசு முடிவு செய்து உள்ளது.
- கமலம் என்றால் சமஸ்கிருதத்தில் தாமரை என்று பொருள் .
- இந்தப் பழத்தின் வெளிப்புற வடிவம் தாமரை மலரைப் போன்று ஒத்திருப்பதால் இந்த மறுபெயரிடுதல் செய்யப் பட்டுள்ளது.



## ராட்டில் நீர் மின் திட்டம்

- ❖ மத்திய அமைச்சரவையானது ராட்டில் நீர் மின் திட்டத்திற்கான முதலீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ ராட்டில் நீர் மின் திட்டமானது ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் கிஸ்துவார் மாவட்டத்தில் உள்ள செனாப் நதியின் மீது அமைந்துள்ளது.




## மாநில நிறுவன தினம்

- ❖ 2021 ஆம் ஆண்டு ஜனவரி 21 அன்று, மேகாலயா, மணிப்பூர் மற்றும் திரிபுரா ஆகியவை தங்கள் மாநில நிறுவன தினத்தைக் கொண்டாடின.
- ❖ மூன்று மாநிலங்களும் 1972 ஆம் ஆண்டு ஜனவரி 21 அன்று தங்கள் மாநில அந்தஸ்தைப் பெற்றன.
- ❖ வடகிழக்குப் பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம், 1971 என்ற சட்டமானது இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தின் எல்லைகளை மாற்றியமைத்தது.
- ❖ முந்தைய சுதேச மாநிலங்களான திரிபுரா மற்றும் மணிப்பூர் 1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.
- ❖ 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 அன்று அசாம் மாநிலத்திற்குள்ளிருந்து ஒரு தன்னாட்சி மாநிலமாக மேகாலயா உருவாக்கப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பாவனா காந்த்

- 2021 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொள்ள இருக்கும் முதலாவது பெண் போர் விமானி பாவனா காந்த் ஆவார்.
- இவர் இந்திய விமானப் படையின் அணிவகுப்பின் ஒரு பகுதியாக கலந்து கொள்ள உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டில் இவர் போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தகுதி பெற்ற இந்தியாவின் முதலாவது பெண் போர் விமானியாக உருவெடுத்தார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களிடமிருந்து நாரி சக்தி புரஸ்கர் என்ற விருதைப் பெற்றார்.
- 2016 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையில் இணைக்கப்பட்ட முதல் பெண் போர் விமானிகளில் இவரும் ஒருவராவார்.




## நிலக்கரித் துறை அமைச்சரின் விருது

- மத்திய சுரங்கங்கள் மற்றும் நிலக்கரித் துறை அமைச்சரான பிரகலாத் ஜோஷி அவர்கள் நிலக்கரித் துறைக்கான அமைச்சரின் விருதை மத்திய நிலக்கரித் துறை நிறுவனத்திற்கு வழங்கினார்.
- இது இந்திய நிலக்கரி நிறுவனத்தின் (Coal India Ltd - CIL) கிளை நிறுவனமாகும். இதன் தலைமையகம் ஜார்க்கண்ட்டின் ராஞ்சியில் அமைந்துள்ளது.
- மேலும் அமைச்சர் நாட்டில் சிறந்த மற்றும் நீடித்த நிலக்கரிச் சுரங்கத்தை ஊக்குவித்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட இதே விருதினை CIL நிறுவனத்தின் கிளை நிறுவனங்களுக்கு வழங்கினார்.
- வடக்கு நிலக்கரி நிறுவனமானது நிலக்கரி உற்பத்தியில் தனது தலைசிறந்த செயல்பாட்டிற்காக இந்த விருதைப் பெற்றுள்ள அதே சமயம் தென் நிலக்கரி நிறுவனமானது நீடித்த சுரங்கத்திற்காக இந்த விருதைப் பெற்றுள்ளது.




## மைக்கேல் மற்றும் ஷெய்லா ஹெல்டு பரிசு 2021

- பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீவஸ்தவா, மற்றும் EPFL (Ecole Polytechnique Federale de Lausanne) நிறுவனத்தின் ஆடம் மார்கஸ் மற்றும் யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேனியல் ஆலன் ஸ்பீல்மேன் ஆகியோர் 2021 ஆம் ஆண்டின் மைக்கேல் மற்றும் ஷெய்லா ஹெல்டு பரிசைப் பெறுவார்கள்.
- நிகில் ஸ்ரீவஸ்தவா என்பவர் ஓர் இளம் இந்திய கணிதவியலாளர் ஆவார்.
- கடிசன்-சிங்கர் கணக்கு மற்றும் ராமானுஜன் வரைபடங்கள் குறித்த நீண்டகாலக் கேள்விகளுக்கு அவர் தீர்வு கண்டதற்காக இந்த விருது வழங்கப் படுகிறது.



### பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால புரஸ்கர் விருது 2021

- இது 21 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களின் 32 மாவட்டங்களைச் சேர்ந்த 32 குழந்தைகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- புத்தாக்கம், கல்வி, விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம், சமூகச் சேவை மற்றும் துணிச்சல் ஆகிய துறைகளில் தனித்துவமான திறன்களும் சிறப்பான சாதனைகளும் பெற்ற குழந்தைகளுக்கு இந்திய அரசால் இது வழங்கப்படுகிறது.
- இந்த விருது முன்னர் தனித்துவமான சாதனைக்கான தேசிய குழந்தை விருது என்று அழைக்கப் பட்டது.
- இது 18 வயதிற்கு உட்பட்ட தனித்துவமான சாதனையாளர்களுக்கு வழங்கப்படும் இந்தியாவின் மிக உயரிய விருதாகும்.
- பெண் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இந்த விருதுகளை 1996 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தியது.

## விளையாட்டுச் செய்திகள்

### சர்வதேசக் கிரிக்கெட் மன்றத்தின் (ICC) தசாப்தத்திற்கான கிரிக்கெட் மீதான உயர்நிலை விருது

- இந்திய அணியின் முன்னாள் தலைவரான எம்.எஸ். தோனி அவர்கள் இந்த விருதினை வென்றுள்ளார்.
- 2011 ஆம் ஆண்டில் நடந்த ஒரு டெஸ்ட் போட்டியின் போது ஒரு வினோதமான முறையில் ரன் அவுட் என அறிவிக்கப்பட்ட முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் வீரரான இயான் பெல் என்பவரைத் திரும்ப அழைத்து விளையாடச் சொன்னமைக்காக இவர் இந்த விருதை வென்றுள்ளார்.
- இந்தியாவின் விராட் கோலி தசாப்தத்திற்கான ICC ஆண்கள் கிரிக்கெட் வீரருக்கான சர் கேர்பீல்டு சோபர்ஸ் விருதினை வென்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் எல்லிஸ் பெரி தசாப்தத்திற்கான ICC பெண்கள் கிரிக்கெட் வீரருக்கான ராய்ச்செல் ஹேஹோ-பிளிண்ட் விருதை வென்றுள்ளார்.
- இதர விருதுகள் பின்வருமாறு
  - தசாப்தத்திற்கான ICC ஆண்கள் டெஸ்ட் போட்டி கிரிக்கெட் வீரர் – ஸ்டீவ் ஸ்மித் (ஆஸ்திரேலியா)
  - தசாப்தத்திற்கான ICC ஆண்கள் ஒருநாள் போட்டி கிரிக்கெட் வீரர் – விராட் கோலி (இந்தியா)
  - தசாப்தத்திற்கான ICC ஆண்கள் 20 இருபது போட்டி கிரிக்கெட் வீரர் – ரஷீத் கான் (ஆப்கானிஸ்தான்)
  - தசாப்தத்திற்கான ICC ஆண்கள் துணைநிலை கிரிக்கெட் வீரர் – கைல் கோயட்செர் (ஸ்காட்லாந்து)
  - தசாப்தத்திற்கான ICC பெண்கள் ஒருநாள் போட்டி கிரிக்கெட் வீரர் – எல்லிஸ் பெர்ரி (ஆஸ்திரேலியா)
  - தசாப்தத்திற்கான ICC பெண்கள் 20 இருபது போட்டி கிரிக்கெட் வீரர் - எல்லிஸ் பெர்ரி (ஆஸ்திரேலியா)

- தசாப்தத்திற்கான ICC பெண்கள் துணைநிலை கிரிக்கெட் வீரர் – காத்ரின் பிரைஸ் (ஸ்காட்லாந்து)




## ஏகலைவா புரஸ்கர்

- இந்தியப் பெண்கள் ஹாக்கி அணி வீராங்கனையான நமீதா தோபோ என்பவருக்கு அந்த விளையாட்டில் அவருடைய சிறந்தப் பங்களிப்பிற்காக புகழ்பெற்ற "ஏகலைவா புரஸ்கர்" என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை தேசிய மற்றும் சர்வதேச அளவில் தன்னுடைய சிறந்த பங்களிப்பிற்காக கௌரவிக்கப் பட்டுள்ளார்.
- இது 1993 ஆம் ஆண்டில் இம்பாக்ட் என்ற ஒரு நிறுவனத்தினால் நிறுவப் பட்டதாகும்.
- இது ஒரு நாட்டின் இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக வழங்கப் படுகின்றது.



## உலகக் கால்பந்து விருதுகள்

- போர்ச்சுக்கல் நாட்டின் கால்பந்து வீரரான கிறிஸ்டியனோ ரொனால்டோ அவர்கள் நூற்றாண்டின் சிறந்த வீரராகப் பட்டம் சூட்டப் பட்டுள்ளார்.
- துபாயில் நடைபெற்ற உலகக் கால்பந்து விருதுகள் வழங்கும் விழாவில் இந்த விருதானது அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- பேயர்ன் முனிச் என்ற அணியின் பயிற்சியாளரான ஹான்சி பிளிக் என்பவர் ஆண்டின் சிறந்த பயிற்சியாளர் என்ற விருதைப் பெற்றுள்ளார்.
- மேலும் பேயர்ன் முனிச் ஆண்டின் சிறந்த சங்கம் என்ற விருதையும் பெற்றுள்ளது.

- ரியல் மேட்ரிட் நூற்றாண்டின் சிறந்த சங்கம் என்ற விருதைப் பெற்றுள்ளது.
- மான்செஸ்டர் சிட்டி என்ற சங்கத்தின் மேலாளரான பெப் கார்டியாலோ நூற்றாண்டின் சிறந்தப் பயிற்சியாளர் என்ற விருதை வென்றுள்ளார்.




## டி நடராஜன்

- ஆஸ்திரேலியாவில் ஒரே சுற்றுப் பயணத்தின் போது கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களிலும் சர்வதேச அளவில் அறிமுகமான முதல் இந்தியக் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை நடராஜன் பெற்று உள்ளார்.
- தமிழ்நாட்டு வீரர் ஆஸ்திரேலியாவிற்கு ஒரு பயிற்சிப் பந்து வீச்சாளராக சென்றார்.
- இவர் தமிழ்நாட்டில் சேலம் அருகே உள்ள சின்னப்பம்பட்டி என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார்.




## முதலாவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள்

- கேலோ இந்தியா ஜான்ஸ்கர் குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் திருவிழாவானது லடாக்கில் இருக்கும் கார்கில் மாவட்டத்தில் உள்ள ஜான்ஸ்கரில் தொடங்கியது.

- இது லடாக்கில் குளிர்கால சுற்றுலாப் பயணிகளுக்கான ஒரு இடமாக ஜான்ஸ்கரை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பனி ஹாக்கிப் போட்டிக்கான ஒரு மையமாக லடாக்கை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## கிறிஸ்டியானோ ரொனால்டோ


- கால்பந்து வரலாற்றில் தற்போது இவர் ஒரு கிளப் சார்பாகவும் ஒரு நாட்டின் சார்பாகவும் அதிக கோல் அடித்தவர் எனும் சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் ஒரு போர்த்துக்கீசியக் கால்பந்து வீரராவார்.
- இவர் ஐந்து முறை பேலன் டி'ஓர் என்ற விருதை வென்றவர் ஆவார்.
- சூப்பர் இத்தாலியக் கோப்பையில் ஜுவென்டஸ் கிளப் சார்பாக தனது 760வது கோலை இவர் அடித்தார்.
- முன்னதாக பிரேசிலின் பீலே 757 கோல்களை அடித்திருந்தார்.
- ஆஸ்திரிய-செக் நாட்டின் ஜாம்பவான் ஜோசப் பிகான் 759 கோல்களை அடித்து உள்ளார்.



# முக்கிய தினங்கள்

## உலக பார்வையற்றோர் எழுத்து முறை (பிரெய்லி) தினம் – ஜனவரி 04

- பார்வையற்றோர் எழுத்து முறையைக் கண்டுபிடித்தவரான லூயிஸ் பிரெய்லி அவர்கள் பிரான்ஸில் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 04 அன்று பிறந்தார்.
- இந்தக் கண்டுபிடிப்பிற்கு இவருடையப் பங்களிப்பை அனுசரிக்கும் விதமாகவும் இவரை நினைவு கூறும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் இவருடைய பிறந்த தினமான ஜனவரி 04 ஆனது உலக பிரெய்லி தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இது பார்வையற்றோர் மற்றும் பகுதியளவு பார்வையுடைய நபர்களுக்கான மனித உரிமைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கான ஒரு தகவல் தொடர்பு முறையாக பிரெய்லியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் பட்டு வருகின்றது.




## போரினால் ஆதரவற்றோர் ஆனவர்களுக்கான உலக தினம் – ஜனவரி 06

- இது உலக அளவில் வளர்ந்து வரும் மனித நேய மற்றும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள போரினால் ஆதரவற்றோர் ஆனவர்களின் பிரச்சினைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போரினால் ஆதரவற்றோர் ஆனவர்களின் உலக தினமானது 'SOS Enfants en Detresses' என்ற ஒரு பிரெஞ்சு அமைப்பினால் தொடங்கப் பட்டது.
- இரண்டாம் உலகப் போரானது போலந்தில் 3,00,000 ஆதரவற்றோர் மற்றும் யுகோஸ்லேவியாவில் 2,00,000 ஆதரவற்றோர் என்று ஐரோப்பாவில் மட்டும் மில்லியன் கணக்கில் ஆதரவற்றோர்களை உருவாக்கியுள்ளது.




## மராத்தி பத்திரிகை நாள் - ஜனவரி 6

- 1832 ஆம் ஆண்டின் ஜனவரி 6 ஆம் தேதி அன்று பால்சாஸ்திரி ஜம்பேகர் அவர்கள் 'தர்பன்' எனும் முதல் செய்தித் தாளைத் தொடங்கினார்.
- மேலும் இதுவே மராத்தி மொழியில் வெளி வந்த முதல் செய்தித்தாள் ஆகும்.
- ஜம்பேகர் அவர்கள் மராத்தி பத்திரிகையியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- மேலும் 1812 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதியன்றே மகாராஷ்டிரா மாநிலத்தின் கொங்கன் பகுதியில் இவர் பிறந்தார்.

## உலக இந்தி தினம் - ஜனவரி 10




- முதல் உலக இந்தி தினம் முதன்முதலில் 2006 ஆம் ஆண்டில் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் அனுசரிக்கப் பட்டது.

- இது உலகின் முதல் இந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.
- அது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் 1975 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்தி மொழி சமஸ்கிருதத்திலிருந்து உருவானது, மேலும் அது தேவநாகரி எழுத்தில் எழுதப் பட்டுள்ளது.
- உலகின் நான்காவது அதிகம் பேசப் படும் மொழிகளில் இந்தியும் ஒன்றாகும்.
- இந்தி எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் தத்துவஞானிகள் ஆகியோரைக் கௌரவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 14 ஆம் தேதி அன்று இந்தி திவாஸ் கொண்டாடப் படுகிறது.
- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அரசியலமைப்பு நிர்ணயச் சபையானது தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட இந்தி மொழியை அதிகாரப் பூர்வ மொழியாக ஏற்றுக் கொண்டதைக் குறிக்க இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.


## தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம்

- இது இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 ஆம் தேதி ஜனவரி 17 ஆம் தேதி வரை அனுசரிக்கப் படுகின்றது.




- இது சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் சாலை விபத்துகளைக் குறைப்பதற்காகவும் உயிரைக் காப்பதற்காகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவானது 32வது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்தை அனுசரிக்கின்றது.
- முதன்முதலில் 1989 ஆண்டில் தேசிய சாலைப் பாதுகாப்பு வார விழிப்புணர்வானது அனுசரிக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் 32வது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்தின் கருத்துரு, "உனது குடும்பத்தைக் காப்பதற்காக வேண்டி பாதுகாப்பாக இரு" என்பதாகும்.
- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆணையமானது ஒவ்வொரு ஆண்டும் தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்தை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்துடன் இணைந்து அனுசரிக்கின்றது.

## தேசிய இளைஞர் தினம் – ஜனவரி 12




- ❖ இது சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “தேசத்தைக் கட்டமைப்பதற்காக இளைஞர் சக்தியை வலுப்படுத்துதல்” என்பதாகும்.
- ❖ இவர் 1863 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் நரேந்திரநாத் தத்தா என்ற பெயரில் பிறந்தார்.
- ❖ 1985 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ விவேகானந்தர் ராமகிருஷ்ண மடம் மற்றும் இராமகிருஷ்ணா இயக்கத்தைத் தொடங்கினார்.
- ❖ இவர் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் உலக மதங்களின் நாடாளுமன்றத்தில் இந்துத்துவத்தை அறிமுகப் படுத்தினார்.
- ❖ “அமெரிக்காவின் சகோதர சகோதரிகளே” என்ற இவருடைய உரைக்காக இவர் வெகு சிறப்பாக அறியப்படுகின்றார்.

## முன்னாள் ஆயுதப் படை வீரர்கள் தினம் – ஜனவரி 14

- ❖ இத்தினமானது 2017 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- ❖ இத்தினமானது முன்னாள் ஆயுதப் படை வீரர்களின் உயிர்த் தியாகத்தை அனுசரிப்பதற்காகவும் மேலும் இந்திய ஆயுதப் படையில் பணியாற்றியவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இத்தினமானது ஆரம்பத்தில் தற்காலிக போர் நிறுத்த தினம் எனப்பட்டது.
- ❖ தற்காலிகப் போர் நிறுத்தத் தினமானது உலகம் முழுவதும் நவம்பர் 11 அன்று கொண்டாடப் படுகின்றது.
- ❖ முதலாவது தற்காலிகப் போர் நிறுத்தத் தினமானது முதலாம் உலகப் போர் நிறைவு பெற்ற தினத்தைக் குறிப்பதற்காக 1919 ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று அனுசரிக்கப் பட்டது.
- ❖ எனினும், இந்தியாவில் இத்தினமானது 1926 ஆம் ஆண்டில் காங்கிரஸினால் நிறைவேற்றப் பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.




## முதலாவது தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் 2021

- தேசிய சாலைப் பாதுகாப்பு மாதமானது இந்தியாவில் சாலை விபத்துகளைக் குறைப்பதற்காகவும் சாலைப் பாதுகாப்பு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- இது ஜனவரி 18 ஆம் தேதியிலிருந்து பிப்ரவரி 17 ஆம் தேதி வரை கடைபிடிக்கப்பட உள்ளது.
- இது தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தின் முதலாவது பதிப்பாகும்.
- இது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்திற்கு மாற்றாகக் கடைபிடிக்கப் படுகின்றது.




## தேசிய இளைஞர் திருவிழா

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது நாட்டில் இந்த மாதத்தின் 12 ஆம் தேதியிலிருந்து ஒரு வார கால அளவுள்ள தேசிய இளைஞர் திருவிழாவை நடத்தியது.
- ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திருவிழாவானது இளைஞர்களின் சக்தியாக கருதப் படுகின்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக வேண்டி கொண்டாடப் படுகின்றது.

- இது தேசிய ஒருங்கிணைப்பு முகாம் என்ற திட்டத்தின் கீழ் ஒரு முக்கியச் செயல்பாடாக 1995 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- நேரு யுவ கேந்திர சங்கதன் மற்றும் தேசிய சேவைத் திட்டத்துடன் இணைந்து இந்திய அரசானது இந்தத் திருவிழாவை நடத்துகின்றது.




## இராணுவ தினம் – ஜனவரி 15

- இது அப்போதைய தலைமைத் தளபதியான 5 நட்சத்திரத் தர வரிசையைக் கொண்ட கே எம் கரியப்பாவை அங்கீகரிப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- இவர் 1949 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று தளபதியான சர் பிரான்சிஸ் பட்சர் என்பவரிடமிருந்து இந்திய இராணுவத்தின் முதலாவது தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இந்தியாவின் கடைசி ஆங்கிலேயத் தலைமைத் தளபதி பட்சர் என்பவராவார்.
- கரியப்பா 1947 ஆம் ஆண்டுப் போரில் இந்தியப் படைகள் வெற்றி பெற்றிடச் செய்தார்.
- 5 நட்சத்திரத் தரவரிசை கொண்ட தளபதி என்ற பட்டத்தை வைத்திருந்த 2 இந்திய ராணுவ அதிகாரிகளில் இவரும் ஒருவராவார்.
- இதில் மற்றொருவர் தளபதி (Field Marshal) சாம் மானேக்சா என்பவராவார்.



### 43 வது கொக்போரோக் நாள் - ஜனவரி 19

- கொக்போரோக் என்ற மொழியின் வளர்ச்சியைக் கொண்டாட வேண்டி திரிபுராவில் இது கொண்டாடப் படுகிறது.
- கொக்போரோக் மொழியானது திரிபுராவின் அதிகாரப்பூர்வ மொழியாகும்.
- இதே நாளில் கொக்போரோக் மொழியானது 1979 ஆம் ஆண்டில் அம்மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.
- முன்னாள் முதலமைச்சர் நிருபன் சக்ரவர்த்தி தலைமையிலான அம்மாநிலத்தின் முதல் இடது முன்னணி அரசாங்கம் இதை மேற்கொண்டது.




### தேசியப் பெண் குழந்தைகள் தினம் – ஜனவரி 24


- இது 2008 ஆம் ஆண்டில் இந்திய அரசு மற்றும் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது குறைந்து வரும் குழந்தைப் பாலின விகிதத்தின் பிரச்சினை குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் பெண் குழந்தைகள் வாழ்வதற்கு உகந்த நேர்மறையான சுற்றுச்சூழலை உருவாக்கும் நோக்குடனும் வேண்டி நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.



- இந்தியாவானது 2021 ஆம் ஆண்டில் ஜனவரி 21 ஆம் தேதியில் தொடங்கி ஜனவரி 26 ஆம் தேதி வரை தேசியப் பெண் குழந்தைகள் வாரத்தை அனுசரிக்கின்றது.
- பஞ்சாப் மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தை "பெண் குழந்தைகள் மாதமாக" அறிவித்துள்ளது.
- இதன் கருத்துரு, "பெண் குழந்தைகளுக்காக கல்வியை மாற்றியமைத்தல்" என்பது ஆகும்.

## சர்வதேசக் கல்வி தினம் – ஜனவரி 24

- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 03 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்தை சர்வதேசக் கல்வி தினமாக அறிவிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இதன் கருத்துரு, "கோவிட்-19 தலைமுறைக்கானக் கல்வியை மீட்டெடுத்தல் மற்றும் புத்துயிர் பெறச் செய்தல்" என்பதாகும்.
- நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு – 4 ஆனது 2030 ஆம் ஆண்டில் "அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரம் கொண்ட கல்வியை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்புகளை ஊக்குவித்தல்" என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குழந்தை உரிமைகள் குறித்த ஐ.நா. ஒப்பந்தமானது 1989 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## தேசிய வாக்காளர்கள் தினம் – ஜனவரி 25

- இது 1950 ஆம் ஆண்டில் இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட தினத்தைக் குறிப்பதற்காக முதன்முறையாக 2011 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று தொடங்கப் பட்டது.
- இத்தினத்திற்கான கருத்துரு, "நமது வாக்காளர்களை அதிகாரமளிக்கப்பட்டவர்களாக, விழிப்புடன் உள்ளவர்களாக, பாதுகாப்பான மற்றும் தகவல் தெரிந்தவர்களாக மாற்றுதல்" என்பதாகும்.
- இந்தியாவின் அப்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் சுகுமார் சென் என்பவற் ஆவார்.




## தேசிய சுற்றுலா தினம் – ஜனவரி 25

- இந்தியாவின் தேசிய சுற்றுலா தினமானது ஜனவரி 25 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- மேலும் இந்தியாவானது ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா தின (செப்டம்பர் 27) அனுசரிப்பிலும் கலந்து கொள்கின்றது.

## சர்வதேச சுங்க தினம் – ஜனவரி 26




- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சுங்கங்கள் நிலையான விநியோகச் சங்கிலிக்காக மீட்டெடுப்பு, புதுப்பித்தல் மற்றும் தாங்கு தன்மையை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- இது உலக சுங்க அமைப்பினால் அனுசரிக்கப்படுகின்றது.
- இவ்வமைப்பானது சர்வதேச சங்கங்கள் மற்றும் சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டு விவகாரங்களுக்காக என்று பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரே சர்வதேச அமைப்பாகும்.

## 71வது உத்தரப் பிரதேச நாள் - ஜனவரி 24

- உத்தரப் பிரதேச தினக் கொண்டாட்டமானது 2021 ஆம் ஆண்டில் ஜனவரி 24 முதல் ஜனவரி 26 வரை நடைபெற்றது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உத்தரப் பிரதேச தினத்தின் கருத்துரு 'சுயச் சார்பு கொண்ட உத்தரப் பிரதேசம், பெண்கள், இளம் விவசாயிகள் மற்றும் அனைவருக்குமான வளர்ச்சி என்பதற்கான மரியாதை' (Respect for self-reliant Uttar Pradesh, women young farmers, development of all) என்பதாகும்.

- இந்த நிகழ்வில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அவர்கள் 'உதயம் சாரதி' என்ற செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இது ஒரு மாவட்டம் ஒரு பொருள் தயாரிப்பு (One District One Product) என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் உத்தரப் பிரதேச மாநிலம் மறு பெயரிடப் பட்டது.
- முன்னதாக இது ஐக்கிய மாகாணம் (United Provinces) என்று அழைக்கப்பட்டது.





## உலக இனப்படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27

- இரண்டாம் உலகப் போரின் போது நிகழ்ந்த பேரழிவின் சோகத்தை நினைவு கூரும் வகையில் ஜனவரி 27 அன்று இது ஒரு சர்வதேச நினைவு நாளாக அனுசரிக்கப் படுகிறது.
- இது 1945 ஆம் ஆண்டு ஜனவரி 27, அன்று சோவியத் துருப்புக்களால் ஆஷ்விட்ஸ்-பிர்கெனோவில் அமைந்த நாஜி படையின் அடிமை மற்றும் படுகொலை முகாமை விடுவித்த நாளைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "இருளில் வெளிச்சமாக இருங்கள்" என்பதாகும்.
- முதல் முறையாக, இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையும் யுனெஸ்கோவும் இணைந்து ஒரு தொடர்ச்சியான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவுள்ளது.



## உலக தொழு நோய் தினம் – ஜனவரி 31




- இது சர்வதேச அளவில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிறன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இது தொழுநோயின் பொது விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தொழுநோயானது ஹன்சென் நோய் (Hansen’s disease) என்றும் அழைக்கப்படுகின்றது.
- இந்தியாவானது அதிக அளவில் இந்த நோய் குறித்த பாதிப்புகளைக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★